DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1376
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday August 19, 2022

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

## 10 Special Women in Toronto were honored, in celebration of Her Majesty Queen Elizabeth II's Platinum Jubilee

# ரொறன்ரோ மாநகரில் மேன்மை தங்கிய இங்கிலாந்து மகாராணியின் 70வது ஆண்டு சேவையை முன்னிட்டு பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற 10 விசேட பெண்மணிகள்





கடந்த 15-08-2022 திங்கட்கிழமையன்று கனடா ரொறன்ரோ மாநகரில் மேன்மை தங்கிய இங்கிலாந்து மகாராணியின் 70வது ஆண்டு சேவையை முன்னிட்டு பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற 10 விசேட பெண்மணிகளுக்கு விசேட விருதுகள் மற்றும் பதக்கம் ஆகியன வழங்கப்பெற்றன.

இங்கே காணப்படும் படத்தில் விழா மேடையில் சிறப்பு விருந்தினர்கள். வைபவத்தை ஏற்பாடு செய்த வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமார் அவர்கள் மற்றும் கௌரவிக்கப்பெற்ற 10 விசேட பெண்மணிகள் ஆகியோர் காணப்படுகின்றனர். (உள்ளே விபரமான செய்தி 14ம் பக்கத்தில்)

# அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புக் கௌரவத்தை வழங்கிய கனடா வாழ் வர்த்தக மற்றும் கலைத்துறை நண்பர்கள்



கனடாவில் கடந்த 12-08-2022 வெள்ளிக்கிழமையன்று தமிழோசை சினிமீடியா நிறுவனம் நடத்திய அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்களின் "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" என்னும் நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது்.

இங்கே காணப்படும் படத்தில் நூல்வெளியீட்டு விழாவில் அவருக்கான கௌரவத்தை வழங்கிய கனடா வாழ் வர்த்தக மற்றும் கலைத்துறை அன்பர்ளான திருவாளர்கள் சங்கர் நல்லதம்பி. ராஜ் சுப்ராயம்.. "தமிழோசை ஶ்ரீரீஸ்கந்தா. அக்ணி எஸ். ஏ. சுரேஸ் ஆகியோரோடு ஐரோப்பிய அறிவிப்பாளர் திலகம் எஸ். கே. ராஜன் நிற்பதைக் காணலாம்.

(படம்: நினைவுகள்.கொம் கனா ஆறுமுகம்) **(LJI. ARJUNE)**

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

# LOOKING FOR YOUR *Dream House?*



**Call SEYON CHANDRAKUMAR**

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## வேலை வாய்ப்பு

**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை. **Keele and Hwy 7**
**(1) 7am - 3pm**
**(2) 11pm - 7am**
ஆண், பெண் இருபாலர்களும் தேவை.
தொடர்பு: ஷங்கர்
**416-305-0264**

## Be Your Own Boss


Markham / McNicoll
Units for sale at Majestic City Mall.
Very busy Tamil mall.
Corner 2 units together for sale.
Possible for men/ladies salon or any other business.
call FILONA:
(647) 606-1009

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice
RAJAN: 416-464-2415



## லக்ஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

## வேலை வாய்ப்பு

**Downtown Toronto** வில் **Church & Wellesley** சந்திப்பிற்கு அருகில் **Cooks Dish Washers/ Kitchen Helpers** ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. ஆட்கள் உடனடியாகத் தேவை. **Part-Time or Full Time** விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
416-414-2241

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
**VARUNAN: 416-894-6244**

## Basement for Rent

**Pickering** நகரில் **Whites/Sheppard** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் **Walk-Out Basement Separate Entrance** உடன் வாடகைக்கு உண்டு. ஒரு அறையும் 'டென்' ஒன்றும் உள்ளன. பாடசாலைகள், பஸ் வசதி மற்றும் அனைத்தும் அருகில் உள்ளன. **1 Parking** வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு- **905 492 0565**
அல்லது **647 296 6102 (WhatsApp)**

## Bakery உதவியாளர்கள் தேவை

Oshawa நகரில் உள்ள Bakery ஒன்றுக்கு Bakery உதவியாளர்கள் தேவை. Part-Time or Full Time வாய்ப்புக்கள் உண்டு. சுவையான இலங்கை பாண் மற்றும் பணிஸ் செய்யும் அனுபவம் விரும்பத்தக்கது. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 416-880-4645

# TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் **Mrs. K. Vasanthakumar** ஐ தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் எழுச்சிமிகு போராட்டத்தை நடத்திவரும் பல்கலைக் கழக மாணவர்களை நோக்கி நீளும் இரும்புக் கரங்கள்

இலங்கையின் ஜனாதிபதியாக இதுவரை பணியாற்றியவர்களில் மிகவும் மோசமான ஒரு ‘நபராக’க் கணிக்கப்பெற்ற காரணத்தால் பதவி-யை விட்டும் தான் வாழ்ந்து வந்து ‘சொகுசு’ மாளிகையையும் விட்டும் இறுதியில் நாட்டை விட்டும் அகற்றப்பட்ட கோட்டாபாய ராஜபக்ச மீண்டும் ‘துளிர்ப்பதற்காய்’ துடிப்பது தெளிவாகவே தெரிகின்றது.
நன்கு திட்டமிட்ட வகையில் ஏற்பாடு செய்யப்பபெற்ற ‘கோ ஹோம் கோத்தா’ என்னும் போராட்டத்தில் தீவிரமாக பங்கெடுத்தவர்கள் தொழிலாளர்களும் விவசாயிகளும் அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுமே ஆவார்கள்.

இலங்கையில் உள்ள மத்திய தர வர்க்கத்தினரும் கடை நிலை வாசிகளும் ‘சொகுசு’ வாழ்க்கை அனுபவிக்கும் அரசியல்வாதிகளை எதிர்த்துக் குரல் எழுப்பி அந்த போராடத்தை செவ்வனே நடத்தி அதில் வெற்றி கண்டார்கள். இவ்வாறான வெற்றிகரமான போராட்டத்தின் இறுதியில் அவரது அரசியல் வாழ்க்கை அஸ்த்தனமாகியது என்ற மகிழ்ச்சியூட்டும் செய்திகள் உலகெங்கும் பரந்து வாழும் இலங்கையர்களை அடைந்த வேளையில் நாட்டின் அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் அதிர்ச்சியடைந்தனர். அதற்கு காரணம், அவர்கள் இத்தனை ஆண்டுகள் அனுபவித்த சுக போகங்கள், அரசியல் அதிகாரங்கள் மற்றும் சலுகைகள் ஆகியவற்றை நாம் இழந்துவிடுவோமோ என்று நடுக்கம் கொண்டார்கள். இதனால் ரணில் போன்ற ஒரு குள்ள நரியை நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் அமரவைக்க இலங்கை அரசியல்வாதிகளும் ஏனையோரும் ‘கபடம்’ நிறைந்த காரியங்களை ஆற்றினார்கள்.
இதனால் ரணில் முதலில் இலங்கையின் பிரதமராகவும் தொடர்ந்து ஜனதிபதியாகவும் அந்த அதிகாரங்கள் நிறைந்த ஆசனங்களில் அமரக்கூடியதாக இருந்தது.
ஆனால் முன்வைத்த காலை பின்னால் எடுக்கும் எண்ணங்கள் இல்லாத போராட்டக்காரர்கள் தொடர்ந்து கோசங்களை எழுப்பியும் கூட்டமாய்க் கூடி தங்கள் எழுச்சியைக் காட்டிய வண்ணம் இருந்தார்கள்.
ஆனால் கோட்டாபாயவை விரட்டியடித்த போராட்டக்காரர்களின் பலத்த நடவடிக்கைகள் தொடரும் வகையில் அங்கு ‘பலம் குன்றிவிட்டதோ என்று ஏங்கும் அளவிற்கு தலைநகரில் சம்பங்கள் இடம்பெறுகின்றன.

மக்களுக்கு பிரயோசமற்ற அரசியல் தலைவர்களும் அதிகாரங்களைக் கையில் எடுத்து ஆளும் தரப்பிற்கு ஆபத்துக்கள் வராமல் கண்காணிக்கும் செயற்பாடுகள் அங்கு காணப்படுவதை உணரக்கூடியதாக உள்ளது.
இவ்வாறிருக்க ரணிலின் அரசுக்கு எதிராகத் தயாரிப்புகளை மேற்கொண்டு போராட்டத்தை தலைமை தாங்கி நடத்திய தென்னிலங்கை பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ரணில் அரசின் இரும்புக்கரங்கள் அந்த துணிச்சலான போராட்டக்காரர்களை நோக்கி நீளுகின்றதை நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.
கொழும்பில் தொடர்ச்சீயக போராடி வந்த இலங்கையின் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்புச் செயலாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட நால்வர் நேற்று வியாழக்ககிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவருக்கு எதிராக இதற்கு முன்னர் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் கொழும்பில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியின் போது ஏற்பட்ட அமைதியின்மையையடுத்து அவர் உள்ளிட்ட நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளுத. ஆனால் கொடியவர்களின் கைகள் ஓங்குவதும் போராட்டக்காரர்களின் எழுச்சி மங்கிப் போவதை அரச பெருச்சாளிகள் விமர்சிப்பதையும் அவதானிக்கும் போது இலங்கையில் போர்க்குணம் கொண்ட மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்றே எண்ணத் தோன்றுகின்றது

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியத்தினால் நேற்றைய தினம் நடாத்தப்பட்ட போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஆயிரக்கணக்கான விசேட அதிரடிப்படையினரை பயன்படுத்தியமை தொடர்பில் சரத் பொன்சேகா ஆட்சேபனை தெரிவித்துள்ளார் என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

சரத் பொன்சேக போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பியுள்ளார். “நிராயுதபாணிகளாகவும் அமைதியான முறையிலும் போராட்டத்தை நடத்திய பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தாக்கி விரட்டுவதற்கு ஆயிரக்கணக்கான ஆயுதம் தாங்கிய பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை வீரர்களை ஈடுபடுத்துவது ஒரு நாட்டின் ஜனநாயகம் வேலை செய்யவில்லை என்பதற்கு சரியான எடுத்துக்காட்டு. என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் சுகபோகங்கள் சரிந்து விடக்கூடாது என்பதிலேயே கவனமாக உள்ளார்கள். எனவே அவர்கள் கூட ரணில் என்னும் குள்ள நரியின் இருப்பை தக்கவைக்கும் எண்ணங்கள் கொண்டவர்களே என்பது எப்போதோ அறிந்து கொண்ட உண்மை.

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# அவுஸ்த்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் இன்று 19ஆம் திகதி வெள்ளிகிழைம மூவின மக்களும் இணையும் ஒன்றுகூடல்

அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் இலங்கையைச் சேர்ந்த மூவினத்தவர்களும் இணைந்து, தமது தாயகத்தில் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு உதவவும் அங்குள்ள மக்களின் மருத்துவ தேவைகளை கவனிக்கவும் முன்வந்துள்ளனர்.

முன்னர் நீடித்த கொவிட் தொற்று பரவிய காலத்திலும் அவுஸ்த்திரேலியாவில் உள்ள இலங்கையர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஊடாக பல்வேறு உதவிகளை வழங்கி வந்தனர்.

இன்று 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மெல்பனில் கிளேய்டன் சமூக மண்டபத்தில் இரவு 7-.30 மணி முதல் 11.-30 மணிவரையில் நடைபெறவிருக்கும் ஒன்றுகூடல் மற்றும் கலைநிகழ்ச்சிகளின் மூலம் திரட்டப்படும் நிதி, இலங்கையில் குழந்தைகளின் மருத்துவ தேவைக்கான உபகரணங்கள், கருவிகள் ஆகியனவற்றை பெற்றுக் கொள்வதற்காக ரோட்டரிக் கழகம் ஊடாக வழங்கப்படவிருக்கிறது.

எதிர்காலக் குழந்தைகளின் கனவுகளை நனவாக்கும் திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் வசிக்கும் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட மூவினத்தவர்களும் இணைந்து இந்நிகழ்ச்சியை முன்னெடுத்துள்ளனர்.

விக்ரோரியா மாநில இலங்கைக்கான துணைத்தூதுவர் கித்சிறி கேரத் மற்றும் கி-றீன் கட்சியின் பிரதிநிதியும் எம். பியுமான திருமதி சமந்தா ரட்ணம், மாநில எம். பிக்கள், பல்லின கலாசார ஆணையாளர் ஆகியோர் உட்பட பல பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர் என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

## அளவட்டி மக்கள் மன்றத்தின் கோடைகால ஒன்றுகூடல், நிர்வாகசபை தெரிவு மற்றும் விளையாட்டுப் போட்டி 2022

காலம்: ஞாயிற்றுக்கிழமை Aug 28, 2022
காலை: 10 மணியிலிருந்து
இடம்: Miliken Park (5555 Steeles Ave. E)
Section B
அனைவரையும் கூடி குலாவி விருந்துண்டு மகிழ அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாகசபை.

info@alaveddy.ca www.alaveddy.ca

## கோடை கால ஒன்றுகூடல்

மானிப்பாய் இந்துக் கல்லூரி-மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் கனடா
அன்புடன் உங்களை அழைக்கின்றது

சனிக்கிழமை, ஆவணி மாதம் 20ம் திகதி, 2022
காலை 10 மணிக்கு
L'Amoreaux- Sports Complex Picnic Area
3159 Birchmount Rd, Scarborough, ON M1V 1S4
உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை பொருளாதார நெருக்கடி: மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 இலங்கை தமிழர்கள் ராமேஸ்வரம் சென்றனர்



தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு (4) இலங்கை தமிழர்கள் அகதிகளாக 13ம் திகதி சனிக்கிழமை காலை ராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் உணவு பொருட்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர்.

இதனால் கடந்த மார்ச் மாதத்திலிருந்து இலங்கையில் இருந்து 129 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக வந்து உள்ளனர்.

இந்நிலையில் இலங்கை திருகோணமலை மாவட்டம் 2ம் வட்டாரம் குதியை சேர்ந்த 50 வயதுடைய தாய், 22 மற்றும் 26 வயதுடைய இரு மகன்கள் மற்றும் 19 வயதுடைய மகள் ஆகிய 4 பேரும் இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்டு அதிகாலை ராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர். ராமேஸ்வரம் வந்த இலங்கை தமிழர்கள் தாங்களாக ஆட்டோவில் ஏறி மண்டபம் மரைன் காவல் நிலையத்திற்கு சென்றனர்.

இதனை அடுத்த மண்டபம் மரைன் போலீசார் நடத்திய விசாரணையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தற்போது அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை, விலை கடுமையாக உயர்ந்து ள்ளதால் வாழ வழியின்றி உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாகவும், தாங்கள் நால்வரும் 2006 முதல் 2019 வரை மண்டபம் முகாமில் பதிவில் தங்கி இருந்து மீண்டும் இலங்கைக்கு சென்றதாகவும் தெரிவித்தனர்.

மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் விசாரணைக்குப் பிறகு 4 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர். மேலும் தமிழகத்திற்கு வந்த இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 133 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (13-08-2022)**

# பாராளுமன்றத்தில் இரட்டை வேடம் போடும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

1977 ஆம் ஆண்டு TULF ஐ உருவாக்கிய பின்னர், தமிழ்த் தலைவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பல, மு. திருசெல்வம் ஆகியோர் சிங்கள ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி தனிநாடு ஒன்றே என்று தீர்மானித்துள்ளனர். அவர்கள் அனைவரும் சமஷ்டி தீர்வை கைவிட்டனர். ஏனென்றால் தமிழர்கள் சிங்களவர்களை நம்பவில்லை. தனிநாடுதான் தமிழர்களை சிங்களவர்களைச் சார்ந்திருக்காமல் செய்யும்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக நமது வீரம் மிக்க தமிழ்ப் புலிகள் தனிநாடு கோரி போராடினார்கள். தனிநாடு கோரி முள்ளிவாய்க்காலில் இறுதிவரை போராடினார்கள். தமிழ்ப் புலிகள் சமஷ்டிக்காகப் போராடினார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. அவர்கள் சொன்னால், அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்று அர்த்தம்.

2010ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்தனர், ஏனென்றால் நல்ல தொலைநோக்குப் பார்வை கொண்ட வேறு எந்த தமிழ் அரசியல்வாதியும் இல்லை. தெரியாத பிசாசை விட தெரிந்த பிசாசு மேல் என்று தமிழர்கள் நினைத்தார்கள். அவர்கள் TNA க்கு வாக்களித்தனர்.

2020 இல், இரண்டு தமிழ் கட்சிகள் ஐ.நா-வின் கண்காணிப்பு வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்தன. இந்த இரண்டு கட்சிகளும் மொத்தமாக 3 ஆசனங்களையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு 6 ஆசனங்களையும் இழந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 6 ஆசனங்களை இழந்ததற்குக் காரணம், அவர்களின் அரசியல் தீர்வுக்கான அரசியல் தத்துவம் "ஒன்றிணைந்த மற்றும் பிரிக்கப்படாத இலங்கை" என்பதே. தமிழர்கள் தங்கள் அரசியல் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கும் வாக்கெடுப்பை ஆதரிக்கிறார்கள் என்பதை மக்கள் அந்த அரசியல்வாதிக்கு காட்டினார்கள். விடுதலைப் புலிகள் சமஷ்டியைக் கேட்டனர் என்கிறார் கஜன்? தனிநாடு பிடிக்காதாது கஜன் நிலை?

ஒஸ்லோவில், டிசம்பர் 5, 2002 அன்று, விடுதலைப்புலிகள் அமைப்பு எந்தவொரு பரிந்துரைக்கப்பட்ட தீர்வையும் அவர்களால் ஆராய முடியும் என்று மட்டுமே கூறினார்கள். ஆனால் அவை சம்ஷ்டிக்கு என்று சொல்லவில்லை. நாங்கள் இன்னும் ஆழமாக மற்றும் விவரங்களுக்கு செல்ல விரும்பவில்லை, ஆனால் புலிகள் தனிநாட்டை வலியுறுத்தியதால் போர் நிறுத்தம் நிறுத்தப்பட்டது என்பதை நாங்கள் அறிவோம்.

கஜன் இதை நன்கு அறிந்திருக்க வேண்டும். நாம் அவருக்கு விளக்க வேண்டியதில்லை. ஆனால் சம்ஷ்டிக்கு விடுதலைப் புலிகள் சம்மதித்ததாக அவர் கூறியிருப்பது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. "சமஷ்டி என்பது தனிநாடு அல்ல" என்று பாராளுமன்றத்தில் சமஷ்டி கேட்கும் தமிழ் அரசியல்வாதி (கஜன் பொன்னம்பலம்).




தமிழர்களுக்கும் பௌத்தத்தை முதன்மையான மதமாக ஏற்றுக்கொள்ள நாங்கள் தயார் என சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்ததை போல் கஜன் கூற்றுமிருக்கிறது. மேலும் இந்த தமிழ் அரசியல்வாதி கஜன் பாராளுமன்றத்தில் "சமஷ்டி சிறந்தவொரு ஆட்சி முறையாகும். ஜனநாயகத்தை முறையாக இதன்மூலம் பேண முடியும்," என்று கூறினார்.

"ஜனநாயகத்தை முறையாக இதன்மூலம் பேண முடியும்" என்று அவர் கூற விரும்பினால், தமிழர்களுக்கான ஜனநாயகத்தை நிரூபிக்க அல்லது பராமரிக்க சிறந்த வழி பொதுவாக்கெடுப்பு என்பதை அவர் உணர வேண்டும். இந்த அரசியல்வாதி தனது கட்சித் தேர்தல் அறிக்கையில் வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று வாக்குறுதி அளித்தார், இப்போது அவர் வாக்கெடுப்பு 1977 இல் நடத்தப்பட்டதாக கூறுகிறார்.

தமிழர்கள் தனிநாடு கேட்கவில்லை என்று கஜன் முன்வைத்த விதம், நம்மை குழப்புகிறாரா அல்லது அவர் கையாளுகிறாரா? நாட்டை பிளவுபடுத்த விரும்பவில்லை என்று கூற கஜனுக்கு உரிமை இல்லை. அவர் இப்போது செய்வது TNA விட மோசமானது, ஏனென்றால் அவர் TNA போன்றதையே கேட்கிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பை தமிழர்கள் நிராகரித்ததால் தான் தமிழர்கள் அவருக்கு வாக்களித்தார்கள் என்பதை அவர் அறிந்து கொள்ள வேண்டும்.

வன்னியிலும் கிழக்கிலும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் காரணமாக சில இடங்களில் தமிழர்கள் TNA க்கு வாக்களிக்கின்றனர். தேர்தல் பிரச்சாரத்தின் போது, பொது வாக்கெடுப்பு, தமிழ் இனப்படுகொலை, ஐசிசி, கிழக்கு திமோர், கொசோவா, தெற்கு சூடான் மற்றும் போஸ்னியா பற்றி கஜன் ஏன் பேசினார்? புரிந்து கொள்வதில் சிரமமாக உள்ளது.

நாங்கள் ஆதரித்தோம், அவர்களின் உண்மையான வாக்குறுதிகளுக்காக எதிர்பார்த்தோம், இப்போது கஜனாலும் அவரது கட்சி உறுப்பினராலும் நாங்கள் ஏமாற்றமடைந்தோம்.

அவர் யாருக்காவது பயப்படுகிறாரா அல்லது வேறு சிலரால் வாங்கப்பட்டாரா? காலம் பதில் சொல்லும்.

**- யாழ்ப்பாணத்திலிருந்து எமது செய்தியாளர்**

# இலங்கையில் ஆறு தமிழ் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்ட விடயம் ரணிலுடைய மற்றுமொரு தந்திரமே என்கிறார் ஸ்ரீதரன் சிவஞானம்



இலங்கைக்குள் தடை செய்யப்பட்ட 6 தமிழ் அமைப்புக்களின் தடையை இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது. ஆனால், இது இலங்கை அரசின் ஏமாற்று நாடகம் என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலிய தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை, உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு, திராவிட ஈழ மக்கள் கூட்டமைப்பு, கனடியத் தமிழர் பேரவை மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவை ஆகிய 6 அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிபந்தனைகளின் 1373 கீழ், இலங்கைக்குள் 577 நபர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 18 அமைப்புக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது. இதன்படி, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிபந்தனைகளின் 1373 கீழ், 316 பேருக்கான தடை நீக்கப்பட்டுள்ளதுடன், 6 அமைப்புக்கள் மீதான தடையும் நீக்கப்பட்டுள்ளது. 316 பேரில் ஒரே பெயரை கொண்ட 7 பேரின் பெயர்கள் உள்ளடங்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிபந்தனைகளின் 1373 கீழ், புதிதாக 55 பேரையும் 3 அமைப்புக்களையும் தடை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இலங்கைக்குள் 316 பேருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், 15 அமைப்புக்களுக்கு நாட்டிற்குள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தடை செய்யப்பட்ட அமைப்பிற்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் அடங்குகின்றது.

அதேபோன்று, ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான காலப் பகுதியில் தடை செய்யப்பட்ட தேசிய தௌஹித் ஜமாத் அமைப்பின் மீதான தடையும் அமலில் உள்ளது. இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இந்த தருணத்தில், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சர்வதேச ரீதியிலுள்ள தமிழர்களின் பங்களிப்பு அவசியம் என கடந்த காலங்களில் தமிழர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தியிருந்தனர். இந்நிலையில் தமிழ் அமைப்புக்கள் மற்றும் நபர்கள் மீதான தடை நீக்கம், ரணிலின் ஒரு தந்திர நடவடிக்கை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார். மேலும் இதுகுறித்து பேசிய அவர், "ஏற்கனவே இந்த தடை நீக்கப்பட்டிருந்தது. 2015, 2019ம் ஆண்டு காலப் பகுதிகளில் ரணில் - மைத்திரி அரசாங்கத்தினால் இந்த தடை நீக்கப்பட்டிருந்தது. மீண்டும் கோட்டாபய ஆட்சிக்கு வந்ததன் பின்னர், அதே தடை விதிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் அந்த தடை நீக்கப்பட்டதாக ரணில் விக்ரமசிங்க அறிவிக்கின்றார். தடை இருந்த காலத்திலேயே மங்கள சமரவீர, ரணில் விக்ரமசிங்க போன்றவர்கள் 2003ம் ஆண்டு சிங்கப்பூரிலும், 2015 மற்றும் அதற்கு இடைப்பட்ட காலத்தில் கொழும்பிலும் தடை செய்யப்பட்ட அமைப்புக்களுடன் பேசியிருக்கின்றார்கள்.

நாடு கடந்த தமிழீழ அரசு, கனடா மக்கள் அவை, ஒவ்வொரு நாடுகளிலும் இருக்கின்ற மக்கள் அவைகளும், அதாவது புலம்பெயர் நாடுகளில் மக்கள் பலமுள்ள அமைப்புக்கள் இன்றும் தடை பட்டியலுக்குள் தான் இருக்கின்றது. 100 வீதமான தடையும் விதிக்கப்பட்டதாகவே இருக்கின்றது.

இந்த தடை நீக்குகின்றமையினால், ஒரு பெரிய மாற்றங்கள் ஏற்பட போவதில்லை. ஆனால் வெளிநாடுகளிலுள்ள 65 முதல் 70 சதவீத மக்களின் செல்வாக்கை கொண்ட கனடா மக்கள் அவை, நாடு கடந்த தமிழீழ அரசு, பிரான்ஸ் ஒன்றியம், சுவிஸ் ஒன்றியம் போன்ற மக்களின் செல்வாக்கை கொண்ட அமைப்புக்கள் இப்போதும் தடையில் தான் இருக்கின்றது. இந்த தடை நீக்கமானது, ஒட்டு மொத்த புலம்பெயர் தமிழர்கள் மீதான தடை நீக்கியதாக கருதப்படாது. தமிழீழத்தை கைவிட்டோம் என்று கூறுவோரின் மீதான தடையையே அரசாங்கம் நீக்கியுள்ளது. இது வெளிப்படையான தார்மீகமான தடை நீக்கம் என்று கருத முடியாது. இதுவொரு சரியான தடை நீக்கம் என்றால், நாடு கடந்த தமிழீழ அரசு உள்ளிட்ட அனைத்து அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியிருக்க வேண்டும்.

உலக நாடுகளிடம் ஏமாற்று வித்தையொன்றை காண்பிக்கும் இலங்கை அரசாங்கத்தின் வழமையான ஏமாற்று நாடகத்தின் ஒரு கட்டம், ரணிலுடைய தந்திரத்தின் ஒரு பாதையே இது. ஆகவே இந்த தடை நீக்கத்தை மகிழ்ச்சி அடையகூடிய ஒன்றாக பார்க்கவில்லை" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் மேலும் 129 பேருக்கு கொரோனா – 3 பேர் உயிரிழப்பு

இலங்கையில் மேலும் 3 பேர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட 1 ஆணும் 1 பெண்ணும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும், 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டவர்களில் 1 பெண்ணும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் மேலும் 129 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 668,141 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(15-08-2022)



# தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ் சிவகரனிடம் கொழும்பில் பயங்கரவாத தடுப்பு பிரிவு அலுவலகத்தில் நான்கு மணி நேரம் விசாரணை



கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு அலுவலகத்தில் திங்கட்கிழமை (15) விசாரணைக்கு சமூகமளிக்குமாறு தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் திங்கட்கிழமை (15) காலை 9 மணியளவில் கொழும்பு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவில் விசாரணைக்காக சென்றிருந்தார். இதன் போது சுமார் நான்கு மணி நேரம் விசாரணைகள் இடம் பெற்றதாக அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், இவ்வருடத்தில் இரண்டாவது தடவையாக பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவால் விசாரணைக்கு அழைக்கப் பட்டுள்ளேன்.



அடிப்படை ஆதாரமில்லாத அர்த்தமில்லாத முற்றிலும் உண்மைக்கு புறம்பான விடயங்களை ஊகத்தின் அடிப்படையில் வெறும் கற்பனையில் விசாரணை நடைபெற்றது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்களை தொடர்ந்து அச்சுறுத்தும் வகையில் எமது செயற்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கில் முற்றிலும் அரசியல் மயப்படுத்தப்பட்ட விசாரணை நடைபெற்றது.

இவ்வாறான தொடர் விசாரணைகளை கண்டு அச்சமடையத் போவதில்லை என்றும் தமது சமூக பணி தொடரும் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர் (16-08-2022)

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் சிறப்பாக இடம்பெற்ற திருவள்ளுவர் விழா



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டுதலில் மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த திருவள்ளுவர் விழா செவ்வாய்க்கிழமை (16) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த. மங்களேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா ஆகியோர் கலந்து கொண்டதோடு, பிரதேச செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





இதன் போது ஆரம்ப நிகழ்வாக திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப் பட்டு,மாவட்டச் செயலக பிரதான வீதியூடாக திருவள்ளுவர் சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றது. திருக்குரள் நடனம், சிறப்பு சொற்பொழிவு, குறள் வழி நாடகம், திருவள்ளுவர் புகழ் பாடும் கோலாட்டம், சிறப்புக் கவியரங்கம், ஆகிய நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

- மன்னார் நிருபர்


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinіccanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# ஈழத்திற்கு இருந்த துணிவு இந்தியாவிற்கு இல்லாமல் போனது ஏன்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



"இலங்கை மாதிரியான ஒரு வங்குறோத்துள்ள சிறிய நாடு சீனவின் கப்பலை அனுமதித்தமை புதுடில்லியின் கன்னத்தில் அடித்தமை போன்றது" என்று பிரம்மா செல்லானி- போன்று சர்வதேச மட்டத்தில் மதிக்கப்படும் இந்திய பாதுகாப்பு ஆய்வாளர்களே கூறும் அவலத்திற்கு இந்திய பாதுகாப்பு தற்போது தள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பு இன்று இலங்கை என்னும் சிறு நாட்டில் ஏலம் விடப்படும் நிலைமையில் உள்ளது என்பதை ஈழத்தழிமர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே எதிர்வுகூறினர். அதனை தடுக்க வேண்டுமானால் இந்தியா விரும்பியோ விரும்பாமலோ ஈழத்தின்பால் செயல்பட வேண்டும் என்ற கருத்து 1983 ஆம் ஆண்டு முதல் வலியுறுத்தப்பட்டாலும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை இந்தியாவிற்கும் ஈழத்தமிழர்களுக்குமான இடைவெளியை அதிகரித்தது.

இருந்தபோதும் "இந்தியா எம்மை பகையாக கருதினாலும் ஈழத்தமிழர்களை பகையாக கருத மாட்டாது அதனால் இந்தியாவின் பகைவர்கள் இலங்கையை அண்ட முடியாது" என்றே விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உறுதியாக கூறிவந்தார்.


கொண்ட கொள்கைகளிலிருந்து என்றும் மீறாதவர்கள் என்று இன்றளவும் அறியப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பினர் இந்தியாவிற்கு பாதகம் ஏதாவது ஏற்படும் என்று கருதினால் அதற்கு எதிராக குரல் கொடுக்கவும், நடவடிக்கை எடுப்பதற்கும் தயங்கியதில்லை. அந்த விடயத்தில் பிரபாகரன் அவர்கள் மிகவும் தீவிரமாக இருந்தார். இதற்கு பல உதாரணங்களை கூற முடியும்.

அதில் ஒன்று 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து புலிகள் வன்னிக்கு பின்வாங்கிய காலத்தில் முல்லைத்தீவு நகரில் சுமார் 2 ஆயிரம் இராணுவத்தினருடன் இருந்த இராணுவ முகாம் இலக்கு வைக்கப்பட்டு முழுமையாக புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டு இரு மாத இடைவெளியில் - அதாவது 1997 ஆண்டு செப்ரெம்பர் மாதம் 09 ஆம் திகதி சீனாவின் ஒரு கப்பல் மீது புலிகள் அஞ்சாது தாக்குதல் தொடுத்த துணிகரச் சம்பவம் இடம்பெற்றது.

அந்த சந்தர்ப்பத்தை இப்போது நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். இலங்கை கடற்படையின் கப்பல் என எண்ணியே அதை விடுதலைப் புலிகள் அதன் மீது முதலில் தாக்குதல் திட்டமிடப்பட்டபோதும் பின்னர் அது சீனக் கப்பல் என்று இனம்கானப்பட்டது. இதனால் தாக்குதலைத் தவிர்க்க எண்ணியபோது விடுதலைப் புலிகளின் தலைமை இரு காரணத்திற்காக அதன்மீது தாக்குதலை மேற்கொள்ள இணங்கியமை பின்னர் அறிய முடிந்தது.

"அதாவது சீனா இந்தியாவின் பகைமைநாடு அதில் சில நேரம் ஆயுதம் எடுத்து வரப்படலாம் என்பது முதலாவது விடயம் இரண்டாவது எமது வளத்தை சுரண்ட எவர் முற்பட்டாலும் இதுவே முடிவு என்றதன் அடிப்படையில் அந்த நடவடிக்கை" என்று புலிகள் தலைமைப்பீடம் முடிவெடுத்தது. சீனா என்பது எவ்வளவு பெரிய நாடு என்ற அச்சம் அற்ற துனிவு எவருக்கும் இல்லை என்பதன் வெளிப்பாடே இன்று இந்தியா இவ்வாறு ஆபத்தில் சிக்கி தவிக்கின்றது என்பதே பிரம்மா செல்லானி உட்பட பல பாதுகாப்பு ஆய்வாளர்களின் ஒருமித்த கருத்தாகவுள்ளது.

1997 ஆம் ஆண்டு புல்மோட்டையில் உள்ள இல்மனைற் தொழிற்சாலையில் இருந்து கனிய வளத்தை ஏற்ற வந்த சீனக் கப்பல் மீது புலிகளின் தாக்குதல் இடம்பெற்றது. இவ்வாறான காரணி அன்றே இந்தியாவிற்கான பாதுகாப்பு வேலியாக அமைந்தது.


Brahma Chellaney
@Chellaney
When a small, bankrupt nation like Sri Lanka delivers a diplomatic slap to New Delhi by hosting a Chinese surveillance ship at its commercial port of Hambantota, it is a stunning reminder of both India's feckless foreign policy and receding influence in its strategic backyard.
2:49 PM · Aug 16, 2022 · Twitter Web App

பொருளாதார நெருக்கடியால் இன்று திரிசங்கு நிலையில் இலங்கை உள்ளது. இந்த சூழலில்தான் வரும் ஆனால் வராது என பூச்சாண்டி காட்டிய யுவாங்-05 தாமதமானாலும் இலங்கைக்குள் வந்து விட்டது என்பதன் மூலம் பாரிய அச்சுறுத்தல் இந்தியாவிற்கு விடப்பட்டுள்ளது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

சீனாவின் யுவாங்-05, பாகிஸ்தானின் தைமூர் இலங்கை நோக்கி புறப்பட்ட ஒரு சில நாள்களிலேயே இந்த தகவல்கள் இந்தியாவின் தரப்பிற்கு சென்றுவிட்டது. ஆனால் இந்தியத் தரப்பு "இலங்கை நம்மைமீறி எந்த நடவடிக்கையும் எடுக்காது" என்ற அளவிற்கு மீறிய நம்பிக்கையில் இருந்தனர். அந்த நம்பிக்கையை பொய்யாக்கி இந்தியாவின் பகை நாடு இரண்டும் தமது கடற்படை கப்பல்களை இலங்கைத் துறைமுகங்களுக்கு கொண்டு வந்தன.

பாகிஸ்தான் கடற்படையின் தைமூர் கப்பலைவிட சீனாவின் கப்பலின் அளவும் சக்தியும் மிகப் பெரியது. இந்த கப்பல் இலங்கை வருவதற்கு இலங்கை அரசிடம் ஜுன் மாதம் 28 ஆம் திகதியே உத்தியோகபூர்வமாக அனுமதி கோரப்பட்டது. இதற்கு ஜுலை மாதம் 12 ஆம் திகதி அனுமதிக்கான பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. ஜுலை 14 அன்று வெளிவிவகார அமைச்சினால் உறுதியான அங்கீகாரம் அளித்த நிலையில் கப்பலின் பயணம் உறுதி செய்யப்பட்டது. எனினும் இக்காலப்பகுதியில் இந்தியா அந்த வருமையை அறிந்துகொண்டதா, ஆம் என்றால் எப்படியான எதிர்வினையை முன்னெடுத்தது என்பது தெளிவாகவில்லை.

இதனையடுத்து ஜுலை மாதம் 21 ஆம் திகதி சீனாவில் இருந்து யுவாங்-05 இலங்கை நோக்கிப் புறப்பட்டது. அப்போது விழித்துக்கொண்ட இந்தியா சீனாவின் விண்வெளி மற்றும் செய்மதி ஆராச்சிக் கப்பலின் இலங்கை வருகையை கட்டுப்படுத்த துடிதுடித்தது. அதற்காக இலங்கை மீது உச்சபட்ச இராஜதந்திர அழுத்தங்களை உபயோகித்தும் முயற்சி வெற்றியளிக்காத நிலையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடியை காண்பித்து மிரட்டியது.


உதயன்
சீனச் சரக்குக் கப்பல் மீது நேற்று
புல்மோட்டைக்கு அருகே தாக்குதல்!
மாலுமிகள் 4 பேர் பலி; 4 பேரைக் காணவில்லை
5 சிவிலியன்களும், 2 படையினரும் மரணம்

இந்தியாவின் அச்சுறுத்தலால் கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு சீன தூதரகத்திற்கு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாக எழுத்தில் அறிவித்தது.

கப்பல் வருவதற்கு மூன்று நாட்களே எஞ்சியிருந்த நிலையில் பயணத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை அரசாங்கத்தினால் சீனக் கப்பலுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், அதே பொருளாதார நெருக்கடியை காண்பித்து சீனாவும் இலங்கையை மிரட்டியது. இதனால் திரிசங்கு நிலைமைக்கு உள்ளானது இலங்கை அரசு.

அதேவேளை எதிலும் அரசியல் செய்யும் மகிந்த தரப்பு இந்த விடயத்திலும் அதைச் செய்யத் தவறவில்லை. அதாவது இந்த அனுமதி ஏதும் தமக்குத் தெரியாது ஜீ.எல்.பீரிஸ்தான் வழங்கிவிட்டுச் சென்றுவிட்டார் எனக் கூற முற்பட்டது.

சீனாவின் அதிநவீன செயற்கைக்கோள் ஆய்வு கப்பலான இந்த "யுவான் வாங் 5" கப்பல் 222 மீட்டர் நீளமும், 26 மீட்டர் அகலமும் கொண்டது. இந்த கப்பல் 11 ஆயிரம் தொன் எடைகொண்ட பொருட்களை சுமக்கும் வல்லமையும் கொண்டது. கடல் சார் கண்காணிப்பு, செயற்கை கோள் தொழில்நுட்பத்தை கொண்டதுடன் 750 கி.மீ. சுற்றளவுக்கு இருக்கும் ஒவ்வொன்றையும் துல்லியமாக ஆய்வு செய்ய முடியும் எனவும் கூறப்படுகின்றது.

## அமெரிக்க உதவியை நாடிய இந்தியா

சீன கப்பலைத் தடுக்க கடும் முயற்சி செய்தும் தமது பிடி கைநழுவி சீனாவின் கையே ஓங்கும் என்பதனை அறிந்த இந்தியா அவசர அவசரமாக அமெரிக்காவின் உதவியினையும் நாடியது. இதற்காகாக உடனடியாக இந்தியாவின் கோவாவினை அண்டிய பகுதிக்கு அமெரிக்காவின் கப்பல் ஒன்றும் திருப்பப்பட்டது.

செய்மதி மற்றும் விண்வெளி ஆய்வுக்குரியது எனக் கூறப்பட்ட கப்பல் சீனாவிலிருந்து புறப்படும்போது 40 கி.மீ வேகத்தில் புறப்பட்டது. அதன் பின் தாய்வானிலிருந்து 35 கி.மீ வேகத்திலும் இலங்கையை அண்டிய கடற்பரப்பினை அண்மித்தபோது 6 கி.மீ ஆகவும் காணப்பட்ட நிலையில் 14 ஆம் திகதி 3 கி.மீ வேகத்திலும் காணப்பட்டது. இதன் பின்பே 16 ஆம் திகதி காலையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடைந்துள்ளது.

யுவாங் 05 விடயத்தில் சீனா மற்றும் இந்தியாவின இராஜதந்திர அழுத்தங்களை ஒப்பிடும் போது சீனாதான் பலமாக அழுத்தியுள்ளது என்பதோடு இந்தியாவிற்கு இராஜதந்திர தோல்வி என்பது வெளிப்படையாகி விட்டது. இச்சம்பவம் இந்தியாவின் விடயத்தில் ஈழத் தமிழர்களின் நிரந்தர இருப்பே இந்தியாவின் திடமான பாதுகாப்பு என்பது இந்தியாவிற்கு மீண்டும் ஒருமுறை நிரூபித்திருப்பதோடு ஈழத்தமிழர்கள் விடயத்தில் அதிக கரிசணை செலுத்த வேண்டும என ஈழத் தமிழர்கள் கருதுகின்றனர்.

இந்திய பாதுகாப்பு விடயங்களில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் ஆய்வாளரான பிரம்மா செல்லானி இந்த சீனக கப்பல் வந்த விடயம் தொடர்பில் தனது டுவிட்டரில் பதிவு செய்துள்ள விடயமானது.

### "இந்தியாவின் முகத்தில் அறைந்த இலங்கை"



"இலங்கை மாதிரியான ஒரு வங்குறோத்துள்ள சிறிய நாடு சீன கப்பலை அனுமதித்தமை புதுடில்லியின் கன்னத்தில் அடித்தமை போன்றது. இது இராஜதந்திர ரீதியிலான அறை எனவும் குறிப்பிட்டுள்ளதோடு இது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் தோல்வியும் இந்தியாவின் கொல்லைக்குள்ளேயே சீனா செல்வாக்கு செலுத்தியுள்ளதையும் எடுத்துக் காட்டுகிறது". என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கைக்கு இந்தியா கடந்த 18 மாதங்களிற்குள் 3.8 பில்லியன் டொலர் உதவி புரிந்துள்ளது. இருந்தபோதும் இலங்கை இந்தியாவிற்கு அழுத்தம் வரும் செயலை அதிகமாக மேற்கொண்டால்தான் அதிக உதவி கிட்டும் என்ற தந்திரத்தை இலங்கை கையாள்கின்றதோ தெரியவில்லை.

கப்பல் விடயத்தில் கோட்டைவிட்ட இந்தியா, இலங்கையை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் ஒரு நடவடிக்கையாக இலங்கைக்கு கண்காணிப்பு விமானம் ஒன்றை அளித்துள்ளது. ஆனால் இதற்கான வேண்டுகோள் 2018 ஆம் ஆண்டு விடுக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இப்போது ஏன் நடவடிக்கை?

அவ்வாறு வழங்கப்பட்ட டோர்னியர் விமானத்தை இயக்கவென இந்திய விமானப்படையின் 15 அதிகாரிகள் 4 மாதங்கள் இலங்கையிலேயே தங்கவுள்ளனர். இவ்வாறு தங்கியுள்ளவர்கள் இந்த விமானம் மூலம் சீனாவின் கப்பலையும் முதல்கட்டமாக கண்காணிப்பதன் மூலம் சீனாவின் கப்பலை இலங்கைக்குள் விட்டு சீனாவை திருப்திப்படுத்திய இலங்கை அரசு அதனை கண்காணிக்கும் வல்லமை கொண்ட இந்தியாவின் விமானத்தையும் இலங்கைக்குள் விட்டு இந்தியாவையும் திருப்திப்படுத்தியதா என்ற பலமான கேள்வியும் எழுந்தாலும் அதில் இந்தியா திருப்திகொள்ள முடியாது என்பதோடு இலங்கையின் தந்திரமே மேலும் வெற்றி கண்டது என்பதே பொதுவான கருத்தாகவுள்ளது.



இரட்டைக் குதிரை சவாரி ஆபத்தானது என்றாலும், கேந்திர ரீதியாக முக்கியமான இடத்தில் இருக்கும் இலங்கை, இந்தியா தம்மை கைவிடாது, விடவும் முடியாது என்று திடமாக நம்புவது போலத் தோன்றுகிறது. அதேவேளை ஐ நா தீர்மானங்களை சமாளிக்க சீனாவின் ஆதரவு இன்றியமையாதது அதேவேளை இந்தியாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க சீனா என்கிற பூச்சாண்டி அவசியம் என்று இலங்கை, பாகிஸ்தான் போன்ற நாடுகள் நம்புகின்றன.

சீனாவின் கப்பலை வரவேற்கும் நிகழ்வில் பங்குகொண்ட சீனத் தூதுவர் கருத்துரைக்கும்போது இது போன்ற கப்பல் வருவது இது முதல்தடவை அல்ல 2014ஆம் ஆண்டும் வந்த்தாக குறிப்பிட்டதோடு இந்தியாவின் எதிரப்பினால்தான் தாமதம் ஏற்பட்டதா என்ற கேள்விக்கு அது இயற்கையானதே எனவும் பதிலளித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் பேசாலை காட்டாஸ்பத்திரி பகுதியில் தீ வைத்து கொளுத்தப்பட்ட மீன் வாடிகள்

## மீன்பிடி இயந்திரங்கள், வலைகள் நாசம்





மன்னார் பேசாலை - காட்டாஸ்பத்திரி பகுதியில் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்ட மீன் வாடிகள் ஞாயிற்றுக்கிழமை இரவு விஷமிகளால் தீக்கிரையாக்கப் பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 3 வாடிகள், 25 குதிரை வலு கொண்ட 3 மீன்பிடி இயந்திரம் பெறுமதிமிக்க நண்டு, சூடை, கிளைக்கன் மீன் வலைகள், பல பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து சாம்பலாகி உள்ளது.

சம்பவ தினத்திற்கு முன் கடந்த 13 ஆம் திகதி தனி நபர் ஒருவருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக குறித்த நபர் இந்த நாசகார வேலையை செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் பேசாலை போலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அங்கு உரிய நீதி கிடைக்காத காரணத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் செவ்வாய்கிழமை (16) மன்னார் சிரேஷ்ட போலீஸ் அத்தியாட்சகரிடம் முறையிடுவதற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு சென்றுள்ளனர்.

கடந்த புரேவிப் புயல் பாதிப்பு கொரோனாவால் தொழில் இழப்பு காலங்களில் மிகவும் கஷ்டப்பட்டு தொழில் செய்வதற்கு கடன் அடிப்படையில் பெறப்பட்ட உபகரண பொருட்களை விஷமிகள் தீயிட்டு கொளுத்தி உள்ளார்கள்.

இன்றைய பொருளாதார, எரிபொருள் தட்டுப்பாடு காலத்தில் குறித்த மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கான நிலை என்ன? போலீசாரும் கடல் தொழில் திணைக்கள அதிகாரிகளும் தங்களுக்கு நீதியை பெற்று தர வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- மன்னார் நிருபர் (16-08-2022)

# தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்று படம் "மேதகு2" இணையதளத்தில் ஆக.19ல் வெளியாகிறது



விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வாழ்வியலை மையப்படுத்தி உருவான "மேதகு" படம் கடந்த ஆண்டு வெளியானது. அதன் இரண்டாம் பாகம், "மேதகு-2" என்ற பெயரில் உருவாகியுள்ளது. பிரபாகரனாக, கௌரிசங்கர் நடித்துள்ளார். நாசர் கவுரவத் தோற்றத்தில் நடித்துள்ளார். இரா.கோ. யோகேந்திரன் இயக்கியுள்ளார். பிரவின் குமார் இசை அமைத்துள்ள இந்தப் படத்துக்கு வினோத் ஒளிப்பதிவு செய்துள்ளார். வரும் 19ம் தேதி இந்த படம் வெளிநாட்டு திரையரங்குகளில் வெளியாகிறது. இந்தியாவில், இந்தப் படத்துக்கு சென்சார் சான்றிதழ் கிடைக்காது என்பதால், இதை வெளியிடுவதற்காகவே, தமிழ்ஸ் ஓடிடி என்ற புதிய தளத்தை தொடங்கி வெளியிட உள்ளனர்.

# மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்ற அறுவடை விழா!

தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் இயற்கையான முறையில் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய அறுவடை விழா புதன்கிழமை (17) மாலை 3.00மணிக்கு இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.



மேலும் அதிதிகளாக மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளரும், உற்பத்தித் திறன் பிரிவின் பிரதம இணைப்பாளருமான கே.லிங்கேஸ்வரன், துணுக்காய் பிரதேச செயலாளர் ஆ. லதுமீரா, உலக உணவுத் திட்டத்தின் மாவட்ட இணைப்பதிகாரி ஜெயபவாணி, வவுனிக்குள நீர்ப்பாசன பொறியியலாளர், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்திற்கு அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்பை முன்மாதிரியாக எடுத்துக்காட்டுமுகமாகவே குறித்த பிரதேச செயலக வளாகத்தில் இயற்கை விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னார் நீதிமன்றில் சான்றுப் பொருட்களான கேரள கஞ்சா பொதிகள் உள்ளிட்ட பொருட்களை திருடிய பொலிஸ் உள்ளிட்ட இருவர் கைது




மன்னார் நீதிமன்றத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சான்றுப் பொருட்கள் சிலவற்றை திருடிய நிலையில் மன்னார் நீதிமன்றத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் காவலாளி ஆகிய இருவரையும் வியாழக்கிழமை (18) காலை மன்னார் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், மன்னார் நீதவான் நீதிமன்றில் சான்றுப் பொருட்களாக காணப்பட்ட ஒரு தொகுதி பொருட்களை கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் காவலாளி ஆகிய இருவரும் திருடி உள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் வியாழக்கிழமை (18) காலை விரைந்து செயல்பட்ட மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தின் காவலாளி தங்குமிட பகுதியை சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது திருடப்பட்ட சான்றுப் பொருட்களான ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதி, முந்திரிகை விதைகள், மீன்பிடி வலைகள் மற்றும் சட்டவிரோத மதுபானம் (கசிப்பு) ஆகியவற்றை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன் போது குறித்த சம்பவத்துடன் தொடர்பு பட்ட மன்னார் நீதிமன்றத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் காவலாளி ஆகிய இருவரையும் மன்னார் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் குறித்த இருவரும் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர் (18-08-2022)

# தமிழகத்தில் 2500 பாடசாலைகளில் மரத்தடியில் மாணவர்கள் படிக்கும் அவலம்



தமிழகத்தில் 2500 பாடசாலைகளில் மரத்தடியில் மாணவர்கள் கல்வி கற்கும் சூழ்நிலை உள்ளது என அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்துள்ளார். திருச்சி மாவட்ட பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் என 6 மாவட்டங்களை உள்ளடக்கிய கல்வித்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் ரகுபதி, எஸ்.எஸ்சிவசங்கர், மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் உட்பட சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். பின்னர் அமைச்சர் அன்பில் மகேஸ் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில், "தமிழ்நாட்டில் 2,500 பாடசாலை மாணவர்கள் மரத்தடியில் கல்வி கற்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதனை சரிசெய்ய புதிய கட்டடங்கள், வகுப்பறைகள் அமைக்க நிதி கேட்கப்பட்டுள்ளது. நிதி வந்தவுடன் பணிகள் துவங்கும். 2500 புதிய ஆசிரியர்கள் விரைவில் பணியில் அமர்த்தப்பட உள்ளனர்" எனத் தெரிவித்தார். கல்வி தொலைக்காட்சி குறித்த கேள்விக்கு, "அன்பில் பேரனுக்கு வந்த கொடுமை இது. கல்வி தொலைக்காட்சியின் இரண்டாவது அலைவரிசை துவங்குவதற்கு முறையாக அதற்கு கமிட்டிகள் அமைக்கப்பட்டு அவர்களை மட்டுமே தேர்வு செய்தனர். கல்வித் தொலைக்காட்சி சிஇஓ நியமனம் குறித்து சர்ச்சைகள் வருவதால் அதனை நிறுத்தி வைக்க உத்தரவிட்டு உள்ளேன். தமிழக முதல்வர் குறிப்பிட்டதை போல் எதிலும் சமரசம் இல்லை. அவருடைய வளர்ப்பு நான். இதை நான் பாசிட்டிவாக எடுத்துக் கொள்கிறேன்" என்றார்.

இந்தியா செய்திகள்
India News

# பிச்சை எடுத்த ரூ. 50 லட்சத்தை அரசுக்கு வழங்கிய நபர்

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம், தாலுகா ஆழங்கிணறைச் சேர்ந்தவர் பூல்பாண்டியன். இவருக்கு திருமணமாகி 2 மகள், 1 மகன் உள்ளனர். பம்பாயில் தேய்ப்புக்கடை நடத்தி அங்குள்ள சுப்பிரமணியன் சுவாமி கோவிலில் 15 வருடம் பணி செய்து குழந்தைகள் அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தார். அதன்பின் 2010ம் ஆண்டில் தமிழ்நாடு வந்த இவரை குடும்பத்தினர் ஒதுக்க ஆரம்பித்து உள்ளனர். இதனால் வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, திண்டுக்கல், மதுரை, ராமேஸ்வரம், வேலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு சென்று பிச்சை எடுத்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கி வந்தார். அரசு பள்ளிகளுக்காக, கொரானா நிதி, இலங்கை தமிழர்க்கு என நிவாரண நிதி வழங்கி வந்தார்.

இந்நிலையில் விருதுநகர் மாவட்டம் வருகை தந்த சமூக சேவகர் இருக்கண்குடி கோவில் திருவிழாவிற்கு வந்து தங்கி கோவில், வீடு, கடைகளில் பிச்சை எடுத்து ரூ.10 ஆயிரம் சேமித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மேகநாதரெட்டியிடம் இலங்கை தமிழர்களுக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கினார்.

இதுவரை இவர் இது போன்று ரூ50 லட்சத்து 60 ஆயிரம் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# விருதுத் தொகை ரூ.10 லட்சத்தை, தமிழ கமுதல்வர் நிவாரண நிதிக்கு வழங்கிய கம்யூனிஸ்டு கட்சி மூத்த தலைவர் நல்லகண்ணு



விருதுக்கான பத்து லட்சம் ரூபாயுடன் தனது சொந்த நிதி ரூ. 5 ஆயிரம் சேர்த்து 10 லட்சத்தி 5 ஆயிரத்தை முதலமைச்சர் நிவராண நிதிக்கு வழங்கினார் "தகைசால் தமிழர்" நல்லகண்ணு

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருது 2021-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் முதுபெரும் தலைவர் சங்கரய்யா (வயது 101) இந்த விருதைப் பெற்றார்.

இந்த ஆண்டு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் ஆர். நல்லகண்ணுவிற்கு "தகைசால் தமிழர் விருது" வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி (ஆக 15) நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் "தகைசால் தமிழர்" விருதை ஆர் .நல்லகண்ணுவிற்கு வழங்கினார்.

மேலும் இந்த விருதுக்கான பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நல்லகன்ணுவிற்கு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து பத்து லட்சம் ரூபாயுடன் தனது சொந்த நிதி ரூ.5 ஆயிரம் சேர்த்து 10 லட்சத்து 5 ஆயிரம் ரூபாயை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு முதல்வரிடம் வழங்கினார் நல்லகண்ணு.

# "எழுத்து" நிறுவனத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த நாவல்களுக்கான பரிசு தொகை ரூ.2 லட்சமாக உயர்வு என அறிவிக்கப்பட்டுள்ளது

எழுத்து அமைப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த நாவல்களுக்கான பரிசு தொகையை ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என்று அந்த அமைப்பின் நிறுவன தலைவர் ப. சிதம்பரம் அறிவித்துள்ளார். தமிழ் இலக்கியத் தளத்தில் புதுமைகளை மிளிரச் செய்யவும், தமிழ் இலக்கியம் மேன்மையுறத் தொண்டாற்றவும் "எழுத்து" என்ற இலக்கிய அமைப்பை காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் தொடங்கி நடத்தி வருகிறார். செம்மொழி மத்திய தமிழாய்வு நிறுவனத்தின் துணைத் தலைவர் அவ்வை நடராசன், கவிஞர்கள் வைரமுத்து, மு. மேத்தா, மரபின் மைந்தன் முத்தையா, ப.சிதம்பரம் ஆகியோர் எழுத்து அமைப்பின் அறங்காவலர்களாக உள்ளனர். தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் எழுத்து தமிழிலக்கிய அமைப்பு செயல்பட்டு வருகிறது.

ஆண்டு தோறும் நாவல் போட்டிகளை நடத்தி ரூ.ஒரு லட்சம் பரிசு வழங்கி வருகிறது. தற்போது அந்த பரிசுத் தொகையை ரூ.2 லட்சமாக உயர்த்தி ப. சிதம்பரம் அறிவித்துள்ளார். இதுகுறித்து, எழுத்து அமைப்புக்காக கவிஞர் இலக்கிய நடராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எழுத்து தமிழிலக்கிய அமைப்பு ஆண்டு தோறும் நாவல் போட்டிகளை நடத்தி தேர்வு பெறும் சிறந்த நாவலுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு தொகை வழங்கி வருகிறது. தமிழ் எழுத்தாளர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ.ஒரு லட்சம் என்பது, 2021ம் ஆண்டுக்கான போட்டிகளிலிருந்து ரூ.2 லட்சமாக உயர்த்தி வழங்கப்படுவதாக எழுத்து அமைப்பின் நிறுவன தலைவர் ப.சிதம்பரம் அறிவித்துள்ளார்" என்று கூறியுள்ளார்.



# கிளிநொச்சி தரம் உயர்வதால் காணிகளை இழக்கும் அபாயம் ஏற்படுமா?

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



கிளிநொச்சி பிரதேச சபை நகர சபையாக தரமுயர்வு கண்டால் சபையின் எல்லைப் பரப்பில் வாழும் காணி அனுமதிப் பத்திரம் அற்றவர்கள் நில உரித்தை இழக்கும் அபாயம் ஏற்படுமா என்ற கேள்வியை எழுப்பி நிற்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபை எல்லைப் பரப்பில் தற்போது கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 59 கிராம சேவகர் பிரிவுகள் உண்டு. ஆனால் 11 கிராம சேவகர் பிரிவுகள் மட்டுமே நகர சபையாக மாறும்.

எஞ்சிய கிராம சேவகர் பிரிவுகள் தொடர்ந்தும் பிரதேச சபையாகவே இருக்கும். அதனால் இந்த 11 கிராம சேவகர் பிரிவிற்கு வெளியில் இருப்போர் எந்த அச்சமும்கொள்ளத் தேவையில்லை என்பது முதலாவது விடயம்.

### நகர சபையாக மாறும் 11 பிரிவுகள்.

நகர சபையாக மாறும் கிராம சேவகர் பிரிவுகளாக வரும் கிளிநகர், ஆனந்தபுரம், இரத்தினபுரம், ஜெயந்திநகர், திருநகர் தெற்கு, திருநகர் வடக்கு, கணேசபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுடன் உதயநகர் மேற்கு, உதயநகர் கிழக்கு, கனகபுரம் மற்றும் விவேகானந்த நகர் ஆகிய 11 கிராம சேவகர் பிரிவுகள் மட்டுமே நகர சபை எல்லைப் பரப்பிறகுள் உள்ளடங்குகின்றன.

இதேநேரம் கரைச்சி பிரதேச சபையில் இருந்து நகர சபையாக மாறும் எல்லைப் பரப்பில் தற்போது காணி உறுதியோ அல்லது காணி அனுமதிப் பத்திரம் அற்றவர்கள் இந்த வகை நெருக்கடிக்குள் அகப்படுவர் என்பதே அப்பகுதி மக்களின் தற்போதைய அச்சமாக கூறப்பட்டது.

### முன்னாள் காணி ஆணையாளரின் கருத்து.

நீண்டகாலம் வடக்கில் காணி ஆணையாளராக பணியாற்றிய குகநாதனைத் தொடர்பு கொண்டு இவை தொடர்பில் விபரம் கேட்டபோது,

உறுதி மற்றும் காணி அனுமதிப் பத்திரங்களிற்கு அப்பால் ஏற்கனவே காணிக்கு விண்ணப்பித்து காணிக் கச்சேரி இடம்பெற்றவர்களும் இந்த நெருக்கடிக்குள் அகப்பட மாட்டார்கள். இதனால் காணி அனுமதிப் பத்திரம் இல்லாது விடினும் அனைவரும் உடன் அதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க அவர்களிற்கான காணிக் கச்சேரியை துரிதப்படுத்தினால் இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியும் என்றார்.


### நெருக்கடியை எதிர்கொள்ளும் 2, 347 பேர்

தற்போது நகர சபையாக தரம் உயரும் கிராம சேவகர் பிரிவில் உறுதிக் காணிகள் தவிர்ந்து அனுமதிப் பத்திரக் காணிகள் 2 ஆயிரத்து 466 உண்டு. இதேபோன்று 3 ஆயிரத்து 800 காணிகளிற்கு காணி அனுமதிப் பத்திரம் இல்லையெனவும் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. இருந்தபோதும் காணி அனுமதிப் பத்திரம் அற்ற 3 ஆயிரத்து 800 காணிகளிலும் ஆயிரத்து 453 காணிகளிற்கு ஏற்கனவே காணிக் கச்சேரி இடம்பெற்றுவிட்டது.

இவற்றின் பிரகாரம் தற்போதும் 2 ஆயிரத்து 347 காணிகளின் உரிமையாளர்கள் இந்த நெருக்கடிக்குள் அகப்படுகின்றனர். இதனைத் தடுக்க வேண்டுமானால் கரைச்சி பிரதேச செயலாளரே துரிதமாக செயல்படவேண்டிய தேவை உள்ளது.

| Urban Council | | | | | |
|---|---|---|---|---|---|
| Ward No | G.N.Division | Population | Sub Total | SKm | Sub Total |
| 10 | Killinam | 1577 | | 10.55 | |
| | Ananthapuram | 2180 | | 2.25 | |
| | Ratnapuram | 1391 | 5148 | 2.35 | 15.15 |
| 11 | Jeyanthinagar | 672 | | 5.85 | |
| | Thirunagar South | 1124 | | 1.70 | |
| | Thirunagar North | 1507 | | 1.66 | |
| | Kaneshapuram | 759 | 4062 | 5.45 | 12.66 |
| 18 | Uthayanagar West | 2337 | | 1.85 | |
| | Uthayanagar East | 3304 | | 1.45 | |
| | Kanagapuram | 1081 | | 9.1 | |
| | Viveganandhanagar | 1886 | 8608 | 3.51 | 15.91 |
| | Grand Total | | 17818 | | 43.72 |

கரைச்சி பிரதேச செயலகம் ஏற்கனவே காணிக் கச்சேரி இடம்பெற்ற ஆயிரத்து 453 காணிகளிற்குமான அனுமதிப் பத்திரங்களை வழங்க ஆவண செய்வதோடு எஞ்சிய 2 ஆயிரத்து 347 காணிகளிற்கும் காணிக் கச்சேரியை உடனடியாக நடாத்த ஆவண செய்வதே தீர்வாக முடியும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.



### மாவட்ட அரச அதிபரின் பதில்

இவை தொடர்பில் மாவட்டச் செயலாளரான திருமதி. றூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு தமக்கு ஏறபடக்கூடிய ஆபத்து தொடர்பில் மக்கள் முன் வைக்கும் கோரிக்கைக்கு என்ன தீர்வு எனக் கேட்டபோது,

உடனடியாகவே மாகாண காணி ஆணையாளரான சோதிநாதனுடன் தொடர்பு கொண்டு இந்த 11 கிராம சேவகர் பிரிவிற்குமான காணிக் கச்சேரியை நடாத்துமாறு கோரிக்கை விடுத்தபோது அதனை ஏற்றுக்கொண்டு 4 உத்தியோகத்தர்களை தற்போது மாவட்டத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்த நான்கு உத்தியோகத்தர்கள் சகிதம் கரைச்சி பிரதேச காணி உத்தியோகத்தர் ஊடாக இதுவரை காணி அனுமதிப் பத்திரமோ அல்லது அதற்கான காணிக் கச்சேரி இடம்பெறாதவர்களின் விபரங்கள் துரிதமாக திரட்டப்படுகின்றது. அது நிறைவுற்ற உடனேயே காணிக் கச்சேரிக்கு ஏற்பாடு இடம்பெற்று 3 தினங்கள் தொடர்ச்சியாக நடாத்த எண்ணியுள்ளோம் என்றார்.



# UN Deeply Concerned by Widespread 'Slavery in Sri Lanka'

- Siva Parameswaran, Senior International Journalist London



A top UN report has found Sri Lanka has failed to abolish slavery it's found to be widespread from the plantation sector to the workers in the garment industry and those poverty-stricken working as housekeepers and maids, particularly in the war-affected areas.

Tomoya Obokata, Special Rapporteur on contemporary forms of slavery, including its causes and consequences in his report to the Fifty-first session of the UN Human Rights Council scheduled between 12 September-7 October has said, "Despite legislative and other measures taken to end child labour, including in its worst forms, it still persists in Sri Lanka".

These strong remarks from the UN come at a time when Sri Lanka is reeling under severe economic crisis as international funding/donor agencies have put on hold their funding citing various reasons.

### Serious social problems

"Child labour is particularly severe in poor rural areas populated by ethnic minorities, such as Malaiyaha (Hill Country) Tamils and Sri Lankan Tamils, where some children, particularly girls, drop out of school in order to support their families. In the plantation sector, for example, there is a high risk of students dropping out of school, including due to the often-substandard quality of education and of facilities" his report to the UN says.

A Japanese scholar of international law and human rights, specialising in transnational organised crime, human trafficking, and modern slavery in his report points out that children are sexually exploited in the tourism sector "which is a cause of concern".

Two of Sri Lanka's largest foreign exchange earners - the plantation industry and the export garment manufacturing have come in for sharp criticism from the UN Special Rapporteur. His report has found that slavery in different forms exists rampantly in these two sectors apart from others.

According to his report "Forced marriage is a contemporary form of slavery, and in the context of Sri Lanka, it is generally a cause and consequence of poverty, school dropout, teenage pregnancy, and other factors".

Observing the plantation sector is a clear example of slavery his report further says "Women and girls have been disproportionally affected by contemporary forms of slavery in Sri Lanka".

### "Military style of functioning"

The military style of functioning has also come in for strong criticism from Tomoya Obokata. Speaking about the reemployment of military officials in private business such as tea plantations and garment factories, he says though they have the right to work the "imposition of military-type control is a private workplace, including leadership of management raises concern". According to him, it leads to a culture of fear being created among the workers.

"In this regard, the Special Rapporteur was made aware of instances of intimidation and harassment, including of a sexual nature, by some retired military officers towards workers".

Plight of those working in the garment sector in the Free Trade Zone is no less similar in terms of workplace abuse and harassment as per the UN report. Focusing more so on the plantation workers Obokata in his report to the ensuing session of the UN say the domestic workers from the upcountry are "at risk of facing higher levels of exploitation and discrimination as well as physical, verbal and sexual harassment and abuse".





### Language barrier & ethnic dimension

The vicious circle of microfinancing and its death trap also finds a place in his report. Due to high-interest rates on the loans, many women fall into debt bondage and this has led to the suicide of reportedly over 200 women in recent years his report says. As reported widespread poverty pushing vulnerable women into sex work also finds a place in the rapporteur's report. While the Special Rapporteur encourages Sri Lanka to work with all relevant stakeholders, including businesses and employers, civil society organizations, trade unions, workers and other regional and international stakeholders, as well as with the Human Rights Commission of Sri Lanka he has pointed out that "shrinking civic space seems to be a pressing problem".

In Sri Lanka, contemporary forms of slavery have an ethnic dimension so also language barriers are an important factor in the continued form of subjugation and slavery Tomoya Obokata, Special Rapporteur on contemporary forms of slavery has said in his report.

# Amidst UN Fear, Sri Lanka Repeals Anti-LGBT Laws

**- Siva Parameswaran, Senior International Journalist London**




Sri Lanka is known for offering soaps whenever it comes under pressure from the UN or other international bodies such as the IMF and World Bank. And, now as the next session of the UN looms large in September, the government has repealed the anti-LGBT+ laws. Those laws were part of the Emergency legislation.

Nearly 70% of Sri Lankans say LGBT persons face discrimination by police because they are LGBT while 60% of Sri Lankans state renting their house to an LGBT person would be a problem according to Equality Index website www.equaldex.com

While Sri Lanka's economy is crippled, GSP+ benefits are of paramount importance to it as a means of foreign exchange and saving thousands of jobs in the Free Trade Zone the benefit offered mainly by European nations and the United States comes with strict and tighter regulations.

The European Union in its report of 22 July 2022 on Sri Lanka has demanded the assurances given to it be honoured.

"The EU expects the new Government to work in full compliance with its GSP+ commitments".

GSP+ known as trade concessions and tax benefits shall be awarded for upholding human rights, gender equality, and safer workplaces among others as a quid-pro-quo for availing those benefits.

Coming under severe political and economic pressure, the 'backdoor' Executive President Ranil Wickremesinghe has come forward to negate provisions that allowed the police and military to act against the LGBT+ community. The executive order which came into effect earlier this month is seen as a climb down under the guise of upholding human rights.

In a nation deeply polarised on grounds of religion and ethnicity, a Buddhist majority 'racist' society dominated government thinking and public policy on matters of personal choices including sexual orientation like the marginalised LGBT+ community and such relationships were frowned upon by the hard-line elements.

According to Arithe Wickremesinghe a member of the LGBT+ community, 'the punishment for homosexuality is worse than Saudi Arabia'. As such, the community constantly lived under threat and fear.



The UN special rapporteur Tomoyo Obakata in his 2022 report on contemporary slavery stated, 'A clear condition given to 'Decriminalize sex work and consensual same-sex relations in order to reduce the risk of exploitation and abuse'.

Section 365 and 365A of Sri Lanka's highly controversial constitution criminalise 'carnal intercourse against the order of nature between man, woman and animal' and 'any act of gross indecency' respectively. The repeal, though not for the entire legislation, has come about just as the gates open for the United Nations team visit.

'As in previous years, a team from the Office of the High Commissioner for Human Rights (OHCHR) will conduct a visit to Sri Lanka for consultations with the Government and other stakeholders to discuss the human rights situation in preparation of the Report on Sri Lanka that the High Commissioner will present to the Human Rights Council session in September' the United Nations Sri Lanka Office based in Colombo has said.



Human rights organisations have constantly demanded these specific acts ought to be repealed. Many countries have decriminalised same-sex relationships 'calling them a matter of personal choice and in some cases aberration of the human anatomy'.

The United Nations Committee on the Elimination of All Forms of Discrimination against Women issueda landmark judgment on23 March 2022 urging Sri Lanka to repeal these forms of statutory legislation.

"Being persecuted for sexual orientation or gender identity has no place in our world today" global human rights organisation Amnesty International said about Sri Lanka's LGBT rights situation. New York-based Human Rights Watch concurred with Amnesty's stand and called for the law to be repealed urgently as 'its outdated and discriminatory law'.

Recently the parents of a 22-year-old lesbian woman filed a case against her to get her mentally ill, which was thrown out by the court. However, this sparked the debate to decriminalise laws that are against the LGBT+ community. The Court promptly acknowledged 'that homosexuality is neither a disease of the mind nor a criminal offence under the Penal Code'. A recent OCHR report found criminalisation of same-sex sexual activity breached rights of a LGBTI activist.

The EU has made it clear that commitments given to obtain GSP+ have to be honoured by Sri Lanka and for a country that's in deep economic mess to ignore the commitment would spell disaster.

# இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு தமிழ் தேசத்தை அங்கீகரிப்பதே வழியாகும்: கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

- எமது யாழ் செய்தியாளர்

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 13 வருடங்கள் தாண்டியும் போர்க்காலத்தில் இருந்த பொருளாதார நிலையை விட இலங்கையின் பொருளாதார நிலை மிக மோசமாகி உள்ளது. இந்தக் கடன் பொறிக்குள் விழுந்திருக்க கூடிய இலங்கை தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு ஒரு வழி இருக்கின்றது. தமிழ் மக்களுடன் தமிழ் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை எட்டவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், “இலங்கை அரசுக்கு இன்று இருக்கக்கூடிய வருமானத்தை விட புலம்பெயர் தமிழ் மக்களுடைய வருமானம் அதிகமாக இருக்கக்கூடிய நிலையில் உலகில் மிகப் பலமான நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அந்த அரசுகளுக்கு சுமையாக இல்லாமல் மிகச் சிறந்த ஒரு சமூகமாக இருக்கின்றனர். அந்த மக்களின் உதவிகளை முதலீடுகளை பெற்றுக் கொள்ளமுடியும்” என்றார்.

இந்த கடன் இல்லாமல் நாடு இருக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கவும் தமிழ் மக்களின் உரிமையை கொடுக்கக் கூடாது என்கின்ற இனவாத போக்கை கடைபிடிக்கின்ற சித்தாந்தமே இருக்கின்றது. சர்வதேசரீதியில் இருக்கக்கூடிய கடன் சுமைகளை மேற்கத்திய மற்றும் இந்திய நாடுகளுடன் இணைந்து ஏதோ ஒரு வகையில் பொருளாதாரத்தை நிலைக்கு கொண்டு வரலாம் என கனவு காண்கின்ற நிலையில் தான் இலங்கை இருக்கின்றது என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் கூறினார்.

இதுவரை காலமும் தமிழரை அழிக்க சீனாவின் காலில் விழுந்த நிலை-யை விட்டு தற்போது மேற்கத்திய மற்றும் இந்தியாவின் காலில் விழுகின்ற போக்கை சீனா பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்று நிலையில் சீனா தான் கொடுத்த கடனில் இருந்து இலங்கையை தப்பவிடாது எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கூறினார்.

“சீனாவின் கப்பல் வருவதற்கு முதல் நாள் உளவு பார்ப்பதற்கென இந்தியா தன்னுடைய விமானத்தை இலங்கைக்கு வழங்கி இலங்கைத் தீவிலுள்ள பூகோளப் போட்டியை இன்னும் தீவிரமடைகின்ற நிலை-லமை உருவாக்கி இருக்கிறதேதவிர இந்த நடவடிக்கைகள் எதுவுமே தமிழ் மக்களுக்கு நன்மையை கொடுக்கக்கூடிய விடயம் அல்ல. மாறாக இருக்கக்கூடிய மக்களுக்கும் கடும் பாதிப்புகளையும் சவால்களையும் கொடுக்கின்ற நிலை-லமை தான் உருவாக்கும்”.

அவர் மேலும் கூறியதாவது: எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சிங்கள மக்களுக்கு சொல்வது, இந்த நிலைமையில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, 74 வருடங்களாக ஒற்றை ஆட்சி என்கிற அடிப்படையிலேயே நியாயமற்ற தோற்றுப் போன கொள்கையை தொடர்ந்து கடைபிடிக்கின்றதனால் வரக்கூடிய விளைவுகளை சிங்கள மக்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களிடையே பிரிவுகள் ஒன்றும் இல்லாமல் உள்நாட்டிலே நாங்கள் எங்கள் ஒவ்வொருவரையும் மதிக்கக்கூடிய ஒவ்வொரு தேசங்களையும் ஏற்கக்கூடிய சந்தர்ப்பம் உருவாகினால் நாங்கள் இந்த பூகோளப்போட்டியில் எங்களுடைய நன்மைக்காகவும் பொது நன்மைக்காகவும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். அதை செய்யத் தவறினால் வெளி சக்திகள் தங்களுடைய தேவைகளை அடைவதற்கு எங்களுடைய பிரிவு-களை பயன்படுத்துகின்ற நிலைமையே தொடர்ந்து காணப்படும்.

தமிழ் மக்களுடைய உரிமை-களை வழங்கக்கூடாது. தமிழ் தேசம் இலங்கை தீவில் இருப்பதை அங்கீகரிக்கக் கூடாது என்ற காரணத்தினால் இன அழிப்புக்குரிய போரை நடத்தி, தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய விடுதலை அமைப்பை அழிப்பதற்கு தமிழ் மக்களையும் சேர்த்து அழிக்கின்ற வேலைத்திட்டத்திற்கு இலங்கை அரசுக்கு உதவி தேவைப்பட்டது. அதில் முதலாவது ஆயுத தேவைக்கான நிதி, இரண்டாவது அரசியல் ரீதியான பாதுகாப்பு அதாவது சர்வதேச மட்டத்திலிருந்து வரக்கூடிய அழுத்தத்திலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கான உதவியும் தேவைப்பட்டது.

இலங்கையில் 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர், சீனா தன்னுடைய முத்துமாலை வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும் பட்டுப்பாதை வேலைத்திட்டத்தை செய்வதற்கும் இலங்கை தீவில் விருப்பம் கொண்டிருந்தது.சீனா வழமையாக ஒரு நாட்டுக்குள் ஆதிக்கம் செலுத்துகின்ற போது அந்த நாட்டிற்குள் இருக்கும் மனித உரிமை மற்றும் ஜனநாயகம் சம்பந்தமாக கருத்து தெரிவிக்கமாட்டார்கள்.

சீனாவால் கிடைக்கின்ற உதவிகளைப் பெற்று இனவழிப்பு நடவடிக்கையை செய்வதற்கெடுத்த முடிவின் விளைவே இன்று சீனாவின் கப்பல் வருகையாகும்.

சீனாவினது செயற்பாடு இலங்கையை கடன் பொறிக்குள் தள்ளி விட்டுள்ளது. தனது பெயரை இலங்கைத் தீவில் தவிர்க்க முடியாதபடி கண்ணை மூடிக்கொண்டு கடன்களை வழங்கி, இலங்கை உண்மையில் கடனை கட்டலாமா என்பதை ஆய்வு செய்யாமலேயே அதற்கு மாறாக கடன்களை வழங்கினார்.

கடன் பொறிக்குள் விழுந்திருக்க கூடிய இலங்கை தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு ஒரு வழி இருக்கின்றது. தமிழ் மக்களுடன் தமிழ் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை எட்டவேண்டும் - என்றார்.





# புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளின்மீதான தடை நீக்கம்: ரணில் பொறி வைக்கிறாரா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**பொ**துவாக ரணில் விக்ரமசிங்கவின் காலம் என்றால் ஜனநாயகவெளி ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பதுண்டு. எனினும் இம்முறை அவர் அதிர்ஷ்ட லாபச் சீட்டில் ஜனாதிபதியாக வந்த பொழுது அவருடைய முதல் வேலை மக்கள் போராட்டத்தை முறியடிப்பதுதான். அதில் அவர் தற்காலிகமாக வெற்றி பெற்றிருக்கிறார். அந்த வெற்றிக்காக அவர் முன்னெடுத்த வழிமுறைகள் மனித உரிமை அமைப்புக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. அதாவது இம்முறை அவர் ஆட்சிக்கு வந்ததும் தென்னிலங்கையில் ஜனநாயக வெளி ஒப்பீட்டளவில் சுருங்கியது எனலாம். மக்கள் போராட்டங்கள் காரணமாக அந்த வெளி கடந்த மூன்று மாதங்களாக குறிப்பிட்டுச் செல்லக்கூடிய அளவுக்கு அதிகரித்து வந்தது. ஆனால் ரணில் அதைச் சுருக்கி விட்டார்.

இவ்வாறு தென்னிலங்கையில் மக்கள் எழுச்சிகளின் விளைவாக அதிகரித்து வந்த ஜனநாயக வெளியை குறுக்கிய ஒருவர், எப்படித் தமிழ் மக்களுக்கு ஜனநாயக வழியை அதிகப்படுத்துவார் என்று எதிர்பார்ப்பது? ஆனால் தென்னிலங்கை நிலவரமும் தமிழ்ப் பகுதிகளின் நிலவரமும் ஒன்று அல்ல. தென்னிலங்கையில் போராட்டத்தை தொடர்ந்து அனுமதித்தால் ரணில் தன்னுடைய ஆட்சியை பாதுகாக்க முடியாது. அதேசமயம் தமிழ் பகுதிகளில் அவ்வாறான போராட்டங்கள் எவையும் இடம்பெறவில்லை. மேலும் ஜெனிவா கூட்டத் தொடரை நோக்கி அவ்வாறு தமிழ் மக்களின் அரசியலில் ஜனநாயக வழியை அதிகப்படுத்த வேண்டிய தேவை ரணிலுக்கு உண்டு. கடந்த நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சிக் காலத்தில் அவர் அதைச் செய்தார். அவர் திறந்துவிட்ட அதிகரித்த ஜனநாயக வெளிக்குள்தான் தமிழ் மக்கள் பேரவை எழுச்சி பெற்றது, இரண்டு எழுக தமிழ்கள் இடம்பெற்றன.

இம்முறையும் அவர் அவ்வாறு தமிழ் மக்களுக்கு ஜனநாயக வெளியை அகலப்படுத்துவாரா என்று பார்க்க வேண்டும். கடந்த வாரம் அவர் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடைகளை அகற்றினார். அதை அவர் நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ஆட்சிக் காலத்திலும் செய்தார். அதைவைத்து அவர் ஜனநாயக வெளியை அதிகப்படுத்துகிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா? இல்லை. ஏனென்றால் புலம்பெயர் தமிழர்கள் இப்பொழுது நாட்டுக்குத் தேவை. புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டில் முதலீடு செய்தால் நாட்டின் செல்வச் செழிப்பை அதிகப்படுத்தலாம். நாடு இப்பொழுது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகள் தேவை என்பதனை ரணில் மட்டுமல்ல கோட்டாபயவும் ஏற்றுக் கொண்டிருந்தார். இப்பொழுது ரணில் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடைகளை அகற்றி இருக்கிறார். இது புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் ஓர் அழைப்பு.

இந்த அழைப்புக் குறித்து புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் என்ன செய்ய வேண்டும்?

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டில் முதலீடு செய்வதற்கு முண்டியடித்துக் கொண்டு வரத் தேவையில்லை. நிதானமாக முடிவெடுக்கலாம். இந்த அரசாங்கமும் ஒரு நாள் மாறும். மாறும்போது எப்படி கோட்டாபய வந்ததும் ரணில் தடை நீக்கிய அமைப்புக்கள், தனி நபர்கள் மீண்டும் தடை செய்யப்பட்டார்களோ, அப்படி இந்த நிலையும் மாறலாம். எனவே புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் விழிப்பாக இருக்க வேண்டும். தமிழ் முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவது என்று சொன்னால் அதற்கு ஓர் அரசியல் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களை நாட்டின் பொருளாதாரத்தில் பங்காளிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது தமிழ் மக்களை முதலீட்டாளர்களாக இணைப்பதற்கு பதிலாக தமிழ் மக்களை அரசியல் பொருளாதார பங்காளிகளாக இணைக்க வேண்டும். அதற்கு முதலில் அரசியல் தீர்வு ஒன்று வேண்டும்.

இப்பொழுது முதலீடு செய்தவர்கள் சில ஆண்டுகளின் பின் அவற்றை திருப்பி எடுத்துக் கொள்ளும் ஒரு நிலைமை வரக்கூடாது. எனவே இனப் பிரச்சினைக்கு தீர்வு தரப்படாத ஒரு பின்னணிக்குள் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் கண்ணை மூடிக்கொண்டு ரணிலின் அழைப்பை ஏற்கத் தேவையில்லை. பதிலாக இத்தருணத்தை பயன்படுத்தி ரணில் விக்ரமசிங்கவின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம். ஒரு தீர்வை முதலில் கொண்டு வாருங்கள், அதற்குரிய நல்லெண்ண சூழலை முதலில் உருவாக்குங்கள். உதாரணமாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குங்கள், கைதிகளை விடுதலை செய்யுங்கள், காணிகளை விடுவியுங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிவாரணத்தை வழங்குங்கள். இவற்றின் மூலம் ஒரு நல்லெண்ண சூழலை பயமற்ற சூழலை ஏற்படுத்துங்கள். அதைத்தொடர்ந்து அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குங்கள். அதில் புலம்பெயர்ந்த தமிழர்களையும் பங்காளிகள் ஆக்குங்கள். ஒரு தீர்வு கிடைக்கட்டும். அதன் பின் நாங்கள் முதலீடு செய்கிறோம் என்று நிபந்தனை விதிக்கலாம்.

ரணில் விக்ரமசிங்க உள்நாட்டில் மிகவும் பலவீனமான ஒரு தலைவர். அவருக்கு மக்கள் ஆணை இல்லை. அது மட்டுமல்ல. மக்கள் ஆணையை இழந்த ஒரு நாடாளுமன்றத்துக்கு அவர் தலைமை தாங்குகிறார். மக்கள் ஆணையை இழந்த தாமரை மொட்டு கட்சியின் பெரும்பான்மையில் அவர் தங்கியிருக்கிறார். எனவே இனப் பிரச்சினை தொடர்பில் அவர் தமிழ் மக்கள் ஏற்கத்தக்க ஒரு தீர்வை முன் வைக்க முடியாது. அப்படி ஒரு தீர்வை முன்வைக்காதவரை புலம்பெயர் தமிழர்கள் நாட்டுக்குள் முதலீடுகளை கொண்டு வர முடியாது.

தமிழ்மக்கள் ஏன் புலம்பெயர்ந்தார்கள்? ஏனென்றால் நாட்டுக்குள் பாதுகாப்பு இல்லை என்பதனால்தான். கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக தென்னிலங்கையில் தமிழ் மக்களின் சொத்துக்களை குறி வைத்து தாக்குதல்களை நடத்தப்பட்டன. தென் இலங்கையில் ஒரு காலம் தமிழ் மக்கள் செழித்தோங்கி வாழ்ந்தார்கள். அது சிங்கள பௌத்த பெருந்தேசியவாதிகளின் கண்களை உறுத்தியது. இந்த பொறாமை காரணமாகத்தான் அவர்கள் தென்னிலங்கையில் நடந்த ஒவ்வொரு இன அழிப்புத் தாக்குதலின் போதும் தமிழ் மக்களின் சொத்துக்களைக் குறி வைத்துத் தாக்கினார்கள். அதைத்தான் பின்னாளில் முஸ்லிம்களுக்கும் செய்தார்கள். தென்னிலங்கையில் சிங்களவர்கள் அல்லாத ஏனைய இனங்கள் நிதி ரீதியாக செழித்தோங்குவதைக் கண்டு சகிக்க முடியாத ஒரு கூட்டு மனோ நிலை சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்திடம் உண்டு. அது இப்பொழுது மாறிவிட்டதா?

அந்த மனநிலையின் விளைவாகத்தான் தமிழ் மக்கள் தென்னிலங்கையில் இருந்து வெளியேறும் ஒரு நிலைமை ஏற்பட்டது. ஆனால் புலப் பெயர்ச்சியானது சிங்கள பெருந்தேசிய வாதம் கற்பனை செய்ய முடியாத வேறு ஒரு வளர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. புலம் பெயர்ந்து சென்ற சென்ற தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் மிக விரைவாக தங்களை ஸ்தாபித்துக் கொண்டார்கள். நிதி ரீதியாக செழித்தோங்கினார்கள். சில தசாப்தங்களுக்கு முன்பு ரூபாய்களோடு முதலாளிகளாக காணப்பட்டவர்கள்,புலம்பெயர்ந்த பின் டொலர்களை விசுக்கும் பெரு வணிகர்களாக மாறினார்கள்.எந்தத் தமிழர்களை தென்னிலங்கையில் இருந்து அகற்ற வேண்டும் என்று திட்டமிட்டு இன அழிப்பு முன்னெடுக்கப்பட்டதோ, அதே தமிழர்கள் இப்பொழுது கொழும்புக்கு திரும்பி வந்து தனது டொலர்களால் காணிகளையும் கட்டிடங்களையும் விலைக்கு வாங்குகிறார்கள். சிங்கள மக்கள் விற்கும் காணிகளை வாங்கி அங்கெல்லாம் அடுக்குமாடித் தொடர்களைக் கட்டி வருகிறார்கள். இங்கே ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

எதிரிசிங்க குரூப் ஒ்.ப் கொம்பனி என்று அழைக்கப்படும் ஒரு பிரம்மாண்டமான வணிக நிறுவனம் தென்னிலங்கையில் வங்குரோத்து நிலையை அடைந்தது. நூற்றுக்கணக்கான நகைக்கடைகள், சுவர்ணவாகினி என்று அழைக்கப்படும் ஊடக நிறுவனம் போன்றவற்றைச் சொந்தமாக கொண்டிருந்த எதிரிசிங்க குரூப் ஒ்.ப் கொம்பனி வங்குரோத்தானபோது அதை புலம்பெயர்ந்து வாழும் ஒரு தமிழ் பெரு வணிகர் விலைக்கு வாங்கினார். அவர் ஏற்கனவே ஒரு ஊடகப் பெரு வணிகரும் ஆவார். இவ்வாறு தென்னிலங்கையில் வங்குரோத்தாகும் கொம்பனியை விலைக்கு வாங்கும் அளவுக்கு தமிழ் மக்கள் நிதி ரீதியாகப் பலம் மிக்கவராக காணப்படுகிறார்கள். புலப்பெயர்ச்சி தமிழ் மக்களை ஒரு விதத்தில் சிதறடித்திருக்கிறது. இன்னொரு விதத்தில் உலகில் மிகவும் கவர்ச்சியான, பலம் வாய்ந்த ஒரு டயஸ்பொறவை உருவாக்கி இருக்கிறது. இந்த வளர்ச்சியை சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் கணித்திருக்கவில்லை. அதன் விளைவாகத்தான் புலம்பெயர்ந்த தமிழர்களை நாட்டில் முதலீடு செய்யுமாறு கோட்டாவும் கேட்டார். இப்பொழுது ரணிலும் கேட்கிறார்.

மேலும் ஜெனிவாவில் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பது புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள்தான். எனவே இவர்களோடு சுமுகமான உறவை வைத்துக் கொள்வதன் மூலம், அரசாங்கம் ஜெனிவாவில் தனக்கு ஏற்படக்கூடிய நெருக்கடியின் அளவைக் குறைக்கலாம்.

ஆனால் எந்தக் காரணத்தால் தமிழ் மக்கள் தென் இலங்கையில் இருந்து துரத்தப்பட்டார்களோ அந்த காரணங்களை அகற்ற ரணில் விக்ரமசிங்க தயாரா என்ற கேள்விக்கு விடை இல்லாமல் புலம்பெயர்ந்த தமிழர்கள் நாட்டில் முதலீடு செய்ய முன்வரக்கூடாது. அது போலவே ஜெனிவாவில் அரசாங்கத்தின் மீது நெருக்கடியைப் பிரயோகிக்கும் செய்முறைகளையும் நிறுத்தக்கூடாது.

இந்தவிடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலில் ஓர் அமைப்பாகத் திரள வேண்டும். அதன்பின் அந்த அமைப்பானது அனைத்துலகை வளமைகளின் ஊடாக அரசாங்கத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்பொழுது இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு முக்கிய முன் நிபந்தனையாக முன் வைக்கலாம். தனித்தனி அமைப்பாக தனிநபர்களாக அரசாங்கத்தோடு டீல் களுக்குப் போவதற்கு பதிலாக ஒரு அமைப்பாக திரண்டு அதைச் செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல, நாட்டுக்குள் முதலீடு செய்வது என்பது இலங்கைத் தீவின் பொருளாதாரத்தில் தமிழ் மக்களும் பங்காளிகளாக மாறுவது மட்டுமல்ல. அதற்குமப்பால். அதைவிட ஆழமான பொருளில் தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியும் அதுவாகும். தமிழ்மக்கள் தங்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவதற்கு புலம்பெயர்ந்த தமிழ் முதலீடுகள் அவசியம். அந்த முதலீடும் தேச நிர்மாணத்தின் ஒரு பகுதிதான். யூதர்கள் கடந்த நூற்றாண்டில் அவ்வாறு முதலீட்டின்மூலம் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பினார்கள். அதுதான் இஸ்ரேல். எனவே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மற்றும் அமைப்புகள் இலங்கைத் தீவின் பொருளாதாரத்தில் பங்காளிகளாவது என்று சொன்னால், முதலில் இனப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். அதேசமயம் அந்த முதலீடு தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகவும் அமைய வேண்டும்.





# புலம் பெயர் தமிழர்களின் கவனத்திற்கு! வாசுதேவன் பேசுகின்றார்

- வி.தேவராஜ் -
மூத்த ஊடகவியலாளர்

- "அகப்பை அவன் கையில்"
இன்றும் அதே நிலைதான் மாற்றமின்றி தொடர்கின்றது.

புலம்பெயர் தமிழர்கள் மீதான தடை நீக்கம் குறித்த விடயம் பேசுபொருளாக உள்ளது.

இந்தத் தடை நீக்கத்தின் மூலம் தடை நீக்கப்பட்ட புலம் பெயர் அமைப்புகள் சாதிக்க கூடியது என்ன? இதன் மூலம் தமிழ் மக்கள் அடைந்து கொள்ளக் கூடிய அனுகூலங்கள் என்ன?

புலம்பெயர் தமிழர்கள் மீதான தடையை நீக்கியதன் மூலம் இலங்கை அரசாங்கம் குறிப்பாக ரணில் - ராஜபக்ஷக்கள் அரசாங்கம் சாதித்துக் கொள்ள முயல்வது என்ன? தமிழ்மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் ரணில் - ராஜபக்ஷக்கள் அரசாங்கம் கூற வருகின்ற செய்தி என்ன?

இலங்கையில் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறுகின்ற அரசாங்கங்கள் காலத்துக்குக் காலம் தமிழர் விவகாரத்துடன் தொடர்புடைய விடயங்களில் தமது நலன்களுக்காக இவ்வறைான முடிவுகளை அறிவிப்பதும் அந்த முடிவுகளை நடைமுறைப்படுத்தாதுவிடுவதும் மீண்டும் புதிது புதிதாக முடிவுகளை அறிவிப்பதும் வழமையான ஒன்று. இலங்கை அரசாங்களின் இவ்வாறான நகர்வுகளின் ஒரு நீட்சியே புலம்பெயர் தமிழர்கள் மீதான தற்போதைய தடை நீக்கம் ஆகும். ரணில் - ராஜபக்ஷக்கள் அரசாங்கம் தமது நலன்களுக்காக நாளை இதனை மாற்றிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்றைய ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க அன்று பிரதமராக அன்றைய ஜனாதிபதி மைத்திரிபாலசிரிசேனவுடன் நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்தபோது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு தோற்றுவிக்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தைக் கொண்டுவருவதில் தமிழ்மக்களின் பங்களிப்பு குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் பங்களிப்பு மிக அளப்பரியதாக இருந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தை தாமே கொண்டுவந்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நெஞ்சை நிமிர்த்தி பிரகடனப்படுத்திக் கொண்டிருந்த காலம். இந்த ஆரவாரங்களுக்கு மத்தியில் ஜநா மனித உரிமை சபையில் "தகர்ந்து போகும் வாக்குறுதிகளுடன் வரவில்லை" என்று அப்போதைய வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டார். அந்த வாக்கறுதிகளுக்கு என்ன நடந்தது என்பதுபற்றி தமிழ் மக்களுக்கு குறிப்பாக புலம் பெயர் தமிழர்களுக்கு நன்றாகவே தெரியும்.

அந்தவகையில் புலம்பெயர் அமைப்பக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடை நீக்கம் குறித்து கொண்டாடுவதற்கு என்ன உள்ளது.

2009 மே மாதம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்த பின்னர் இந்த அமைப்புகளில் பல மாறி மாறி பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டு மீண்டும் பலமுறை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்களின் பின்னர் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 16 அமைப்புகளையும் 424 நபர்களையும் தடை செய்தது.

நவம்பர் 20 அன்று நல்லாட்சி அரசாங்கம் எட்டு அமைப்புகள் மற்றும் அவற்றில் அங்கம் வகித்த 267 தனிநபர்கள் மீதான தடையை நீக்கியது. பின்னர் மீண்டும் கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி ஏழு அமைப்புகளையும் 389 நபர்களையும் தடைப் பட்டியலில் சேர்த்தது.

இதற்போது 6 அமைப்புகளும் 316 நபர்களும் மீண்டும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளை அடைவதற்கான பயணத்தில் 2014 இல் பட்டியலிடப்பட்டோம் 2015 லும்பட்டியலிடப்பட்டோம் 2021 இல் மீண்டும் பட்டியலிடப்பட்டோம். "2022 இல் மீண்டும் பட்டியலிடப்பட்டோம்" என்று சுரேந்திரன் "த ஜலன்ட்" நாளிதழுக்ககுத் தெரிவித்துள்ளார்.

மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் கட்சிகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறியே புலம் பெயர் அமைப்பகள் மற்றும் தனி நபர்கள் மீதான தடைகளை விதிப்பதும் பின்னர் சில அமைப்பகள் மீதான தடைகளை நீக்குவதும் மீண்டும் தடைவிதிப்பதுமாக நாடகமாடிக் கொண்டிருக்கின்றனர்.

இதுபற்றி டெய்லிமிரர் ஆகஸ்ட் 16 ஆம் திகதி (16.08.2022) தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வரும் கேள்விகளை முன்வைக்கின்றது.

தேசிய பாதுகாப்பிற்கு விரோதமான அமைப்புக்கள் என தடை செய்யப்பட்ட இரண்டு முறையும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ராஜபக்சவால்முடிவெடுக்கப்பட்டது.

அதே நேரத்தில் தடையை நீக்கும் முடிவுகளை ரணில் விக்கிரமசிங்கே முதல்முறையாக பிரதமராகவும் இப்போது ஜனாதிபதியாகவும் இருக்கும் போது எடுக்கப்பட்டுள்ளது. எனவே உளவுத்துறை மதிப்பீடுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் அல்ல அரசியல் முடிவுகள் என்று எவரும் முடிவு செய்வது இயல்பானதே.

கோட்டாபய ராஜபக்ச தொடர்ந்து ஜனாதிபதியாக இருந்திருந்தால் அதிகாரிகள் சமீபத்திய முடிவை எடுத்திருப்பார்களா? என்று கேள்வி எழுப்பும் "டெய்லி மிரர்" ஆசிரியர் தலையங்கம்.

எவ்வாறாயினும் ஒவ்வொரு முறையும் அரசாங்கத்தின் முடிவுகள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளின் இத்தகைய மதிப்பீடுகள் மற்றும் பரிந்துரைகளுக்கு காரணமாகும்.

எனினும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ராஜபக்ஷக்களின் ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்கள் காது கேளாத மௌனத்தையும் மீறி சமீபத்திய முடிவுக்கு உடன்படுகிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் எட்டு அமைப்புக்கள் மற்றும் 267 நபர்களை பட்டியலிலிருந்து நீக்கியபோது அவர்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்கள் என்பதையும் டெய்லி மிரர் ஆசிரியர் தலையங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

உண்மையில் "தேசிய பாதுகாப்பு" என்ற போர்வையில் அரசியல் தலைமைகள் மேற்கொள்ளும் தீர்மானங்களே இவை. இந்த தீர்மானங்களுக்கும் தேசிய பாதுகாப்புக்கும் சம்பந்தம் இருப்பதாக தெரியவில்லை. கடந்த கால தடைகள் தடை நீக்கம் என்பன மாத்திரமல்ல தற்போதைய தடை நீக்கமும் இதனையே உணர்த்தி நிற்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது 2010 ஆம் ஆண்டளவில் புலம் பெயர் அமைப்புக்களில் ஒரு சில அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் அவரை வந்து சந்தித்தனர். தமிழர்களுக்கு உதவ வேண்டும் தமிழர் பகுதிகளில் முதலிட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடுதான் வந்தனர். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. வந்தார்கள் சென்றார்கள் என்பதாகத்தான் இருந்தது.

ஆனால் இவர்களின் வரவை வைத்து மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பரபரப்புச் செய்திகளாக்கி ஊடகங்களுக்குத் தீனி போட்டது. ஆனால் தமிழர் தாயகத்தில் ஒன்றும் நடைபெறவில்லை.

அண்மையில் நண்பர் ஒருவர் வீடியோ கிளிப்பொன்றை அனுப்பி வைத்திருந்தார். வெளி நாட்டில் இருந்து வடக்கில் முதலிடவந்தவர். அவர் தனது பெயர் வாசுதேவன் என்று குறிப்பிடுகின்றார். 40 வருடங்களுக்கு மேல் வெளி நாட்டில் வசித்துவருவதாகவும் சொந்தக் கம்பெனி வைத்திருந்ததாகவும் ஓய்வு பெற்று தாயகம் திரும்பி தாயகத்தில் முதலிட்டு தொழில் தொடங்க வந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

நோயாளியான ஒருவர் சிகிச்சையின் பின் மீள் எழ அதாவது பழைய நிலைக்குத் திரும்பும் நிலை உள்ளது. அந்த recovery period போர்க்குப் பின் தமிழர் பகுதிகளில் நடைபெறவில்லை. இதனால்தான் வட பகுதியில் பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

இவைகளை கருத்திற் கொண்டு வட மாகாணத்திற்கு FDI நேரடியாக வெளி நாட்ட முதலீடுகளைக் கொண்டுவந்த தொழிற்துறையை தொடங்குவதற்கு 2012 ஆம் அண்டில் இலங்கைக்கு வந்தேன் என்று கூறும் திரு. வாசுதேவன் இதற்கென பண்ணை கடலோரம் ஆய்வுகளை மேற்கொண்டதாகக் குறிப்பிடுகின்றார். இந்த திட்டத்தில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிட திட்டமிடப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் இந்தத் திட்டத்திற்கு எவ்வளவோ முயற்சித்தும் அனுமதி வழங்கப்படவில்லை என்று குறிப்பிடுகின்றார்.

ஆவ்வேளையில் புலம் பெயர்ந்து வாழும் அவருடைய பல நண்பர்கள் பல பில்லியன் அமெரிக்க டொலர்களை வடக்கில் முதலிட விருப்பம் தெரிவித்தனர் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இறுதியில் அவர் ஊவாவில் சென்று முதலிட்டதாகவும் அங்கு தொழிற்துறையைத் தொடங்க எந்தவித தடைகளும் இருக்கவில்லை என்றும் திரு. வாசுதேவன் குறிப்பிடுகின்றார். நான் தமிழன். தமிழர் பகுதியில் முதலிட தனக்கு அனுமதி இல்லை என்று குறிப்பிடுகின்றார்.

2016 இல் பூநகரி மண்ணித்தலையில் முதலிடுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்ட போதும் அதற்கும் அனுமதி கிடைக்கவில்லை. குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளுடன் 15 PROJET களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என திரு. வாசுதேவன் குறிப்பிடுகின்றார்.

கனடா நாட்டைச் சேர்ந்த ஒருவர் வடக்கில் உப்பளம் அமைப்பதற்காக இரண்டரை வருடங்கள் முயற்சித்தும் அனுமதி கிடைக்காமையால் உப்பளம் அமைக்கும் திட்டத்தையேக் கைவிட்டுச் சென்றுவிட்டார் என்றும் திரு. வாசுதேவன் சுட்டிக் காட்டுகின்றார்.

இந்த நிலைமையில் தமிழர் பகுதிகளுக்கு எவ்வாறு வெளி நாட்டு முதலீடுகள் வரும் தமிழர் பகுதிகள் அபிவிருத்தியாகும் பிரச்சனைகள் தீரும் என கேள்வி எழுப்பினார்.

புலம்பெயர் தமிழர்களே அமைப்புக்களே இதுதான் இலங்கை சிங்கள அரசாங்கங்களின் நிலைப்பாடு.

திரு. வாசுதேவனின் உரையைக் கேட்டபோது 1977 ஆம் ஆண்டென நினைக்கின்றேன் அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆற்றிய உரை மீண்டும் எனது காதுகளில் ஒலித்தது.

"அகப்பை அவன் கையில்"

இன்றும் அதே நிலைதான் மாற்றமின்றி தொடர்கின்றது.

Email : vathevaraj@gmail.com

REACHING
7 MILLION
CANADIAN READERS
WEEKLY



Diversity is our Strength!

NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA INC.
Canada's Other Voices

NATIONAL ETHNIC PRESS & MEDIA COUNCIL OF CANADA
Conceil national de la presse et des medias ethniques du Canada
CANADA'S OTHER VOICES

# இந்து சமுத்திரத்தில் தமது ராஜாங்கத்தை நிலைநிறுத்திவதில் இதுவரை பனிப்போர் செய்த சீன-இந்தியத் தரப்புக்கள் தற்போது மோதிக்கொள்கின்ற நிலை?

**இருளப்பன் ஜெகநாதன் - சுயாதீன ஊடகவியலாளர்**



ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இந்து சமுத்திரத்தின் தனது ராஜாங்கத்தை நிலைநிறுத்திவதில் இதுவரை பனிப்போராக இருந்து வந்த சீனா இந்திய ராஜதந்திர போர் இன்று நேரடியாகவே மோதிக்கொள்கின்ற நிலை உருவாகியுள்ளது.

ஹம்பாந்தோட்டை கடற்பரப்பில் சீன கப்பல் Yuan Wang 5 நங்கூரமிட்டுள்ள நிலையில், இந்தியாவின் இராமேஸ்வரம் கடலில் இந்திய கடற்படையினர் ஹெலிகாப்டர் இராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் பகுதியில் தாழ்வாக பறந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்திய செய்திகளின் தகவல் படி இந்திய கடலோர காவல் படைகள் முகாம்கள் அமைத்து இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை பகுதியில் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகிறது.

சீன தொழில்நுட்ப ஆய்வுக் கப்பல் ஒன்று இலங்கையில் நிறுத்தப்பட்டுள்ளதால், அது இந்திய எல்லை பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுட்டுள்ளதாகாவே உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

INDO SRI LANKA ஒப்பந்தப்படி இரு நாட்டு பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் வகையில் இரு நாடுகளும் நடந்து கொள்ள கூடாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிபந்தனையாகும்.

எனினும் சீன கப்பல் இலங்கை கடல் எல்லையில் இருந்து 600 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் போதே நாம் ஒரு சிறிய நாடு பூகோள ராஜதந்திர உறவுகளின் நலன் கருதி தற்போது உங்கள் Yuan Wang சீன கப்பலின் வருகையை தள்ளிப்போடும் படி இலங்கை அரசாங்கம் சீனாவிடம் கேட்டு கொண்டுள்ளது.

பின்னர் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் ஜனாதிபதி ரணில் விசிரமசிங்கேவுடன் நேரடியாக தொடர்பு கொண்டு குறித்த கப்பலை உழவார அனுமதிகே வேண்டும் எனவும் இல்லை எனில் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என கடும் தொணியில் கூறியதாக சர்வதேச ஊடக தரவுகள் கூறுகின்றன. இச்செய்தியினை இலங்கையின் எந்த ஊடகமும் பதிவு செய்ய வில்லை.

அதன் பிறகே எரிபொருள் தேவைக்காக இந்த கப்பல் இலங்கை கடல் எல்லைக்குள் நங்கூரமிட்டுள்ளது என்று இலங்கை அரசு கூறியது.

ஏற்கனவே எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்ற இலங்கையில் சீன கப்பல் ஒன்றின் வருகைக்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கம் வேடிக்கையானது.

1971 காலப்பகுதியில் பாகிஸ்தானின் போர்க்கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கு இந்திய கடல் மற்றும் வான் எல்லை பயன்பாட்டுக்கு அனுமதி மறுத்தது.

அதனை தொடர்ந்து பாக்கிஸ்தான் இலங்கை கடல் எல்லையை பயன்படுத்தி தனது தேவையை பூர்த்தி செய்து கொண்டது.

அதன் பின்னரே வடக்கு கிழக்கின் (LTTE) ஆயுத குழுக்களின் எழுச்சிக்கு இந்தியா நேரடியாகவும் மறைமுகமாகவும் பேராதரவு வழங்கி வந்தது என்பது பழைய வரலாறு.

இந்தியாவின் கடுமையான அழுத்தம் அமெரிக்கா மூலம் இந்திய கொடுத்து வரும் மேலதிக ராஜதந்திர அழுத்தங்கள் மத்தியிலும் சீனாவின் போர் கப்பல் இலங்கை கடல் எல்லையில் கம்பீரமாய் நங்கூரமிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஜப்பானின் முதலீட்டு திட்டங்களை ரத்து செய்துள்ளது.

இலங்கையை தன் கட்டுப்பாட்டில் வைக்கவும் சீன போன்ற நாடுகள் இலங்கையை கேந்திரமாய் கொண்டு செயல்படுகின்ற நிலைமையை தடுக்கவும் இந்திய விமானங்களை இலங்கைக்கு அனுப்பியும் உளவு பார்ப்பது, அரசாங்கத்துக்கு அமெரிக்கா ஊடாகவும் நேரடியாகவும் அழுத்தம் கொடுப்பதற்கு அப்பால் வேறு என்ன திட்டங்களை செய்யவிருக்கிறது என்பதை மேலும் சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தை இலங்கை எந்தளவு கையாளப்போகிறது என்பதை பொறுத்தே தீர்மானிக்கப்பட போகிறது.

மறுபுறம் அம்பாந்தோட்டை துறைமுகம் துண்ணூற்றொன்பது ஆண்டுகள் சீனாவுக்கு அளித்ததன் பலன் இன்று சீன தனது கடல் சார்ந்த நடவடிக்கைகளை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் மேற்கொள்ளும் போது மிதமான ஒரு அணுகுமுறையை கையாள வேண்டிய கட்டுப்பாட்டில் இலங்கை உள்ளது.

மஹிந்த தரப்பு அதிகம் சீன சார்பு கொள்கை கொண்டு இருப்பதனால் இன்று மஹிந்த ஆட்சி இருந்திருந்தால் இந்தியாவின் நிலைப்பாடு வேறு விதமாய் இருந்திருக்க கூடும்.

மேலும் ரணில் விக்ரமசிங்கவின் அமெரிக்க சார்பு கொள்கை கொண்டமையால் சீனாவின் கப்பலை அனுமதிக்கும் அதேவேளை இந்தியாவின் உறவில் விரிசல் ஏற்படாத வண்ணம் ராஜதந்திர நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேபாளம் தாய்லாந்து என பல ஆசிய பசுபிக் நாடுகளை குறிவைத்து அங்கு பொருளாதார இஸ்திரமற்ற நிலையை உருவாக்கி அதன் மூலம் தனது நிலையான ஒரு ஊடுருவலை மையப்படுத்தும் சீனாவின் தந்திர உபாயத்தில் இலங்கையும் மாட்டி கொண்டது.

இதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் சிறப்பாய் துணைபோனது. அம்பாந்தோட்டை துறைமுகம் மத்தளன் விமான நிலையம், அதிவேக பாதை என கட்டற்ற நிதி உதவிகளை அளித்து பாரிய கடன் சுமைக்குள் இலங்கையை தள்ளிய சீனாவின் தந்திரம் வெற்றி பெற்றே உள்ளது.

எது எப்படி இருப்பினும் இந்திய தனது எல்லை நலன் சார்த்த விடயங்களில் எந்த வித விட்டுக்கொடுப்புகளும் செய்வதற்கு தயார் இல்லை.

சீனாவின் கைப்பொம்மை ஆகிப்போயுள்ள இலங்கையில் சீனா இனி வரும் காலங்களில் மேற்கொள்ள போகும் நடவடிக்கைகளை கண்காணித்து வரும் இந்தியா ஒரு எல்லைக்கு மேல் செல்லும் போது தனது நலனுக்காக எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும்? என்பதை கணிக்க முடியாது எனினும் உலகில் உள்ள கடற் படைகளில் பலம் வாய்ந்த படையணியை கொண்டுள்ள நாடுகளில் நான்காவது இடத்தில் இருக்கின்ற இந்தியாவின் எதிர் நடவடிக்கை இலங்கையில் பெரும் அதிர்வை ஏற்படுத்தும் என்பது மட்டும் உறுதி.

1970 ஆண்டுகளில் பாகிஸ்தானுக்கு கடல் எல்லை மற்றும் வான் பரப்பை பயன்படுத்த இலங்கை அரசாங்கம் அனுமதி அளித்தமையால் உள்நாட்டு (LTTE) ஆயுத எழுச்சிக்கு முழுமையான ஆதரவு நல்கிய இந்தியா, பின்னர் ராஜீவ் காந்தி கொலையை தொடர்ந்து புலிகள் குறித்து மாறுபட்ட கொள்கையை பிரயோகித்த அதே இந்தியா! தற்போது சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தை பொறுத்துக்கொள்ள இயலாமல் எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பது யார் அறிவார்?

அந்த நடவடிக்கையில் இலங்கையில் நலனை விடவும் இந்தியாவின் நலனே முதன்மை பெரும் என்பது மட்டும் உறுதி!

18.08.2022

கனடிய செய்திகள் Canadian News

## 10 Special Women in Toronto were honored, In celebration of Her Majesty Queen Elizabeth II, Platinum Jubilee

## கனடா ரொறன்ரோவில் மேன்மை தங்கிய இங்கிலாந்து மகாராணியின் 70வது ஆண்டு சேவையை முன்னிட்டு பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற 10 விசேட பெண்மணிகள்



10 Special Women in Toronto were honored today in an event, in celebration of Her Majesty Queen Elizabeth II, Platinum Jubilee, hostedby Mr. Ganesan Sugumar - President & CEO Sugshe Group of Companies. These 10 Special Women were nominated by MP Jean Yip from Scarborough, Agincourt because of their Community Services and outstanding contributions to their community.

This was a very graceful event and took place Monday, August 15th, 2022 from 5:30 – 7:30 PM at The Brighton Convention & Event Centre, located at 2155 McNicoll Avenue, Toronto.

Canada Uthayan congratulates the 10 Award Winning Special Women.

---------------------------------------

கனடா ரொறன்ரோ மாநகரில் மேன்மை தங்கிய இங்கிலாந்து மகாராணியின் 70வது ஆண்டு சேவையை முன்னிட்டு பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற 10 விசேட பெண்மணிகளுக்கு விசேட விருதுகள் மற்றும் பதக்கம் ஆகியன வழங்கப்பெற்றன.

கனடாவில் வெற்றிகரமான வர்த்தக நிறுவனங்களை நடத்திவரும் Sugshe Group of Companies நிறுவனத்தின் அதிபர் திரு. கணேசன் சுகுமார் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு 2155 McNicoll Avenue, Toronto, என்னும் விலாசத்தில் அமைந்துள்ள The Brighton Convention & Event Centre விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த பதக்கங்கள் மற்றும் விருதுகளை வழங்கும் சிபார்சை அரசாங்கத்திற்கு வழங்கியவர் பாராளுமன்ற உறுப்பினர். Jean Yip, from Scarborough, Agincourt அவர்களாவர்.

இன்றைய தினம் கௌரவிக்கப்பெற்ற 10 பெண்மணிகளின் பெயர்கள் பின்வருமாறு:


Mrs. Jeyanthy Vijayakumaran.
Mr. Meenadsiamma Thiyagarasakkurukkal.
Mrs. Sanjula Kulaveerasingam.
Mrs. Pathmalosani Logendralingam
Mrs. Anu Srivatsa
Mrs. Nirothini Pararajasingam
Mrs. Marlenna Rellin
Mrs. Joanne Linton
Mrs. Sharon Swenson
Mrs. Priatharshani Sivananthan



அன்று நடைபெற்ற பதக்கம் அணிவிப்பு வைபவத்தையும் விருது வழங்கல் வைபவத்தையும் கண்டு களிக்க அழைக்கப்ப்ட்ட விருந்தினர்களும் வருகை தந்திருந்தனர்.

நிகழ்ச்சிகளை திரு. குலா செல்லத்துரை மற்றும் திரு. கணேஸ் ஆகியோர் தொகுத்து வழங்கினர். விழா ஏற்பாட்டாளர் கணேசன் சுகுமார் அவர்களும் சிறப்புரையாற்றினார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மரிய மின்னா மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் சூ வொங் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் Jean Yip, from Scarborough, Agincourt ஆகியோரும் உரையாற்றினார்கள் - LJI Journalist Ganesh.












True Sound Live
வழங்கும்
இசைப்புயல்
AR RAHMAN
Live in Toronto
All Access Tour
August 28
Sunday 7pm
Scotiabank Arena
Toronto, Canada
www.ticketmaster.ca
FM 88.9
416-441-4100
east
FM 102.7
ATN
உதயன்


UTHAYAN INTERNATIONAL
AWARDS FESTIVAL-2022
Powered by
5635 Finch Ave E
Unit# 5, Toronto, ON
M1B 5K9, Canada
MAHAANS +1 (647) 704-4597
பாரம்பரிய முறைப்படி மரசெக்கில்
தயாரிக்கப்பட்ட நல்லெண்ணை, தேங்காய்
எண்ணை, கடலை எண்ணை இங்கு கிடைக்கும்.
16 வது ஆண்டில்
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2022
கனடா உதயன்
சர்வதேச
விருது விழா
Presented by
VIBRANT
HOSPITALITY
GROUP
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality
Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com
உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள
உதயன் விருதுகளின் பட்டியல்
UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD
UTHAYAN LEADERSHIP AWARD
UTHAYAN YOUTH ICON AWARD
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-SRI LANKA
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-TAMIL NADU
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-MALAYSIA
Saturday
October 15th,
2022
at 6.00 pm
விருது வழங்கலும் இராசப்போசன
விருந்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்
இவ்விழா நடைபெறும் மண்டபம்
Kennedy Convention Centre
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)
For More Information,
call 416 732 1608, or 647 762 9512



தமிழ்நாட்டுக்கு வெளியே அதிக மக்கள் பங்கேற்கும் மாபெரும் தெருவிழா

# SULLIVAN AUTO GROUP'S Tamil Fest

## தமிழர் தெரு விழா

POWERED BY iConnect Mortgages · Dominion Lending Centres

SUPPORTED BY Canada · Toronto

PROUDLY HOSTED BY Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

# AUGUST

SAT 27

SUN 28

# MARKHAM ROAD

## Between McNicoll & Passmore

## FREE ADMISSION

- 250 000 இற்கும் அதிகமானோர் பங்கேற்கும் நிகழ்வு
- தமிழர் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, உணவு மற்றும் வணிகத்தை பறைசாற்றும் நிகழ்வு
- கனடிய, ஈழ மற்றும் இந்திய கலைஞர்கள் பங்கேற்கும் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகள்
- சிறுவர் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகள்



TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
Brimell Toyota · Formula Honda · Morningside Nissan

POWERED BY SPONSOR
iConnect Mortgages · Dominion Lending Centres

ZONE SPONSORS
Computek College · HomeLife Future Realty Inc. · Nava Wilson · Pradon Silks · TD · Vibrant Hospitality Group · Wow! Wing House

MEDIA SPONSORS
ATN · East FM 102.7 · StarMetroland Media

COMMUNITY PARTNER

MARKETING PARTNER
Print Fast.ca

tamilfest.ca tamilfest@canadiantamilcongress.ca 416.240.0078

உங்களை வரவேற்க
நாங்கள் ஆவலோடு இருக்கிறோம்!

# வந்து விட்டது!!

1%

குறைந்த வட்டி விகிதம்
தங்கத்தின் மீது கடன்
**Lowest Interest in GTA**

# Pawn Bank Inc.

Your Satisfaction is Our Success

# உடனடி நகைக்கடன்

**இந்த சலுகை: (FINCH & MCCOWAN)**
**1571 SANDHURST CIRCLE #159D,**
**SCARBOROUGH - M1V1V2.**
**மட்டும் பொருந்தும்**

## தொடர்புக்கு: 416-754-7198

முன்னணி நிதி நிறுவனங்களுடன்
இணைந்து பணியாற்றுகிறோம்

**KANAGAAMBIKAI PAWN BROKERS: (BRIMLEY & EGLINTON) 2613 EGLINTON AVE E, TORONTO - M1K2S2. CALL US: 416-269-7198**

# இலங்கையில் சீன போர்க்கப்பல்கள்: இந்தியா விழிப்புடன் இருக்க ராமதாஸ் வலியுறுத்தல்



இலங்கையில் போர்க்கப்பல்களை அணிவகுக்க சீனா திட்டம் தீட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியா இதில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: ''இலங்கையின் அம்பன்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள சீன உளவுக்கப்பல் யுவான் வாங் 5, இந்தியாவின் எந்தெந்த நிலைகளை உளவு பார்க்குமோ? என்ற பதற்றம் அதிகரித்து வருகிறது. இந்த சூழலில், இனிவரும் காலங்களில் தனது போர்க்கப்பல்களை தொடர்ந்து அம்பன்தோட்டை துறைமுகத்திற்கு அணிவகுக்கச் செய்ய சீனா தீர்மானித்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

சீன உளவுக் கப்பலான யுவான் வாங் 5இன் இலங்கை வருகை எதிர்பாராமல் நடந்த ஒன்று அல்ல. இந்தியாவை உளவு பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று தான்.இந்தியாவின் எதிர்ப்பைத் தொடர்ந்து சீன உளவுக் கப்பலின் வருகைக்கு இலங்கை தடை விதித்த நிலையில், அந்தக் கப்பல் அதன் பயணத்தை தொடர்ந்திருக்கலாம். சீனக் கப்பலுக்குத் தேவையான எரிபொருள், அதில் உள்ள பணியாளர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்டவை போதிய அளவில் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அது இலங்கைக்கு வரத் தேவையில்லை.


ஆனால், கடந்த 11ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரை நடுக்கடலில் காத்திருந்து, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து அம்பன்தோட்டை துறைமுகத்திற்கு வந்திருப்பதிலிருந்தே சீனாவின் நோக்கத்தை புரிந்து கொள்ள முடியும்.உலகிலேயே மிக நீண்ட கடல் எல்லையைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் கனடா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கு அடுத்தபடியாக பத்தாவது இடத்தில் தான் சீனா உள்ளது என்றாலும் கூட, உலகின் மிக வலிமையான கடற்படையை சீனா தான் வைத்திருக்கிறது. தனது எல்லையைக் கடந்து உலகம் முழுவதும் கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தத் துடிக்கிறது.

அரபிக்கடலில் அமைந்துள்ள ஆப்பிரிக்க நாடான டிஜிபோட்டியில் தமது முதல் வெளிநாட்டு கடற்படை தளத்தை அமைத்துள்ள சீனா, பாகிஸ்தானின் கராச்சி, க்வாடார் துறைமுகங்களையும் பயன்படுத்திக் கொள்ள அனுமதி பெற்றுள்ளது. இந்தியப் பெருங்கடல் பகுதி தான் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பதால், அங்கு தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட விரும்பும் சீனா, அதற்காக இந்திய பெருங்கடல் பகுதியில் தனது கடற்படை தளத்தை அமைப்பதற்கு விரும்புகிறது. கம்போடியா, சீஷெல்ஸ், மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் தளம் அமைக்கும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில், அம்பான்தோட்டை துறைமுகத்தை தனது அதிகாரப்பூர்வமற்ற கடற்படை தளமாக மாற்றிக் கொள்ள சீன அரசு விரும்புகிறது.

சீனாவிடமிருந்து வாங்கிய கடனுக்காக அம்பான்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு இலங்கை கொடுத்துள்ளது. அம்பான்தோட்டை துறைமுகத்தை வணிக பயன்பாடுகளுக்காக மட்டும் தான் பயன்படுத்த வேண்டும்; ராணுவ பயன்பாட்டுக்காக பயன்படுத்தக் கூடாது என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றாலும் கூட, அதிகாரப்பூர்வமற்ற வகையில் கடற்படை தளமாக பயன்படுத்துவதை இலங்கையால் தடுக்க முடியாது. இது இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமையும்.சீன கடற்படையிடம் 355 போர்க்கப்பல்களும், நீர்மூழ்கி கப்பல்களும் உள்ளன. இந்தக் கப்பல்களை இனி ஒவ்வொன்றாக அம்பான்தோட்டை துறைமுகத்திற்கு கொண்டு வந்து சீனா நிறுத்தி வைக்கும். அதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருப்பதை இந்திய ராணுவம் மற்றும் வெளியுறவுத் துறை அதிகாரிகள் கவலையுடன் ஒப்புக் கொள்கின்றனர்.

இந்தியாவையொட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. கடந்த 2020ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை சீனாவின் 53 உளவுக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடல் பகுதியில் வலம் வந்திருக்கின்றன. எந்த நேரத்திலும் குறைந்தது 3 முதல் 5 கப்பல்கள் இந்தியப் பெருங்கடல் பகுதியில் இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய சூழலில், தமிழகத்திலிருந்து 100 கி.மீ.க்கும் குறைவான தொலைவில் உள்ள அம்பான்தோட்டை துறைமுகத்திற்கு சீன போர்க்கப்பல்களும் வரத் தொடங்கினால் அது இந்தியாவுக்கு, குறிப்பாக தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும். இதைக் கருத்தில் கொண்டு, தென்னிந்தியாவின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இலங்கை ஒருபோதும் இந்தியாவுக்கு சாதகமாக இருக்காது என்பது கடந்த காலங்களில் பலமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதால், அதை மனதில் வைத்து, இலங்கை குறித்த பாதுகாப்பு மற்றும் வெளியுறவு நிலைப்பாடுகளை மத்திய அரசு வகுக்க வேண்டும்.'' இவ்வாறு ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# தேசப்பற்று பெயரில் மக்களை திசைதிருப்பிவிட்டு பில்கிஸ் பானு வழக்கு குற்றவாளிகள் விடுதலை' : சீமான்



" தேசிய கொடி, தேசப்பற்று என்று அனைவரையும் திசை திருப்பிவிட்டு, பில்கிஸ் பானு வழக்கு குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். திருச்சி நீதிமன்ற வளாகத்தில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியது: " 16 ஆண்டுகள் சிறையில் இருந்த நேரு எங்கே? மோதிலால் நேருவின் மகன். மிகப்பெரிய பணக்காரரின் மகனான நேரு 16 ஆண்டுகள் சிறையில் இருந்தார். அவர் விடுதலை செய்யக்கூறி மன்னிப்புக் கடிதம் எழுதிகொடுத்தாரா? அவருடன் எப்படி சாவர்க்கரை ஒப்பிடுவீர்கள்?சாவர்க்கர்தான் உங்களுக்கு பெரிய அடையாளம் என்றால், 3 ஆயிரம் கோடிக்கு சிலை வைத்தீர்களே, குஜராத்தில் அதுபோல வைத்துக்கொள்ள வேண்டியதுதானே.

அவரை எப்படி வீரர் என்கிறீர்கள், இரண்டுமுறை மன்னிப்புக் கடிதம் எழுதி கொடுத்து, என்னை விடுதலை செய்தால், உயிருள்ளவரை பிரிட்டிஷ்காரர்களுக்கு விசுவாசமாக இருப்பேன் என்று எழுதிய கடிதம் இருக்கிறதா, இல்லையா? எனக்கு பென்சன் கொடுங்கள் என்று பென்சன் வாங்கியவர் வீரரா? இப்படித்தான் வரலாறு காலகாலமாக திரிக்கப்படுகிறது. திடீரென்று,அனைவரையும் தேசிய கொடியேற்று என அனைத்து மக்களையும் இந்த பக்கம் திரும்ப வைத்துவிட்டு, பில்கிஸ் பானுவை வன்புணர்வு செய்து, பச்சிளங் குழந்தையை சுவற்றில் அடித்து கொன்றவர்களை 15 ஆண்டுகளாகிவிட்டது என்று இன்று விடுதலை செய்திருக்கின்றனர்.

அவர்களை விடுதலை செய்ய முடிவு செய்துவிட்டு, அதற்காக ஒரு குழுவை அமைத்து அந்த குழுவை பரிந்துரை செய்ய வைத்து, நீதிமன்றம் விடுதலை செய்ய கூறவில்லையே..ஆனால், பேரறிவாளனுக்கு நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு, மற்ற 6 பேருக்கும் பொருந்தும் என்று கூறுகிறது. ஆனால், விடுதலை செய்யக்கூடாது என்று காங்கிரஸைவிட பாஜக அதிகம் கூவுகிறதே ஏன்? நீதிமன்ற சொன்னபிறகும், இவர்கள் யாரையும் விடுதலை செய்யவில்லை. ஆனால், அங்கு நீதிமன்றம் சொல்லவில்லை, யாரையும் கேட்காமல் தேசிய கொடி, தேசப்பற்று என்று அனைவரையும் திருப்பிவிட்டு 11 பேரையும் விடுதலை செய்துவிட்டீர்கள். இது எவ்வளவு பெரிய தேச குற்றம்" என்று அவர் கூறினார்.

# மனக்கசப்பை தூக்கி எறிவோம்; அதிமுக ஒன்றுபட இணைந்தே செயல்படுவோம்: ஓபிஎஸ் அழைப்பு



மனக்கசப்பை தூக்கி எறிந்துவிட்டு அதிமுக ஒன்றுபட இணைந்தே செயல்படுவோம் என்று ஓபிஎஸ் அழைப்பு விடுத்துள்ளார். முன்னதாக நேற்று, அதிமுக பொதுக் குழு செல்லாது, இபிஎஸ் இடைக்கால பொதுச் செயலாளராக அறிவிக்கப்பட்டது செல்லாது என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. கட்சியின் நிறுவனத் தலைவர் எம்ஜிஆர், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் செய்த தியாகங்களை சிந்தித்து அதிமுக ஒன்றுபட வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர், " அதிமுக என்ற மாபெரும் இயக்கத்தை தொண்டர்களுக்காக நிறுவனத் தலைவர் எம்ஜிஆர் உருவாக்கினார். அவர் உயிரோடும் இருக்கும்வரை, யாராலும் வெல்லமுடியாத இயக்கமாக, மக்களின் பேராதரவைப் பெற்று, மக்களின் மனம் கவர்ந்த முதல்வராக தமிழகம் மற்றும் இல்லாமல், இந்திய அரசியல் வானில் வலம் வந்தார். அவரது மறைவுக்குப் பின்னால், மறைந்த முதல்வர் ஜெயலலிதா கட்சியின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்று 30 ஆண்டுகாலம், அதிமுகவுக்கு வந்த வேதனைகள், சோதனைகள், இந்த இயக்கத்தை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்ற எதிர்கட்சிகளின் சதிவேலைகளை எல்லாம் முறியடித்து, எம்ஜிஆர் உயிரோடு இருந்தபோது, 17 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட அதிமுகவை, ஒன்றரை கோடி தொண்டர்களைக் கொண்ட மாபெரும் இயக்கமாக யாராலும் வெல்ல முடியாத இயக்கமாக அவர் உருவாக்கினார். 16 ஆண்டுகாலம் முதலமைச்சராக இருந்து நல்லாட்சி நடத்தினார். இந்த அசாதாரணமான சூழ்நிலையை எங்கள் மனங்களிலிருந்து அப்புறப்படுத்திவிட்டு கழகம் ஒன்றுபட வேணடும். எம்ஜிஆர், ஜெயலலிதா இந்த கட்சிக்காக செய்த தியாகங்களை எண்ணி, மீண்டும் தமிழகத்தை ஆளுகின்ற பொறுப்பை, மக்களுக்கு சேவையாற்றுகின்ற பொறுப்பை ஏற்க வேண்டும்.

அதற்கு உறுதியாக நின்று ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதுதான், எங்களுடைய உறுதியான நிலைப்பாடு.நடந்தவைகள் நடந்தவையாக இருக்கட்டும். அது எப்படியிருந்தாலும் பரவாயில்லை. எங்களுக்கு பாதிப்பாக இருந்தது என்று நான் எந்தக் காலத்திலும் சொல்லமாட்டேன். அதிமுக தொண்டர்களும், தமிழக மக்களும் அதிமுக ஒன்றுபட வேண்டும் என்ற ஒருமித்த கருத்துடன் இருக்கின்றனர். பல பகுதிகளில் இருந்து எங்களுக்கு அந்த செய்தி வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னால் ஏற்பட்ட கசப்புகளையும் யாரும் அதனை மனதில் வைக்காமல், தூக்கியெறிந்துவிட்டு, கழகத்தின் ஒற்றுமையே பிரதான கொள்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறினார்.

# ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை!

அகிலா தன் கடமைகளை முடித்துக் கொண்டு மாலையில் தான் வீடு திரும்ப ஆயத்தமானாள். நீலநிறத்'தில் சிகப்பு நிற போடர் வைத்த சேலையை நேர்த்தியாக சிறிய ப்ளிட் வைத்து அழகாகக் கட்டியிருந்தாள். அந்த சேலைக்கான அழகே அவள் கட்டியதனால் தானிருக்கும் போலிருந்தது. அதற்கு ஏற்ற வகையில் ப்ளவுசும் நிறைய அலங்காரமில்லாது வட்டக் கழுத்து வெட்டி முனங்கைககுக் கீழ் மூன்று இன்ஞ் இருக்கும்படி முக்கால் கை வைத்து இடுப்புக்கும் வயிற்றுக்குமிடையே கால் வாசி இன்ஞ் அளவு கூட தெரியாதப்படி ரொம்பவும் மரியாதையான முறையில் தைக்கப்பட்டிருந்து. கழுத்தில் சிறிய மெல்லிய செயின் காதுகளில் மொட்டுக் கம்மல் ஒருகையில் சிறிய கைச்செயின் மூன்று இன்ஞ் உயரத்தில் காலணியும் போட்டு அழகான ஒரு சிவப்பு நிறமான ஹேண்ட் பேக்கை கையில் எடுத்தவாறு அலுவலகத்திலிருந்து வெளியே வந்தவள் தன் காரை நோக்கிச் சென்றாள்.

தானே காரைச் செலுத்திக் கொண்டு வீட்டுக்கு வந்தவள், கைகளுக்கு சனிசைடரைத் தடவிக் கொண்டே முககவச்துடனேயே குளியலறைக்குச் சென்று விட்டாள். குளித்து நீண்ட சட்டையை கொஞ்சம் சொகுசுக்காக தளர்வாக அணிந்து வந்தவள் தேனீர் தயாரிப்பதற்காக சமையல் அறைக்குள் புகுந்தாள். அவளைக் கண்ட மல்லிகா எப்படியம்மா இன்றைக்கு நாள் நல்லாயிருந்ததா? என்றவாறே இரவு உணவைத் தயாரித்துக் கொள்வதில் மும்முரமாய் இயங்கினாள். அகிலாவுக்கு இது ஒன்றும் புதிதல்ல. அவள் நினைத்துப் பார்க்காதளவிற்கு மாமியார் உட்பட சுற்றியுள்ள உறவுகள் ஒவ்வொருத்தருமே மிகுந்த அன்போடும் அக்கறையோடும் உறவாடி அந்த வீட்டில் எல்லோரையும் எல்லோரும் சந்தோசமாய் வைத்துக் கொள்வார்களை. அங்கே சந்தோசம் நிலைத்திருப்பதற்கு பல காரணங்கள் ஆதாரமாய் இருந்தாலும் வயதுப் போன தாத்தா, பாட்டி, மாமா, மாமி போன்றவர்களின் நல்ல நடைமுறைப் பழக்க வழக்கங்களும் மனசுகளும் தான் என்றால் அது பொய்யாகாது.

அகிலாவை மல்லிகா ஒருநாள் கோயிலில் தான் சந்தித்தாள். குடை வெட்டில் நீள் கை வைத்த மெருன் கலர் சுடிதாரில் சிறிய பருப்பளவில் பொட்டு வைத்து தலைமுடியை ஈரம் சொட்ட சொட்ட விட்டுப் பிண்ணி அடியில் பூல்பேண்ட் போட்டு ரொம்பவே பெண்ணுக்கேற்ற இலட்சனத்தோடு பக்தியாய் பிள்ளையாரை வணங்கிக் கொண்டிருந்தாள். அவளைக் கண்ட மல்லிகா தான் சுவாமியை வணங்கி பூசை முடித்த நிலையில் இருந்தமையால் அகிலா வெளியில் வரும்வரை கோயிலுக்கு வெளியே படியில் அமர்ந்து காத்திருந்தாள். அகிலாவும் பூசை முடித்து வெளியில் வந்ததும் "தான் மல்லிகா என்றும் நகைக்கடை உரிமையாளர் மாதவனின் மனைவி" என்றும் அறிமுகம் செய்துக் கொண்டு உரையாடலை ஆரம்பித்தாள்.

அகிலாவின் விபரங்களை எடுத்துக் கொண்டவள் தான் தொடர்பு கொள்ள விரும்பினால் அப்பா அம்மாவின் தொலைப்பேசிக்கு அழைப்புக் கொடுத்தால் பரவாயில்லையா? எனக்கேட்டுக் கொள்ளவே அகிலாவும் அதற்கு இணங்கிடவே தொலைப்பேசி எண்கள் கை மாறிக் கொள்ளப்பட்டன. பிறகு ஒரு புதன்கிழமை நாளில் மல்லிகா அகிலாவின் தந்தை குமரனோடு தொடர்பு கொண்டு உரையாடினாள். தனக்கு ஆண் பிள்ளைகள் இரண்டுபேரும் பெண் பிள்ளைகள் மூவருமாக ஐந்து பிள்ளைகளிருப்பதாகவும், மூத்தவன் அமுதன் தனியார் நிறுவனமொன்றில் தொழில் செய்வதாகவும், தற்போது அவனுக்குப் பெண் பார்ப்பதாகவும், அகிலாவைக் கோயிளில் கண்டதும் தனக்குப் பிடித்து விட்டதாகவும் கூறிப் பேசிடவே குமரனும் வீட்டில் கலந்துப் பேசி விட்டு அழைப்புத் தருகிறேன் என்று வைத்து விட்டார்.

குமரன் குமுதினி தம்பதியருக்கு மூன்று பெண் பிள்ளைகள் மட்டுமே. மூவரும் படித்துவிட்டு நல்ல தொழில்களோடு அழகாக கௌரவமாக வீட்டு சூழ்நிலமை நன்றாகப் போய்க் கொண்டிருந்தது. அகிலா தான் வீட்டில் மூத்த பிள்ளை. ஆக அகிலாவின் வீட்டாரும் விருப்பம் தெரிவித்திடவே நல்ல நாளில் பெண் பார்த்து அமுதனுக்கும் அகிலாவைப் பிடித்திடவே சுமுகமான முறையில் இருவீட்டார் சம்மதத்துடன் அமுதன் அகிலா திருமணம் நடந்தேறியது. அமுதனின் குடும்பச் சூழல் நன்றாகவே இருக்கின்றது. இதுவொரு நல்லக் குடும்பம் என்று பார்ப்போர் கூறிடுமளவிற்கு அமைந்திருந்தது.

அகிலாவிற்கும் அந்த குரும்பத்தோடு ஒட்டி உறவாடிட அவ்வளவு சிரமப்படத் தேவையிருக்க வில்லை. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொருத்தரையும் புரிந்து நடந்துக் கொள்ளும் முறைகளைத் தெரிந்து வைத்திருந்தார்கள். அமுதனும் அகிலாவை சுற்றி சுற்றி வந்தான். அவன் அன்பு அகிலாவிற்கும் அகிலாவின் அன்பு அவனுக்கும் இனித்திட இனித்திட இரசித்து வாழும் தன்மையே மேலாய்க் காட்டியது.

இருந்தும் தெளிந்த நீரோடையில் கல் விழுந்தது போல் திடீரென்று அமுதனின் மன நிலைக்
குழம்பிப் போய் இரண்டு மூன்று நாட்களாக முகம்' கொடுத்து பேசாமல் இருந்தவன் தனியறையில் இருவரும் சண்டைப் போட்டு இரண்டு நாட்கள் தொடரான பிரச்சினை நீடித்து, வீட்டு விறாந்தை வரை வந்து பெற்றோரும் மற்றோரும் நிற்க வைத்து கேள்விக் கேட்டு புத்தி சொல்லுமளவிற்கு இருவருக்குமிடையில் கோபமும் வைராக்கியமும் நிமிர்ந்து நின்று தலை விரித்தாடியது. கணவன் மனைவிப் பிரச்சினை இன்று நாளை சரியாகி விடும் என்ற நிலையில் மல்லிகாவும் நாகரீகம் கருதித் தலையிடவில்லை. அன்றொரு நாள் காலை அழுதழுது கண்கள் குளமாகிட மூக்குச் சிவந்து முகம் வீங்கி குணிந்த தலை நிமிராது யாரும் கண்டிடக் கூடாதென்பதில் கவனமாய் வேலைக்குப் போகப் புறப்பட்டாள் அகிலா.



எதேச்சையாக அவள் மாமியார் மல்லிகா ஏதோ ஒன்றைக் கேட்டிட, இவளும் குணிந்தவாரே பதில் சொல்லிட அவளது குரல் மாற்றம் மல்லிகாவுக்கு என்னவோப் போலாகி விட்டது. ஒருவீட்டில் எந்த ஒரு பெண்ணும் சந்தோசமாய் இருக்கும் வரைத்தான் வீடும் நிம்மதியாயிருக்கும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்ட மல்லிகா துடித்துப் போனாள். அகிலாவை ஆதரவாய்த் தழுவி ஏன் முகமெல்லாம் வீங்கிப்போய் ஒருவிதமாய் இருக்கின்றாய் உடம்புக்கு ஏதும் பிரச்சினையா அல்லது அலுவலகத்தில் ஏதும் சிக்கலா என அன்போடு விசாரித்திட தன் மாமியாரின் அன்புக்கும் ஆதரவுக்கும் துளியும் அருகதையற்ற தன் கணவனின் குணத்தைப் பற்றிய குறைகளைக் கூறிட முடியாது தடுமாறினாள்.

தன் நண்பனின் திருமணத்திற்குப் போய் வந்தவன் வந்ததிலிருந்து பெண் வீட்டார் நண்பனுக்கு வீடு கொடுத்து வியாபாரத்திற்கு காசு கொடுத்துத் தான் பெண்ணைக் கட்டிக் கொடுத்தார்களாம். அது போல் தனக்கும் மனைவி வீட்டிலிருந்து கிடைக்க வேண்டுமென்ற பேராசையிலும் வீடு, வாகனம், காசு என்று பெண் வீட்டில் வாங்கிக் கட்டிக் கொள்ள தகுதியற்றவனா?. இல்லையே எனக்கும் எல்லா தகுதியும் இருக்கின்றது. அகிலா வீட்டிலிருந்து இவை அனைத்தையும் பெற்றோரிடம் கேட்கும்படி மனைவியை வற்புறுத்தினான். தினமும் சண்டைப் பிடித்து அவள் நிம்மதியையும் குழைத்துக் கொண்டு அவன் நிதானம் நிம்மதி எல்லாவற்றையும் குழைத்துக் கொண்டு தடுமாறினான்.

திருமணப் பேச்சு ஆரம்பிக்கும் போதே குமரன் அகிலாவிற்கு குறிப்பிட்டளவு நகையும் திருமண செலவில் பாதியும் வீட்டு உபயோகப் பொருட்களும் தருவதாகக் கூறிய போதே அகிலா தன் பெற்றோருக்கு அறிவுறுத்தினாள். தயவு செய்து உங்கள் காலங்களில் போல் பொதுவாக அதைத் தருகிறோம் இதைத் தருகிறோம் என்றுக் கூறாது இது மட்டும் தான் தருகிறோமென்று பேசவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். அதனால் நீங்கள் பேசும் போது கட்டாயம் பொருட்களைக் குறிப்பிட்டு சொல்லுங்கள். ஏன் என்றால் இன்றையக் காலத்தில் சீதனம் சீர்வரிசை எல்லாம் தர மாட்டோம் பெண்ணை விரும்பினால் பெண்ணை மட்டும் கட்டிக் கொண்டு போங்கள் என அடம்பிடித்து நாம் சீதனத்தை எதிர்க்கின்றோம். வரதட்சனைக் கேட்டால் நாம் திருமணமே செய்துக் கொள்ள மாட்டோம் என்றெல்லாம் கூறி நிற்க மாட்டோம். பெண்ணைக் கொடுப்பவர்கள் சொல்லுக் கடனுக்கு இடம் வைத்து தினம் தினம் பிரச்சினையோடு வாழ ஆசைப்படாமல் நிம்மதியாய் அழகான கௌரவமான வாழ்க்கை வாழத்தான் நினைக்கின்றோம்.

இருந்தாலும் வீட்டு உபயோகப் பொருட்கள் எனும் போது இடத்திற்கு ஏற்றாட் போல் வேறுபடுகின்றது. முன்னைய காலம் போன்று சில்வர் செப்பு அலுமினியப் பாத்திரங்கலும், கட்டில் மெத்தை, தலையனை, பாய், பெட்சீட் என இக்காலத்தில் அடங்காது. நாம் வீட்டுச் சாமான்கள் என இவைகளைக் குறிப்பிட்டால் மாப்பிள்ளைக் குடும்பத்தார் ஹோம் தியேட்டர், ஏசி, வொசிங் மெசின், ப்ரிட்ஜ் என விலையுயர்ந்த நாகரீகப் பொருட்களை எதிர்பார்ப்பார்கள்.

நாமிதைப் பற்றியெல்லாம் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டோம். ஆக என்ன தருகின்றோம் எனக் குறிப்பிட்டு சொல்லி விடுங்கள்! எனக் கூறிய போது அமுதனின் தாயார் மல்லிகாவும் தந்தை மாதவனும் தமக்கு ஒன்றுமே வேண்டாம் அகிலாவை எமக்குப் பிடித்திருக்கின்றது எமது மூத்த மகனுக்கு மனைவியாகவும் எம் வீட்டுக் குல விளக்காகவும் மட்டும் தான் நாம் கேட்கின்றோம். என்ன கொடுக்கின்றீர்கள் எனக் கேட்டு அறிவுமிக்க பெண் பிள்ளைகளைக் கொச்சைப்படுத்தி எங்களையும் எங்கள் மகனையும் அசிங்கப்படுத்தி உங்கள் மகளை அழைத்துச் சென்றிட நாம் விரும்பவில்லை. மகனுக்கும் இதில் சம்மதமே! என அமுதனின் முகத்தின் முன்னேதான் பேசி முடித்தார்கள்.

இருந்தும் அகிலாவின் வீட்டார் அவர்களின் தகுதிக்கு ஏற்றாட்போல் நகைகள் வீட்டு உபயோகப் பொருட்கள் இத்தியாதி----- இத்தியாதி என நாம் கொடுப்போமென பேசி முடித்துத்தான் கொடுத்தார்கள். அதனால் நாம் எப்படிவாக்குத் தவறாதவர்களோ அது போன்று எம்மோடு சம்மந்தியாய் இணையும் மாதவன் குடும்பமும் வாக்குத் தவறாதவர்களாய் இருப்பார்கள் என்று முழுதாய் நம்பினார்கள். பலபேர் கூறியிருக்கின்றார்கள் தாம் எம்மைப் போன்று நல்லவர்கள் பட்டியலிலேயே மற்றவர் களையும் நம்பிச் சேர்த்துக் கொள்வது தவறு என்று. அதிகமானோரின் வாழக்கைத் தோல்விக்கு இந்த தப்பான எண்ணமும் ஒரு காரணம் என்றும். இருந்தும் இவர்கள் நம்பினார்கள்.

மல்லிகா அகிலாவைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அமுதன் கீழிறங்கி வந்துக் கொண்டே என்ன அருமை மருமகளைக் கொஞ்சிக் கொஞ்சியே என் தகுதியை மற்றவர்கள் முன் குறைத்துக் காட்டிடீங்களே அம்மா! என்னை எவ்வளவு செலவு செய்து படிக்கவைத்தீங்கம்மா. தொழில், வீடு, கார் என வசதியோடு இருக்கின்றேன். அதற்கேற்றாட்போல் வசதியுள்ள இடத்தில் தானே எனக்கு பெண் பார்த்திருக்க வேண்டும். இப்படி ஒன்றுமில்லாத தராதரமில்லாத குடும்பத்தில் சம்மந்தம் கலந்து என்னையும் அசிங்கப்படுத்தி என் எதிர் காலத்தையும் வீணாக்கிட்டீங்களே என்று கத்தினான். மல்லிகா துடித்துப் போனாள்.

அமுதன் நீ என்ன கதைக்கிறாய். யாருக்கு இப்படி பிழையானதொரு கருத்தை உனக்குள் உள் வாங்கச் செய்தது. உனக்கு என்ன குறை. எல்லா வசதியோடும் வாழ்ந்திடும் தகுதியோடிருக்கும் நீ ஏன் மற்றவர்களின் வசதி வாய்புகளை எதிர்ப்பார்க் கின்றாய். இதற்குத்தான் அகிலாவின் முகம் இரண்டு நாட்களாக வாடிப் போய் கவலை தோய்ந்திருந்ததா. அவளிடம் என்ன கேட்டாயென கேள்விகளை எழுப்பிக் கொண்டுப் போக அமுதன் உடனே நான் உங்களிடம் கல்யாணம் வேண்டுமெனக் கேட்டேனா? நீங்களே ஒரு பெண்ணைப் பார்த்து கட்டு என்றீர்கள். இது சரியா! வசதியான வீடு கார் பணமென்று தரக்கூடிய இடத்தில் பெண்' பார்த்திருக்களாம் தானே!. எனது நண்பனுக்கு வீடு, வியாபாரத்திற்கு பணம் இப்படியெல்லாமே கொடுத்துத்தான் பெண்ணைக் கட்டிக் கொடுத்திரு கின்றார்கள். நானும் அவனை விட எல்லாவற்றிலும் நிறைவாகத்தானே இருக்கின்றேன். எனக்கு மட்டும் நீங்கள் இப்படியொருத்தியை பார்த்து கட்டி வைத்திட்டிங்க.! இது சரியா.

மல்லிகாவிற்கு மகனை பளார் பளார் என நான்கு அரைக்கொடுத்து வீட்டை விட்டே விரட்ட வேண்டும் போலிருந்தது. ஆனால் அப்படி செய்திட முடியாதே! அகிலா வருத்தபபடுவாள். வீட்டின் மற்றவர் நிம்மதியெல்லாம் குழைந்து போய்விடும் அமுதனும் வைராக்கியமாய் அகிலா மீது வெறுப்பைக் காட்டிடத் துணிந்திடுவான். ஆகவே! இவனுக்கு மெதுவாகத்தான் எடுத்துச் சொல்ல வேண்டுமென முடிவு பண்ணியவள் இரு கண்களையும் சிறிது நேரம் மூடி அமைதியா கயிருந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

மகனை அன்போடு கட்டியணைத்து முத்தமிட்டு கதிரையில் அமரச்செய்தாள். அகிலா வையும் அமரச் சொன்னாள் இருவரும் சிறிதுநேரம் கண்களை மூடி உங்களை சுதாகரித்துக் கொள்ளுங்கலெனக் கூறி ஐந்து நிமிட நேரம் இவளும்' மௌனமாயிருந்தாள். பிறகு அமுதனைப் பார்த்து "ஏன் அமுதன் உன்னை யாரும் கண்களை கட்டி வைத்து பெண் பார்க்கக் கூட்டிப் போகவில்லையே! அதேப் போன்று பக்குவமில்லாத சிறுவயதில் உன்னைக் கேட்காமல் உனக்கு விருப்பமில்லாதவளைத் திருமணம் செய்து வைக்கவுமில்லையே!. அகிலாவுடன் பேசிப் பழக விடாது அந்த வீட்டு நிலவரத்தைத் தெரிந்துக் கொள்ளுமுன்பே அவசரப்பட்டு எதையும் செய்து வைக்கவுமில்லையே!. வசதியான குடும்பங்கள் நிறையவேயிருக்கின்றன. அதற்காக அந்தக் குடும்பத்து வசதியெல்லாவற்றையும்' எங்கிருந்தோ மாப்பிள்ளை என்றப்' பெயரில் வந்தவனுக்கு அத்தனை சீக்கிரமே கொடுத்து விட முடியாது தானே! ஏனென்றால் அந்தக் குடும்பத்தில் வேறு வேறு தேவைகளும் இருக்குமல்லவா.

(21ம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் நாட்டில் ஆண்டுதோறும் மிகவும் சிறப்பான முறையில் நடைபெறும் அனைத்துலக தமிழர் விளையாட்டு அணிகள் பங்குகொள்ளும் "தமிழீழ வெற்றிக்கிண்ணம்" போட்டியில் கனடியத் தமிழர் விளையாட்டுத்துறையின் கால்பந்தாட்ட அணிகளின் சாதனை.

தமிழரின் தேசியத் தலைமையால் 2001ம் ஆண்டு சுவிஸ் நாட்டை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ வெற்றிக்கிண்ணப் போட்டியின் முதலாவது வெற்றிக்கிண்ணத்தை கனடியத் தமிழர் கால்பந்தாட்ட அணி தனதாக்கிக்கொண்டது. அதன் பின்னர் இவ் ஆண்டு ஆகஸ்ட் 13 & 14ம் திகதிகளில் நடைபெற்ற தமிழீழ வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் கனடிய அணிகளாகிய இளையோர் அணி (Adult Champions) முதலாவது இடத்தையும், 21 வயதிற்குட்பட்டோர் (Under-21Runner-up) இரண்டாவது இடத்தையும், மற்றும் 13 வயதிற்குட்பட்டோர் (Under-13 Champions) முதலாவது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். இப்போட்டிகளில் சிறப்பாக **பங்குபற்றிய** அனைத்து கனடியத் தமிழ் கால்பந்தாட்ட வீரர்களுக்கும் கனடித் தமிழர் விளையாட்டுத் துறையினர் வாழ்த்துவதுடன், கால்பந்தாட்ட வீரர்களுக்கு மேலும் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, ஒன்றாறியோ மாகாணத்தில் பங்குபற்றி விளையாடிக் கொண்டிருக்கும் கனடியத் தமிழ் கால்பந்தாட்ட வீரர்களை கனடாவின் தேசிய மட்டத்தில் **பங்கேற்க** வைப்பதே CTSAன் இலக்கு.
















(20ம் பக்கத்தொடர்ச்சி)

# ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை!

அகிலாவிடம் நீ கேட்பது சீதனம் தானே!. நானே எத்தனையோ சீதனம் கேட்ட குடும்பங்களை அசிங்கப்படுத்தி வெறுத்திருக்கின்றேன். பெண்ணிடம் சீதனம் கேட்குமளவிற்கு உங்கள் யாரையும் கடவுள் முடமாய் படைக்கவில்லையே!. உனக்கு எல்லாத் தகுதியும் தராதரமும் இருக்கின்றதென்றால் அதில் முக்கியமான தகுதி அம்மாவின் நல்ல வளர்ப்பை வெளிப்படுத்தி மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாய் ஒரு மனைவிக்கு நல்லக் கணவனாய் பிறக்கும் குழந்தைகளுக்கு நல்ல அப்பாவாய், வளரும் சமுதாயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாய் இறை நம்பிக்கையுள்ள மனிதனாய் வாழ்ந்து சிறப்பித்திட முயற்சிப்பது தானே சரியாயிருக்கும்.

அதை விட்டுவிட்டு ஒரு மனைவியாய் ஏற்றுக் கொண்டவளை அடிமைப்படுத்தி தினம் தினம் அவளுக்கு கண்ணீரையும் வேதனையையும் கொடுத்து துன்புறுத்தி அவளுடைய நிம்மதியையும் இல்லாது செய்து உன் நிம்மதியையும் இழந்து அவள் சார்ந்தோரையும் உன் சார்ந்தோரையும் வேதனைப் படுத்தி வாழும் வாழ்க்கை நல்லாயில்லையே! போயும் போயும் கல்யாணம் என்ற ஒன்றுக்குள் புகுந்ததால் எல்லாமே தப்பாகிப் போனதேயென வாழ்க்கையின் சந்தோசத்தை இழந்து விடக் கூடாது. உனக்கும் அகிலாவுக்கும் எந்தப் பிரச்சினையுமில்லை. உன் பெறுமதி உனக்குத் தெரியாமல் போனதுதான் பிரச்சினை. இந்த வீட்டில் காலை மாலை விளக்கேற்றிக் கடவுளை வேண்டி ஆயுள் ஆரோக்கியத்தோடு சுகமான வாழ்க்கை வாழ்கின்றோம் என்றால் அதற்கு முக்கியக் காரணம் இந்த வீட்டிலிருக்கும் பெரியோர் முதல் சிறியோர் வரை பெண்களின் சந்தோசத்தை முக்கியமாய் கருதுவதால்தான். ஒரு பெண்ணை வீட்டிற்குள் வேதனைப்படுத்தி கண்ணீரைப் பார்த்து விட்டு ஒரு ஆனால் வெளியில் போய் நிம்மதியைத் தேட முடியாது என்ற உண்மையை உன் தாத்தா அப்பா இருவரும் தெரிந்து வைத்திருப்பதால்தான் என்பதைத் தெரிந்துக் கொள். அந்த விடயத்தை நீ ஏன் தெரிந்து வைத்திருக்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை.

நீ அகிலாவிடம் வீடு கார் பணம் என்பவற்றைக் கேட்டால் அதுவொன்றும் அவர்களுக்குப் பெரிய விடயமில்லை. ஏதோவொரு வகையில் உன் விருப்பத்தை மகளின் வாழ்வுக்காக சரிப்படுத்தி விடுவார்கள். நீ அதை அனுபவிப்பாய். ஆனால் அகிலாவால் அதை சந்தோசமாய் அனுபவிக்க முடியாதே! வீட்டாரை சிரமப்படுத்தி வந்தவற்றைப் பார்க்கும் போதெல்லாம் இப்படியொரு அடிமட்ட வஞ்சகக்காரனுக்கு மனைவியாய் வாழத்தான் வேண்டுமா என ஒரு முறைக்கு இருமுறை சிந்தக்கத் தோன்றிவிடும். அப்பொழுதான் கணவன் மனைவி மனசொத்துப் போக முடியாமல் பிரிவு என்றதொரு பிழையான பாதையை ஏற்படுத்திக் கொண்டு, செல்லும் வழித் தெரியாமல் நடுவில் தத்தளிக்க வைத்து விடுகின்றது. காலங்கள் வீணே சந்தோசமில்லாமல் ஓடிக் கொண்டேயிருக்கும். உனக்கான நல்லெண்ணம் உருவாகும்வரை காலத்துக்குக் காத்திருக்கத் தெரியாதுதானே!. நீ அம்மாவை மதிப்பாயானால் எல்லாப் பெண்களையும் மதிக்கக் கற்றுக்கொள். அதுதான் வாழ்க்கையில் எல்லா சந்தோசத்தையும் முன்னேற்றத்தையும் தர உதவும்.

யாரிடமும் எதையும் எதிர்ப்பார்க்காது உனக்கும் உன் மனைவிக்கும் உன்னை சார்ந்தவர்களுக்கும் உங்களிருவருக்கும் பிறக்கும் குழந்தைகளுக்கும் நல்ல கணவனாய் நல்ல அப்பாவாய் வாழ்ந்திடப் பழகிப் பார் அதுதான் சரியாயிருக்கும். பிரச்சினைகளை உருவாக்கி விட்டிடலாம். அதை தீர்த்துக் கொள்ள சரியானத் தெளிவான மனங்கொண்டவரிடம் பிரச்சனைப் போய் சேராவிட்டால் குறுக்கும் நெடுக்குமாய் வழிகளைச் சொல்லி வாழ்க்கைப் பாதையை திசைத் திருப்பி நாடகமாக்கி விட்டிடுவார்கள். இன்றைக்கு உனக்கு வீடு, கார், காசு வாங்காமல் கட்டினது கௌரவக் குறைவாய்த்தென்பட்டாலும் அவைகளை வாங்கிக் கட்டியிருந்தால் நாளை அதுவே உன் தலைக் குனிந்த வாழ்க்கைக்கு உறு துணையாயிருந்திடும் ஒரு பெண்ணின் கண்ணீரின் கீழ் நீ சந்தோசமாய் பயணித்திட நினைக்க வேண்டாம். அவளின் இதயம் நிறைந்த கணவனாய் செயற்பட்டு அவளின் புன் சிரிப்பைக் காணும் சந்தோசத்தோடு வீட்டை விட்டு வெளியில் சென்று வீட்டிற்குள் வா!. அதுதான் ஒரு இல்லற வாழ்க்கைக்கு வெற்றியாயிருக்கும். அவளுடைய மகிழ்ச்சி பலமடங்கு உயர்வை உனக்குத் தரும். அவளை மகிழ்ச்சியாய் வைத்திருக்கும் உன்னை கடவுள் முகம் பார்ப்பார். எல்லா சுகமும் தானேக் கிடைக்கும். வாழ்க்கை ஓர் தவம். வரம் கொடுப்பணை. இதை அதிகாரத்தாலும் ஆணவத்தாலும் வாழ நினைக்காது அறிவாலும் அன்பாலும் வாழ்ந்திட முயற்சிக்க வேண்டும். என பலவாறு மகனுக்கு அறிவுரைக் கூறி தெளிவுப் படுத்திய மல்லிகா அகிலாவைப் பார்த்து அவளது கீழ் தாடையைத் தனது வலது கையால் தூக்கித் தாங்கிப் பிடித்து நீயும் அமுதன் கூறியவற்றையெல்லாம் மனதில் வைத்து வருத்தப்பட வேண்டாம் நீங்களிருவருமே சிறியவர்கள். ஒருத்தரை ஒருத்தர் புரிந்துக் கொண்டு அன்பாய் ஆதரவாய் ஆசையாய் வாழ்க்கையை வழி நடத்திட பழகிக் கொள்ளுங்கள். நீயுமிந்தப் பிரச்சினையை உன் வீட்டார் வரைக் கொண்டு செல்ல வேண்டாம். அவர்கள் மனசு தாங்கமாட்டார்கள். அத்தோடு அமுதன் மேல் அவர்கள் வைத்திருக்கும் அன்பும் நம்பிக்கையும் மரியாதையும் குறைந்திடும். அமுதன் மேல் வைத்திருக்கும் மரியாதைக் குறையும் போது உங்களிருவராலுமே அவர்களிடம் முகம் கொடுத்து உறவாடிட சங்கடமாயிருக்கும். அதுவேயிரு குடும்பத் தாரிடையே இடைவெளியை ஏற்படுத்தி பகையை நிலைத்திட செய்திடும்.

எனவே இதுவரை நடந்த எல்லாவற்றையும் இருவருமே "ஒரு மழை பெய்ந்து ஓய்ந்து விட்டதாய் நினைத்து மறந்து விடுங்கள்". இப்படி அன்பாக அறிவுரைக் கூறிய மல்லிகாவைப் பார்த்து அகிலாவால் எப்படிப் பாராட்டுவதென்றேத் தெரியவில்லை. மகன்களுக்கு அம்மாயென்றால் இப்படித்தானிருக்க வேண்டும். இவர் அமுதனுக்கு மட்டும் அம்மாயில்லை. எத்தனையோ மகன்கள் வாழ்க்கையை பிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களுக்கெல்லாம் இப்படியான அம்மாக்கள் அமைய வேண்டும். இப்படியானவர்களால் தான் மகன்களை வாழவைக்க முடியும். எனக்கு இவர் மாமியார் வடிவிலான பெண் தெய்வம். நிறையப் பெண்களுக்கு இப்படியான தெய்வங்கள் கிடைப்பதால்தான் வாழ்க்கையை அனுபவித்து, ரசித்து மகிழ்ச்சியாய் வாழமுடிகின்றது. அன்போடிருக்கும் தன் மாமியாரைப் போன்ற தெய்வங்களிருக்கும் வரை மகன்களின் மருமகள்களின் வாழ்க்கைகள் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையாகவே அமைந்து விடும். அதேபோன்று அம்மா கூறிய அறிவுரைகளைக் கேட்டுக் கொண்ட அமுதனும் உயர்ந்த உள்ளம் கொண்டவரே!. இப்படியான அம்மாக்கள் கிடைப்பது தவமென்றால் நல்லக்கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் மகன்களும் மகள்களும் கூட ஆசீர் வதிக்கப்பட்ட மானிடம் தான். கடவுளுக்கு நன்றிகள் கோடி என மன நிம்மதியில் சந்தோசப்பட்டாள் அகிலா.

முற்றும்.

**- பவானி சச்சிதானந்தன்**

# ஜீவன் முக்தி 590

## நம்மைக் கடவுளாக்கும் கடவுள்

**யார் குரு? யார் கடவுள்?**
Who is a Guru? Who is God?

**ஞான சக்திகள் இப்பூமியில் உலாவிய இடங்களே தீர்த்தஸ்தலங்கள்**
The places where enlightened beings wandered are what we call holy shrines today

## நம்மைக் கடவுளாக்கும் கடவுள்

குரு சிவனா?
கடவுள் சிவனா?
யார் உயர்ந்தவர்?
சத்யம் 1
இருவருமே ஒருவர்தான்.
சத்யம் 2
இருவரில் ஒருவரைத்தான் உங்களால் நேரடியாகப் புரிந்துகொள்ள முடியும்.
சத்யம்

உங்களுக்கு நேரடியாய் உதவும் வகையில் தம்மை மாற்றியமைத்துக் கொண்ட கடவுளே உயர்ந்த குரு.

"யார் குரு? யார் கடவுள்?

கடவுளை நீங்கள் எப்படி குருவாக்கலாம்?" என்று நீங்களும் கேட்கலாம். ஒருவர் அப்படித்தான் என்னிடம் கேட்டார் "சிவன் கடவுளல்லவா? அவரைப் போய் குரு என்று சொல்கிறீர்களே?" என்று.

இதற்கு அழகான ஒரு நிகழ்ச்சியில் இருந்து விடை சொல்லலாம். விவேகானந்தர் ராமகிருஷ்ணர் பற்றிச் சொல்லி கொண்டிருந்தபோது "அவர் அவதார புருஷர் மிகப் பெரிய ஞானசக்தி" என்கிறார்.

அப்போது ஒரு சீடர் "ராமகிருஷ்ணரை குரு என்று சொல்லுங்கள். ஒப்புக்கொள்கிறோம். ஆனால் கடவுள் என்று ஏன் சொல்கிறீர்கள்? மிகவும் அதிகமாகத் தெரிகிறதே" என்கிறார்.

விவேகானந்தர் மிக அழகாக "கடவுள் என்றால் உனக்கு என்ன புரியும்?" என்று கேட்கிறார். சிறிது நேரம் கழித்து விவேகானந்தர் அந்தச் சீடருக்கு "கடவுள் என்றுஅவர் நினைத்துக் கொண்டிருக்கிற எல்லாமே சில கருத்துகளின் தொகுப்புதான் ' என்று புரிய வைத்தார்.

விவேகானந்தர் "நீ கடவுள் என்றால் என்னென்ன அதிக பட்சமாகக் கற்பனை செய்ய முடியுமோ அதை எல்லாம் தாண்டிய சத்தியத்தை வெளிப்படுத்தியவர் ராமகிருஷ்ணர்.

அதனால் கடவுள் என்று அவரை நான் சொன்னேன் என்றால் அது முழு மையான சத்தியம் மட்டும் அல்ல நீ புரிந்துகொண்டதை விட ஆழமான சத்தியம் அதில் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள் ' என்றார்.

ஏன் இதைச் சொல்லுகிறோம் என்றால் நாம் எல்லோரும் நினைக்கிறோம் "கடவுள் என்பது குரு என்பதைத் தாண்டிய ஒரு நிலை" என்று.

ஆழமாகப் பார்த்தீர்களானால் சத்தியம் என்பது இதுதான். உங்களைக் கடவுளாக்கும்வரை கடவுளுக்கு ஓய்வில்லை.

இந்தப் பிரபஞ்சத்தில் நடக்கிற ஐந்து காரியங்களை "பஞ்ச கிருத்தியங்கள் ' என்று சொல்வோம்.

உருவாக்குதல்
காப்பாற்றுதல்
அழித்தல்
மாயையிலே இட்டு மறைத்தல்
வெளியில் எடுத்து ஞானம் அருளல்.

இதுதான் கடவுள் செய்யும் ஐந்து காரியங்கள்.

நடராஜருடைய உருவத்தைப் பார்த்தீர்கள் என்றால் இந்த ஐந்து பெருங்காரியங்களைச் செய்வார்.

கையில் உள்ள உடுக்கையின் மூலமாக ஒலியை உருவாக்குதல் இடது கையில் இருக்கும் நெருப்பின் மூலமாக அழித்தல்:

வலது அபயகரத்தின் மூலமாகக் காத்தல்

முயலகன் என்ற அரக்கனை அழித்து அவன் மீது ஆடுகிற பாதத்தின் மூலமாக மறைத்தல்

தூக்கிக் காட்டிய திருப்பாதத்தின் மூலமாக இதைப் பற்றிக் கொள். ஞானம்: கிடைக்கும் என்று அருளல்.

இந்த ஐந்து செயல்களையும் பஞ்ச கிருத்தியங்களையும் நடத்தியவாறே அவர் செய்கிற தாண்டவம்தான் ஆனந்தத் தாண்டவம்.

இந்த ஐந்தையும் செய்துகொண்டே ஆடுகிற ஆனந்தக்கூத்து "ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக்கோனே வந்த காரியத்தில் கண்ணாயிரு தாண்டவக்கோனே" என்று இடைக்காடர் புகழுகிற ஆரியக் கூத்தை ஆடினாலும் இந்தக் காரியத்திலே கண்ணாயிருப்பார்.

இந்த ஐந்து காரியத்தையும் நடத்திக் கொண்டே ஆரியக் கூத்தை ஆடுபவர் அவர். இந்த ஐந்து காரியத்தையும் நடத்துகிற சக்தியைத்தான் பிரபஞ்ச சக்தி என்று சொல்கிறோம்.

முதல் நான்கு காரியத்தை நடத்துவதற்கு அவர் ஆன்ம சரீரம் நிர்வாண

சரீரம் சூட்சும சரீரம் என்கிற உயர் நிலை சரீரங்களில் இருந்துகொண்டே நடத்தி விடமுடியும்.

இதை இன்னும் ஆழமாய்ப் புரிந்து கொள்ள ஏழு சரீரங்களைத் தெளிவாக உணர்ந்துகொள்ளுங்கள்.

- முதலாவது ஸ்தூல சரீரம்: எலும்பாலும் சதையாலும் ஆனது ஸ்தூல சரீரம்.
- இரண்டாவது பிராண சரீரம்: நமக்குள்ளே ஓடுகிற சுவாச ஓட்டம்.
- மூன்றாவது மன சரீரம்: நமக்குள்ளே ஓடுகிற எண்ண ஓட்டம்.
- நான்காவது சூட்சும சரீரம்: நமக்குள்ளே ஓடுகிற உணர்ச்சி ஓட்டம்.
- ஐந்தாவது காரண சரீரம்: நாம் ஆழ்ந்த தூக்கத்திலே அனுபவிக்கிற நிலை.
- ஆறாவது ஆன்ம சரீரம்: நமக்குள்ளே ஆழ்ந்த அமைதி ஏற்படும்போது வருகிற நிலை.
- ஏழாவது நிர்வாண சரீரம்: ஞானம் அடைகிறபோது உணருகிற பிரபஞ்ச மயமாக மாறிய நிலை.

பிரபஞ்ச சக்தி முதல் நான்கு வேலைகளான உருவாக்குதல் ஆக்குதல் காப்பாற்றுதல் அழித்தல் மறைத்தல் இவற்றைச் செய்வதற்கு நிர்வாண சரீர நிலையில் இருந்தே செய்து விட முடியும்.

ஆனால் ஐந்தாவது வேலையாகிய ஞானம் அருளல் என்ற பணியைச் செய்ய வேண்டுமானால் "மனித உடல் ' தரித்தே ஆக வேண்டும்.

காரணம் என்னவெனில் முதல் நான்கு வேலையையும் செய்வதற்கு அதாவது பிரபஞ்ச சக்திக்கு உங்களை உருவாக்குவதற்கும் காப்பாற்றுவதற்கும் அழிப்பதற்கும் மாயையில் போடுவதற்கும் உங்களுடைய ஒத்துழைப்பு தேவையில்லை.

உங்களைக் கேட்டு உங்களுடைய ஆக்குதல் நடத்தப்படவில்லை.

ஒரு வேளை உங்களிடம் விண்ணப்பப் படிவம் கொடுத்து "நீங்கள் எங்கே பிறக்க வேண்டும்? என்ன? எது?" என்று டிக் செய்து கொடுக்கச் சொன்னால் நீங்கள் ஒவ்வொருவரும் கொடுக்கிற விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்குள் என்ன ஆகும்? கடவுளுக்கே ஆயுள் முடிந்துவிடும்.

ஆக்குதல் உங்களைக் கேட்டு நடத்தப்படவில்லை.

காப்பாற்றுதல் உங்களைக் கேட்டு நடத்தப்படவில்லை.

அழித்தல் உங்களைக் கேட்டு நடத்தப்படவில்லை.

மறைத்தலும் மாயையில் இடப்படுவதும் உங்களுடைய ஒத்துழைப்போடு நடத்தப்படவில்லை.

இவற்றுக்கெல்லாம் உங்களுடைய ஒத்துழைப்பு தேவையில்லை. ஆனால் ஞானம் அடைவதற்கு ஞானத்திலே மலர்வதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

மனிதனுடைய ஒத்துழைப்பு ஒப்புதல் தேவை என்பதனால் மனிதர்களுக்கு உணர்த்துவதற்காக மனிதர்களுக்குப் புரிகிற மொழியிலே பேசுவதற்காக மனித உடலாக அந்தப் பிரபஞ்ச சக்தி அவதரிக்கிறது.

மனித உடலில்தான் அந்தப் பிரபஞ்ச சக்தி இறங்கி வருகிறது. மனித உடலில்தான் அந்தப் பிரபஞ்ச சக்தி தம்மை வெளிப்படுத்துகிறது. இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது.

பிரபஞ்ச சக்தி முதல் நான்கு வேலைகளையும் செய்யும்பொழுது கடவுள் என்ற தன்மையில் நிர்வாண சரீரத்தில் இருந்து செய்துவிடுகிறது.

இந்தப் பிரபஞ்ச சக்தி ஐந்தாவது வேலையைச் செய்வதற்கு மனிதன் என்ற நிலையிலே குருவாக இறங்கி வரும் பொழுது நிர்வாண சரீரம் என்ற ஒரு சரீரம் மாத்திரம் இல்லாமல் ஏழு சரீரத்தையும் எடுத்து வருவதனாலே குரு என்று இறங்கி வந்த பிரபஞ்ச சக்திதான் கடவுள் என்கிற இறங்கி வராத பிரபஞ்ச சக்தியைவிட மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது... என்பதை நாம் ஆழமாய் உணர வேண்டும்.

நிர்வாண சரீரம் என்ற ஒரே ஒரு நிலையில் இருந்துகொண்டு நான்கு காரியங்களையும் நிகழ்த்துகிற சக்தி, ஞானம் அருளுவதற்காக குருவாக இறங்கி வருகிறது உண்மையில் இறங்கி வரவில்லை. ஏறி வருகிறது.

இறங்கி வருகிறது என்ற வார்த்தையை விட ஏறி வருகிறது என்ற வார்த்தையைத்தான் நாம் உபயோகிக்க வேண்டும்.

மனிதனைக் கடவுளாக்க கடவுள் மனிதனாவதுதான் அவதாரப் பிறப்பு.

### ஞான சக்திகள் இப்பூமியில் உலாவிய இடங்களே தீர்த்தஸ்தலங்கள்

சூருவாக வெளிப்படும்பொழுது அந்தச் சக்தியோடு நீங்கள் தொடர்பு கொள்வதைப் போல அந்தச் சக்தியோடு இணைவதைப் போல கடவுளாக வெளிப்படுகிற சக்தியோடு நீங்கள் நேரடியாக இணைய முடிவதில்லை.

அதனால் ஈஸ்வரனை : குரு" என்ற வார்த்தையினால் சொல்லும்பொழுது அவர்மீது இருக்கும் பக்தியையும் அவருடைய நிலையைப் பற்றி உங்களுக்குப் புரியவைப்பதையும் உயர்த்தினோமே தவிர தாழ்த்தவில்லை.

ஈஸ்வரரின்" குரு: தன்மையைப் புரிந்து கொள்வதுதான் அவரின் கடவுள் தன்மையை தாண்டி அடைய உதவும்.

ஞான குருவாக
ஞான சக்தியாக
வெளிப்படுகிற ஈசன்
ஏழு சரீரங்களையும் தாண்டி

இந்தப் பூமியில் உலவினார் என்பதே சத்தியம். நிர்வாண சரீரம் மாத்திரம் அல்லாமல் ஏழு சரீரங்களையும் தாண்டி பிரபஞ்சத்திலே நம்மைப்போல் அவரும் பூமியில் தம் பொற்பாதம் படும்படி உலவினார்.

ஞான குருவான ஈஸ்வரன் உலவிய இடங்கள் எல்லாம் தீர்த்தஸ்தலங்களாக சக்திபீடங்களாக ஜோதிர்லிங்கங்களாக சுயம்பு ஆலயங்களாக வெளிப்பட்டது. உங்கள் பகுத்தறிவை வைத்து தர்க்க அறிவை வைத்துப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய சத்தியம் அல்ல இது.

இது அனுபவமாக உணரப்பட வேண்டிய சத்தியம்



பகுத்தறிவைத் தாண்டிய இதயப்பூர்வ உணர்வை அனுபவித்து வாழும் பாக்கியசாலிகள் கடவுளை நேரடியாகக் கண்டுபிடித்து விடுவார்கள்.

காரணம் கடவுள் கடந்து உள் இருந்து.

அனுபவிக்கப்பட வேண்டிய ரசம். இதயம் திறந்து வாழ்பவர்கள்சில துளியாவது இந்த ரசத்த அனுபவித்திருப் பதால் அவர்களால் நேரடியாய் கடவுள் மனிதன் குரு ஆகிய மூன்று ரூபங்களிலும் உள்ள தெய்வாம்சங்களை உணர முடியும்.


மூளையிலேயே சிக்கியிருக்கும் பகுத்தறிவு அதிசபட்சமாக அது கேள்விகளை உருவாக்கும். சந்தேகங்களைக் கிளப்பும். பகுத்தறிவு மூளையைப் பீடித்த சூடு. இதயம் உணர்வு தென்றல் தாயன்பு நட்பு அழகு போனற சிறு சிறு தெயவக வெளிபபாடுகளைக்கூட பகுத்தறிவாளியால் கூறு போட்டு பிரித்துப் பார்க்க முடியும்.

"ரோஜா இருக்கிறது. இதில் அழகு எங்கே இருக்கிறது? மானிடா யோசி" என்று மூளையின் சூட்டை கிளப்புவது போல... "விக்கிரகம் இங்கே இருக்கிறது. அதில் தெய்வீகம் எங்கே இருக்கிறது? கடவுள் இருக்கிறாரா யோசி?" என்று சொல்ல முடியும். கேட்க முடியும்.

இதனால் நேரடியாய் உலகுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை. குழப்பமே மிஞ்சும்.

ஆனால் பழுத்த முதிர்ந்த ஒரு பகுத்தறிவுவாதியால் தாயன்பையும் ரோஜாவின் அழகையும் விக்கிரகத்தின் தெய்வீகத்தையும் குருவின் வெளிப்பாட்டையும் நேரடியாய்ப் புரிந்து கொள்ள முடியும்.

பகுத்தறிவு பழுத்தால் அது இதயம் நோக்கி அவரை அழைத்துச் செல்லும். அவருக்குள்ளே ஆழமாய் இருக்கும் தெய்வத்தை உணர உதவும்.




இது உணரப்படும்போது நம்மைக் கடவுளாக்கும் கடவுள் குரு என்பது அனுபவமாகும்.



### பக்தி பலவீனம் அல்ல... பலமே...

நம்முடைய வாழ்க்கையில் பார்த்தீர்கள் என்றால் அளவில்லாத மூட நம்பிக்கைகளால் காலத்தையும் நேரத்தையும் வீணடித்து வருகிறோம்.

மூடநம்பிக்கை என்பது மனத்தை மந்தப்படுத்துகிற உணர்வை பலவீனப்படுத்துகிற பழக்கவழக்கங்களாகும்.


இதற்குக் காரணம் எந்த ஒரு நிகழ்ச்சியையும் மேலோட்டமாகப் பார்க்கும் மன அமைப்பு

"உள்முகமாகத் திரும்புவது" என்ற சத்தியம் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நடந்தது என்றால் உங்களை மேம்படுத்தக் கூடிய நிறைவுத் தன்மையைத் தரக்கூடிய சத்தியமாக அதே நிகழ்ச்சி மாறிவிடும்.

என்னுடைய வாழ்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சி.

என்னுடைய வாழ்கையில் நிறைவு தன்மையை தரும் சத்தியமான உள் முகமாகத் திரும்புதல் எனும் இந்தத் தீகைஷ் எப்படி நடந்தது என்று உங்களுக்கு விளக்க முயற்சிக்கிறோம்.

(தொடரும்)







# இறவாமை

மீண்டும் மனம் தளராத திவ்வியராஜன் ICD ஐ நெஞ்சில் சுமந்தபடி இதயத்தின் சின்னச் சின்னச் சறுக்கல்களையும் சகித்துக் கொண்டு இரண்டு ஆண்டுகள் கடக்கையில் ICD யின் சக்தி ஏறக்குறைய செலவழிந்து விட்டதால் புதிதாக ஓர் ICD ஐ பொருத்த வேண்டும் என்று டாக்டர் ரியங் (Tian) பரிந்துரைத்தார்.

ICD தயாரிக்கும் நிறுவனங்கள் ஏன் இவ்வாறு ஒரு குறுகிய கால எல்லைக்குள் - ஆறேழு ஆண்டுகளில் - சக்தி (Power) தீர்ந்து போகும் விதத்தில் ICD களைத் தயாரிக்கிறார்கள் என்ற கேள்வி இப்போது எழுந்தது. ஆறேழு வருடங்களில் பொதுவாக போய் சேர்ந்துவிடுவார்கள் என்று இவர்கள் நினைத்திருக்க மாட்டார்கள். அவர்களது வியாபாரம் தொடர வேண்டும் என்ற திட்டமிடலும் ஒரு காரணமாக இருக்கலாம்.

எதுவாயினும் இந்த வேலைக்கு நான் உடன்படாமல் இருப்பது எவ்வளவு ஆபத்து என்பது இப்போது உறுதியாகிவிட்ட நிலையில் மறு வார்த்தை பேசாமல் உடன்பட்டேன்.

ஆனாலும், "ஏற்கனவே இதயத்துடன் பொருத்தப்பட்ட அதே வயரை (Wire) பயன் படுத்துமாறும் புதிதாக இதயத்துள் மீண்டும் இரண்டு வயர்களை சொருக வேண்டாம்" என்றும் நான் எனது விருப்பத்தைச் சொன்னேன். அந்த முடிவுக்கு மூன்று காரணங்கள். ஏற்கனவே வைத்துள்ள இரண்டு வயர்களையும் எடுப்பதில் உள்ள ஆபத்துக்களை கருத்தில் கொண்டு மருத்துவ நிபுணர்கள் அவற்றை அப்படியே விட்டுவிட்டு புதிய இரண்டு வயர்களை இதயத்துடன் பொருத்துவார்கள்.

அதோடு இதயத்துக்குள் மேலும் மேலும் வயர்களை வைப்பதை தவிர்ப்பது நல்லது என்று நினைத்தேன். அதனால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை தவிர்ப்பதும் எனது எண்ணமாகும். மற்றது அவர்கள் பரிசோதித்த போது அந்த இரண்டு வயர்களும் நல்ல நிலையிலேயே இருந்தன. எனது விருப்பத்திற்கு மருத்துவ நிபுணர்களும் இணங் கினார்கள்.

பஞ்சாங்கம் பார்த்து நாள் குறிக்கப்பட்டது. 2013 பங்குனி 3 பரணி நட்சத்திரமும் மேஷ ராசியும் கூடிவரும் நல்ல நாளில் (எனது நட்ஷத்திரமும் ராசியும் இவைதாம்) காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடைப்பட்ட சுப வேளையில் இதை நிகழ்த்துவதற்கு நானும் ஒப்புக் கொண்டேன்.

பஞ்சாங்கம் பார்க்கிறதையும் தமிழர்கள் தமது இனத்துவ அடை யாளமாக கனடாவில் கொண்டு வந்து விட்டார்களா என்று என் தமிழர்களே உங்களில் சிலர் மூக்குக்குள் விரலை வைத்து விடாதீர்கள்.

அன்று காலையில் சொன்னபடி சண்ணிபுரூக் (Sunnybrook) வைத்தியசாலைக்குக் குடும்ப சமேதரராய் போய்ச் சேர்ந்து விட்டேன். வழமையான சம்பிரதாயங்கள் எல்லாம் நடந்தேற நான் மனையாளிடமும் பிள்ளைகளிடமும் கையசைத்து விடை பெற்றுக்கொள்ள சக்கர நாற்காலியில் - சில்லுக் கதிரையில் என்று எங்கள் நல்ல தமிழில் சொல்லலாம். அதுதான் அதில் வைத்து தள்ளிக்கொண்டு போய் சத்திர சிகிச்சைக் கூடத்துள் சேர்த்தார்கள். ஒரு சத்திர சிகிச்சைக்குரிய எல்லா முன்னேற்பாடுகளும் நடந்தன.

அதில் தொற்று ஏற்படாமல் தடுப்பதற்குரிய பென்சிலின் (Pencillin) நோய் எதிர்ப்பு மருந்தும் எனக்கு ஏற்றப்பட்டது. கொஞ்ச நேரத்தில் உடலெல்லாம் எரிவதை உணர்ந்தேன். கைகளில் தடிப்பதையும், குறிப்பாக பின் கழுத்தில் - பிடரிப் பக்கங்களில் ஒரு திரணையாக தடித்து வருவதையும் தடவிப்பார்த்தேன். அருகில் வந்த தாதிக்கு இதனை சொன்னேன். அவ அவ்வளவு பெரிதாக செவிமடுக்கவில்லை.

அவ வேறை வேலைகளில் இருந்தா. இன்னும் எரிவும், சொறிவும் உடலெங்கும் கூடுவதை உணர்ந்தேன். மற்றும் ஒரு தாதி அருகில் வந்தா. அவவிடம் சொன்னேன். அவ பிடரியைத் தடவிப்பார்த்தா. அவ டாக்டரிடம் சொல்ல டாக்டர் வந்து பார்த்துவிட்டு. ஒவ்வாமை (Alergy) அது என்பதை உறுதிப்படுத்தி அதற்கு மாற்றாக அதைச் செயலிழக்க செய்ய இன்னும் ஒரு மருந்தை ஏற்றினார்கள்.

"எல்லாம் கடவுள் செயல்" என்று அல்லது "மருத்துவர்கள் எல்லாவற்றையும் கவனிப்பார்கள்" என்று விட்டிருந்தால் அந்த ஒவ்வாமையால் எனக்கு கெடுதல் ஏற்பட்டிருக்கும். ஏதும் ஒவ்வாமை இருக்கிறதா என்ற விபரத்தை முதலிலே கேட்டபோது அதுபற்றி எனக்கு தெரிந்திருக்காமையாலேயே இந்த நிலை ஏற்பட்டது.


ஒவ்வாமையை உடனும் கவனிக்காமல் விட்ட காரணத்தால் பல சந்தர்ப்பங்களில் பலர் இறந்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் இருந்து பென்சிலினுக்கு எனக்கு ஒவ்வாமை இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டேன். நண்பர்களே, உங்களுக்கு என்ன மருந்துகளுக்கு ஒவ்வாமை இருக்கிறது என்பதை தெரிந்து வைத்திருப்பது எப்போதும் நல்லது.

என் நெஞ்சில் அந்தப் பகுதியை விறைக்க செய்து முன்னர் வெட்டிய அதே இடத்தில வெட்டி தோலுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்த ICDI எடுத்து இதயத்துடன் இணைக்கப்பட்டிருந்த வயர்களை கழற்றி புதிய கருவிக்கு இணைத்து மீண்டும் உள்ளே புகுத்தி வைத்தார்கள். இப்படி அமுக்கி வைத்தபோது விறைப்பையும் மீறி நொந்தது. இதயமே, நான் சகித்துக்கொண்டேன்.

பிறகென்ன. புதிய பலத்தோடு மனதில் புதிய தெம்புடன் நான். வழமையான இயக்கம். அது ஒரு குளிர்காலம். ஒரு நாள் காரை நிறுத்திவிட்டு பாடசாலைக்கு உள்ளே செல்வதற்கு கொஞ்ச தூரம் நடக்க வேண்டும். அந்த நடை பாதை கொஞ்சம் ஏற்றம். அதோடு முதல் நாள் நிகழ்ந்த பனிப்பொழிவில் தேங்கி இருந்த வெண் பனிப்படுக்கையில் சிரமப்பட்டு நடக்க வேண்டியும் இருந்தது.

அவ்வாறு நடந்து கொண்டிருந்த போது, இதயமே நீ அதிக சக்தியை பிரயோகிக்க நேர்ந்த அந்த சமயத்தில் தாளம் தப்பி வேகத்துடன் துடிக்கத் தொடங்கி விட்டாய். ICD அதற்கு உடனும் மின்னலைகளை அடுத்தடுத்து அனுப்பி தணித்ததையும் உணர்ந்தேன். சரி புதிதாக வைத்த ICD ஒழுங்காக வேலை செய்வது இப்போது உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் உடனும் வைத்தியசாலைக்கு போகவில்லை. அதன்பிறகு ஒரு நாள் எனக்கு முன்போலவே பிரச்சினை வந்தது.

நான் இங்குள்ள TVI தொலைக்காட்சியில் "தீதும் நன்றும்" என்றொரு சமூக நிகழ்வைத் தொடராக பல்வேறு தலையங்கங்களில் செய்து கொண்டிருந்தேன். அந்த நிகழ்ச்சிக்கு டொரொன்டோவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து எனக்கு தெரிந்த நண்பர்கள் பலரும் வந்து கலந்து கொள்ளுவர். 50/60 நிகழ்ச்சிகளுக்கு மேல் செய்திருப்பேன்.







அப்போதெல்லாம் அமைதியாக இருந்த என் இதயமே, ஒரு நாள் நீ பிரச்சினை தர தொடங்கினாய். நிகழ்ச்சியை ஆரம்பித்தவுடனேயே நாவறண்டு சொற்கள் ஒழுங்காக வராமல் சறுக்கத் தொடங்கின.

நாவறட்சியும் அதிக தாகமும் நெஞ்சுக்குள் எரிவும் இதன் குணம் குறிகளாகும். இதுபற்றி பலமுறை குறிப்பிட்டுள்ளேன்.

பலமுறை அனுபவப்பட்டாயிற்று. இந்த நிகழ்ச்சிக்கு பலர் தூர இடங்களில் இருந்தும் வந்திருந்தனர். எனது மூளை இப்போது இவ்வளவு தூரம் வந்தவர்களை நிகழ்ச்சி செய்யாமல் திருப்பி அனுப்புவது சரியல்ல என்றுதான் யோசித்தது.

வழமையில் பொதுவாக இரண்டு நிகழ்ச்சிகள் செய்வதுண்டு. காலையில் மிகுந்த சிரமப்பட்டு வந்தவர்களை ஏமாற்றாமல் ஒரு நிகழ்ச்சியாவது செய்து விடுவோம் என்று என் புத்தி சொன்னது.

இந்த நினைப்பு சரியானதல்ல. ஆனால் என் புத்தி அப்படித்தான் நினைத்தது. அவர்களுக்கு எனது பிரச்சினையை சொல்லாமல் கையுடன் வைத்திருந்த இதயத் துடிப்பின் வேகத்தை குறைக்கும் மருந்தை (Bisoprolol) எடுத்து விட்டு கொஞ்ச நேரம் ஆறியபின் நிகழ்ச்சியைச் செய்துவிடலாம் என்று மீளவும் முயற்சித்தேன்.

ஆனால் முடியவில்லை. இதயமே உனது மீற்றர் ஏறுவதைத் தெளிவாக உணர்ந்தேன். உடனும் நிறுத்திவிட்டு அம்புலன்ஸை அழைத்து மருத்துவ நிலையத்துக்கு சென்று சிகிச்சை பெற நேர்ந்தது.

எனது இதய மருத்துவர் திருமதி. றெபேக்கா அலன் (Rebeca Allen), ICD மருத்துவர் ரியாங் (Tian) இருவரும் அடிக்கடி வந்து கவனித்து சென்றனர். இதய வேகத்துடிப்பை தடுக்கும் அமியோடரின் (Amioderin) என்னும் குளிசையும் தரப்பட்டது.

இதயமே உனது வேகத்துடிப்பு பற்றிய பிரச்சினையை முற்றாக நிறுத்துவதற்கு மருத்துவர் ரியாங் அவர்களின் ஆலோசனை உனக்குள் இருக்கும் "சாத்தான்களை" அடையாளம் கண்டு எரித்துவிடுவதே. இதனை Ablation என்று அழைப்பர். அதாவது தவறான மின் சைகைகளை (Electrical Signals) உருவாக்கி ஒழுங்கான இதயத்துடிப்பை குழப்பும் இதயத் தசைநார்களை (Scars) இளையங் (Cells) களை எரித்து விடுவதாகும். இதற்கு நான் ஒருபோதும் இணங்கவில்லை. இந்தவிதமான சிகிச்சையில் பாதிப்புக்களுக்கு (High Risk) இடம் உண்டு. எதுவும் நடக்கலாம் என்ற பயம் எனக்கு.

நாலைந்து நாட்களில் வீடு வந்தேன். இதன் பின்னர் நாலைந்து ஆண்டுகள் பெரிதாக பிரச்சினைகள் இன்றி இதயமே நீ ஓடிக்கொண்டிருந்தாய். இடையிடை பின்வரும் பரிசோதனைகள் செய்யப்பட்டன.

1. Ecg/Ekg
2. Echocardiogram
3. Cadiac Stress Test
4. Holter Monitor
5. Blood Work

ஆனாலும் இந்தப் பரிசோதனைகள் எல்லாம் இதயத்தின் அப்போதைய நிலையை அச்சொட்டாக காட்டிவிடும் என்றும் சொல்லமுடியாது.

Stress Test இல் 10 - 15 நிமிடங்களுக்கு மேல் அதிக களைப்பின்றி நடந்தவர்களும் குறுகிய கால இடைவெளியில் மாரடைப்பில் இறந்து போன சம்பவங்களும் நடந்திருக்கின்றன. (Nuclear Scanning) இதயத்தைத் துல்லியமாக படம் பிடிப்பதற்கு உதவுகின்றது. ஹோல்ரர் மொனிட்டர் (Haltoer Moniter) எனும் கருவி ECG க்குரிய வயர்கள் இணைக்கப்பட்டு வழமையான செயல்களின் போது இதயத்தின் இயக்கத்தை கண்டு பிடிப்பதற்கு உதவுகிறது.

இந்தக் கருவியை இரண்டு மூன்று நாட்களுக்கு உடலில் பொருத்தி வைத்து இதயத்தின் இயக்கம் தொடர்பாக துல்லியமாக அறிவர். குருதி பரிசோதனைகள் மாரடைப்பு வந்ததா என்பதை கண்டுபிடிக்க உதவுகிறது. அதேபோல வருமுன் காப்பதற்கும் குருதியின் மூலகங்கள் அதன் விகிதாசாரங்கள் மருந்துகளைப் பரிந்துரைக்கவும் உதவுகின்றன. அஞ்சியோகிராம் (Angeogram) ஒன்றுதான் எவ்வளவு தூரம் இதய குழாய்களில் அடைப்பு இருக்கும் என்பதைக் காட்டக் கூடியதாகும். அஞ்சியோகிராம் அல்லது அஞ்சியோபிளாஸ்ட்டியை தவிர ஏனைய அனைத்துப் பரிசோதனைகளும் எனக்குச் செய்யப்பட்டன.

எந்த வித்தியாசங்களும் குறிப்பாக கண்டு பிடிக்கவில்லை. ஆனால் எனக்கு படிகள் ஏறினால் முன்னரை விடக் களைப்பு தெரிந்தது. சிலவேளை தலை சுற்றுவதும் பின்னர் கொஞ்சத்தில் சரியா வதும் நிகழ்ந்தன. மகளின் குழந்தைகளுடன் விளையாடுவதிலும் அவர்களைத் தூக்குவதிலும் களைப்புத் தெரிந்தது.

இப்படியான எச்சரிக்கைகளை உதாசீனப்படுத்துவது தவறு என்பதை பின்னால் நிகழ்ந்த சம்பவங்கள் உறுதிப்படுத்தின.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1011



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்
### திருகோணமலை

இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம், ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்தை முதல் நாளாகக் கொண்டு, பத்துநாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். வைகாசித் திருவோணத்தில், கம்சன் கதை படிக்கப்பட்டு கிருஷ்ணபரமாத்மாவிற்கு உற்சவம் நடைபெறும். வைகாசித் திருவோணத்தை கிருஷ்ண பரமாத்மாவின் அவதார தின விழாவாகவும், அதனையடத்துவரும் ஐந்தாம் நாள் ருக்மணி கல்யாண நாள் விழாவாகவும், ஆறாம் நாள் கம்சன் கதை விழாவாகவும், ஏழாம் நாள் வாணாசுரன் போராகவும், பத்தாம்நாள் சத்தியபாமா கல்யாண விழாவாகவும் அலங்கார உற்சவம் நடைபெறும்.

ஆவணிமாத ஜென்ம அஷ்டமியன்று உறியடிவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தில் பல சிறப்பு விழாக்கள் கொண்டாடப்படுவது வழக்கம். புரட்டாதிச் சனிவாரத்தில் பெருந் திரளான மக்கள் இவ்வாலயத்தில் கூடுவது வழக்கம். கார்த்திகை விளக்கீட்டன்றும், இரவில் விசேட திருவிழாவும், மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விழாவும், திருப்பாவை விழாவும், ஒவ்வொரு ஏகாதசியிலும் சிறப்பான திருவிழாவும், இவ்வாலயத்தில் வழமையாக நடைபெறும் விழாக்களாகக் காணப்படுகின்றன.

திருமால் மும் மூர்த்திகளிலே காக்குங் கடவுளாக விளங்குகின்றார். திருமாலை விஷ்ணு என்றும் கூறுவர். உலகத்து உயிர்களைக் காக்கும் கடவுள் இவராதலின், அவ்வப்போது உலகத்தில் மனிதரைப்போலத் தோன்றுவார். வாழும் மனிதருள் தகுந்த ஒருவரிடம் தமது சக்தியைச் சிறிதளவு கொடுத்து அவரைக் கொண்டு பல காரியங்களை நடத்திச் செல்வார். இவ்வாறானவர்களைத் தெய்வ அருள் பெற்றவர்கள் என்று அழைக்கின்றோம். தாமே மானிட வடிவந் தாங்கி மண்ணுலகிற்கு இறங்கி வருவதையே அவதாரம் என்று அழைப்பது வழக்கம். திருமால் பத்து அவதாரங்களை எடுத்துள்ளார் பத்து அவதாரங்களும் அநீதியைக் கொன்று நீதியை, தர்மத்தை நிலைநாட்ட எடுத்த அவதாரங்களாகவே கருத வேண்டும்.

திருமால் இரணியாக்கனை அழிக்க எடுத்த அவதாரம் வராக அவதாரம். இரணியகசிபுவை அழிக்க எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரம். அசுரர்களை அடக்கி தேவர்கள் அமிர்தம் பெற எடுத்த அவதாரம் கூர்ம அவதாரம், அசுரனாகிய மகாபலியை அழிக்க எடுத்த அவதாரம் வாமனஅவதாரம், ஹயக்கிரீவனை அழித்து வேதங்களைக் காப்பாற்ற எடுத்த அவதாரம் மச்சாவதாரம். அரசகுலத்தினர் மக்களைத் துன்புறுத்தியபோது, ஆதனைத் தடுக்க எடுத்த அவதாரம் பரசுராம அவதாரம். இராவணனைக் கொன்று நல்லோர்களைக் காக்க எடுத்த அவதாரம் இராமவதாரம். கம்சனைக் கொல்லவும், பஞ்சபாண்டவருக்குத் துணையாயிருக்கவும் கிருஷ்ணஅவதாரம் எடுத்தார். திருமாலின் அவதாரமாகப் புத்த அவதாரமும் கொள்ளப்படுகிறது. இதனைப் பலராம அவதாரம் எனவும் கூறுவர். கலியுகமுடிவில் உலகத்தை ஆளுபவர்கள் அளவிடமுடியாத அக்கிரமங்களையும் அநியாயங்களையும் செய்யும்பொழுது திருமால், கல்கி அவதாரம் எடுப்பார். இந்த அவதாரத்தின்போது தீயவர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவார் எனவும் கூறப்பட்டுள்ளது.

அனைத்து அவதாரங்களுள்ளும் கண்ணன் அவதாரமும், இராமாவதாரமும் ஆழ்வார்களை மிக வசீகரித்த அவதாரமாகக் கருதப்படுகின்றது. பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகவும், ஆண்டாள் கண்ணனைக் காதலனாகவும் கண்டனர். தற்காலத்தில் இவ்வாலயம் பல்வேறு புனருத்தாரணப்பணிகளோடு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இவ்வாறான பல சிறப்புக்கள் பொருந்திய கிருஷ்ண அவதாரத்தினைத் தெய்வமாகப் போற்றி வணங்கும் மரபின் வெளிப்பாடாகத் திருகோணமலையில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயம் காணப்படுகின்றது.

*வளரும்...*

# சுருவில் மக்கள் ஒன்றியம் நடாத்திய வருடாந்த ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டிகளும் – 2022

கனடிய செய்திகள் Canadian News



சுருவில் மக்கள் ஒன்றியம் நடாத்தும் வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும், விளையாட்டுப்போட்டியும் ஞாயிற்றுக்கிழமை (14-08-2022) Colonel Denfor (73 Colonel Denforth Trail Toronto On M1C 1P8) Area 4 பூங்காவில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இலங்கை அரசியல் வழக்கம் போல பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் அடிபடும் அரசியல்வாதிகளின் கையில்!

— கனடா நக்கீரன்

இலங்கையில் எதற்குப் பஞ்சம் இருந்தாலும் செய்திகளுக்குப் பஞ்சம் இல்லை. நாளும் பொழுதும் புதுப்புது செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இலங்கையோடு வேறு நாடு எதுவும் போட்டி போட முடியாது. ஆறுமாதங்களுக்கு மேலாக நடக்கும் உக்கிரமான உருசிய - உக்கிரேன் போர் பற்றிய செய்திகள் கூட பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் டொலர் நெருக்கடி நீடிப்பதால் இலங்கையின் பணவீக்கம் 60.8% ஆக உயர்ந்துள்ளது! மத்திய வங்கி தனது அடுத்த நிதிக் கொள்கையை ஓகஸ்ட் 18 அன்று அறிவிக்க இருக்கிறது. இந்த ஆண்டு வட்டி விகிதங்கள் 950 அடிப்படை புள்ளிகள் உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய வங்கி வெளியிட்ட தரவுகளின்படி, அதிகாரப்பூர்வ வெளிநாட்டு நாணய கையிருப்பு யூலை இறுதியில் கூ1.86 பில்லியனில் இருந்து கூ1.82 பில்லியனாக குறைந்துள்ளது. இந்தத் தொகை சீனாவுடனான $1.5 பில்லியன் இடமாற்று ஏற்பாட்டை உள்ளடக்கியது. 2019 இல் கோட்டாபய சனாதிபதியாக பதவி ஏற்றபோது இலங்கையின் வெளிநாட்டு நாணய இருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

பொதுவாக ஒரு நாடு குறைந்த பட்சம் 3 மாதத்துக்குரிய இறக்குமதியை ஈடு செய்யக் கூடிய வெளிநாட்டு நாணயத்தைக் கையிருப்பாக வைத்திருக்க வேண்டும். இலங்கையின் இறக்குமதிகள் 2022 யூன் மாதத்தில் 1,226 மில்லியன் அமெரிக்க டொலராக குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 26.1 விழுக்காடு குறைவாகும்.

இப்போது கிடைத்துள்ள செய்திகளின்படி சமயல் எரிவாயு விற்பனை சகச நிலைக்கு வந்துள்ளது. ஆனால் எரிபொருள் நிலையங்களில் மக்களது வரிசை இல்லாவிட்டாலும் எரிவாயு, டீசல், மண்ணெண்ணைக்கான தட்டுப்பாடு தொடர்கிறது. இதனால் கடற்றொழிலாளர்கள், தோட்டக்காரர்கள், விவசாயிகள், அடித்தட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதே நேரம் கருப்புச் சந்தையில் ஒரு லிட்டர் பெட்ரல் ரூபா 1,200 அளவில் விற்பனையாகிறது. உலகச் சந்தையில் ஒரு பீப்பா மசகு எண்ணையின் விலை தோராயமாக 91.0 டொலராகக் குறைந்துள்ளது. இதனை அடுத்து இலங்கை அரசு எரிபொருட்களின் சில்லறை விற்பனை விலையைச் சிறிது குறைத்துள்ளது.

பிந்திக் கிடைத்த செய்தியின் படி முன்னாள் சனாதிபதி கோட்டாபய அடுத்த வாரம் 24 ஆம் தேதி நாடு திரும்பவுள்ளதாக இராசபக்ச குடும்பத்தின் உறவினரும், உருசியாவுக்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஊருசியாவுக்கான தூதுவராக கடமையாற்றிய வேளையில் இடம்பெற்றதாக கூறப்படும் மிக் (MIC) விமான கொடுக்கல் வாங்கல் மோசடி தொடர்பிலான விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நடந்து வருகிறது. இந்த விசாரணைகளின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கோட்டாபய இராசபக்ச தன்னுடன் தொடர்பில் இருப்பதாகவும் சொன்னார். ஆளும் கட்சித் தலைவர்கள் சிலரும் அவரது வருகைபற்றி பொதுவெளியில் சொல்லி வருகிறார்கள்.



கோட்டாபய இராசபக்ச இலங்கைக்குத் திரும்புவதில் எந்தச் சிக்கலும் இல்லை. நாடாளுமன்றத்தில் இராபக்ச குடும்பத்தால் உருவாக்கிய சிறிலங்கா பொதுமக்கள் பெரமுனதான் பெரும்பான்மை பலத்துடன் இருக்கிறது. கோட்டபாயவின் உடன்பிறப்பு பசில் இராசபக்சாவின் கட்டுப்பாட்டில்தான் சிறிலங்கா பொதுமக்கள் பெரமுன இருக்கிறது.

நாடு திரும்பினால் கோட்டாபய அரசியலில் மீண்டும் ஈடுபடுவார் என எதிர்பார்க்கிறீர்களா? என்ற ஊடகவியலாளர்கள் கேள்விக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த "இல்லை. ஒருபோதும் இல்லை. நான் அவ்வாறு நினைக்கவில்லை" எனப் பதில் இறுத்துள்ளார். ஆனால் கோட்டாபய நாடு திரும்பினால் அவர் மீதுள்ள பல வழக்குகள் மீண்டும் தோண்டி எடுக்கப்படலாம்.

கோட்டாபய இராசபக்ச மீண்டும் அமெரிக்கா செல்வதற்குப் பச்சை அட்டைக்கு மனுச் செய்துள்ளதாகவும் செய்தி வருகிறது. அவரது வழக்கறிஞர்கள் அது தொடர்பான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். மேலும் அவரது துணைவியார் அமெரிக்க குடிமகள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் மட்டுமல்ல அவரது மகனும் அமெரிக்க குடிமகன்தான். 2019 இல் சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக கோட்டாபய தனது அமெரிக்க குடியுரிமையைத் துறந்திருந்தார்.

அமெரிக்க குடியுரிமையை துறத்தல் என்பது ஏறக்குறைய எல்லா நேரத்திலும் திரும்பப்பெற முடியாத ஒன்றாகும். அதாவது ஒருவர் தனது மனதை மாற்றி அமெரிக்க குடியுரிமையை மீண்டும் பெற முடியாது. விதிவிலக்கு அமெரிக்க குடியுரிமையை துறந்த போது ஒருவர் 18 வயதுக்குக் குறைவாக இருந்திருந்தால் மீண்டும் விண்ணப்பிகலாம். ஆனால் கோட்டாபய பச்சை அட்டைக்கு விண்ணப்பிக்கலாமா? விண்ணப்பிகலாம். ஆனால் அது உடனே கிடைக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்கும் வகையில் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை உருவாக்குதில் தன்னுடன் இணையுமாறு அரசியல் கட்சிகளை இலங்கை சனாதிபதி இரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்து பல நாட்கள் சென்றுவிட்டன. ஆனால் அப்படியான ஒரு அரசாங்கத்தைக் காண முடியாமல் இருக்கிறது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு சம்பிரதாயபூர்வமாக தொடக்கிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையில் இரணில் விக்ரமசிங்க, இந்த விடயம் தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் தாம் ஏற்கனவே கலந்துரையாடலைத் தொடக்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கை தனது பொருளாதாரத்தை நவீனமயப்படுத்த வேண்டும் எனவும், பொருளாதாரத்தை பேணுவதற்கு வெளிநாட்டுக் கடன்களில் தங்கியிருக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியானது பொருளாதாரத்தில் தேவையான மாற்றங்களைச் செய்யாததன் விளைவாகும், இலங்கை எதிர்காலத்தை திட்டமிட வேண்டும் என்றும் அடுத்த 25 ஆண்டுகளுக்கு தேசியப் பொருளாதார வேலைத்திட்டம் வகுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

"சிக்கல்கள் குறைந்து வருகின்றன. எரிவாயு, உணவு மற்றும் மருந்துகளின் நிலையான வழங்கலை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது," என்று அவர் கூறினார்.



ஓகஸ்ட் மாத இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) பணியாளர்கள் மட்ட ஒப்பந்தத்திற்கு இலங்கை வர முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து எங்களுக்கு கடன் வழங்கிய நாடுகளுடனும், பத்திரங்களை வாங்கிய தனியார் முதலீட்டாளர்களுடனும் பேசத் தொடங்குவோம் என்றார்.

ஆனால் பன்னாட்டு நாணய நிதியம் இலங்கை அரசுக்கு அதிகளவில் கடன் கொடுத்த நாடுகளான சீனா மற்றும் இந்தியாவுடன் இலங்கை பேச வேண்டும் என்கிறது. உலக வங்கி இலங்கைக்கு எந்த நிதியுதவியும் செய்யப் போவதில்லை எனக் கையை விரித்துள்ளது. யப்பான் நாடு இலங்கைக்கு வழங்கும் சகல உதவிகளையும் நிறுத்தியுள்ளது. இந்தியா இதுவரை 3.8 பில்லியன் டொலரை கடனாகக் கொடுத்துள்ளது. இதற்கு மேல் உதவி செய்ய அந்த நாடு பின்னடிப்பதாகத் தெரிகிறது.

2026 ஆம் ஆண்டுக்குள் செலுத்த வேண்டிய சுமார் 25 பில்லியன் அமெரிக்க டொலர்களில் இந்த ஆண்டு 7 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடனை திருப்பிச் செலுத்துவதை கடந்த ஏப்ரல் மாதம் இலங்கை இடைநிறுத்தியுள்ளது. இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் 51 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது! சிலர் கடன் தொகை 80 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்கிறார்கள்.

இலங்கையில் சனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியை மீள உருவாக்குவது இன்றைய அவசர தேவையாக இருக்கிறது என அரசியல் விமசகர்கள் மற்றும் வல்லுநர்கள் கருதுகிறார்கள். .

கடந்த யூலை 20 அன்று இரணில் விக்கிரமசிங்க சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது முழுக்கவனமும் அனைத்துக் கட்சிகளது அரசை நிறுவுவதில் இருக்கிறது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அரசியல் விமர்சகர் ஜெயதேவா உயன்கொட "இராசபக்சசின் பொதுசன பெரமுன கட்சியின் "அதிக பிரசன்னம் இல்லாமல்" இல்லாமல் இருக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம்தான் "இரணில், இராசபக்சவின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் மற்றும் பாதுகாக்கிறார் என்ற எதிர்க்கட்சியின் அவநம்பிக்கையை அகற்ற முடியம். அவரது தலைமைத்துவத்திற்கான நம்பகத்தன்மை மற்றும் சட்டபூர்வமான தன்மையை மீட்டெடுப்பதற்கு இது ஒரு முன்நிபந்தனையாகும்" என்கிறார்.

பொருளாதாரம், அரசியல், சமூகம் என மூன்று நெருக்கடிகளை இலங்கை எதிர்கொண்டுள்ளது. புதிய சனாதிபதி மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன இருவர் மீதும் பொதுமக்கள் அதிக நம்பிக்கை வைத்திருக்கவில்லை எனவும் உடன்கொட மேலும் தெரிவித்தார்.

இலங்கை சனாதிபதி முறை மற்றும் நாடாளுமன்ற முறை இரண்டும் கலந்த அரை-சனாதிபதி முறையைப் பின்பற்றுகிறது. இலங்கையில் சனாதிபதி அரச தலைவர். அவருக்குத் துணையாக இருக்கும் பிரதமர் பல நிர்வாகப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதோடு, நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியை வழிநடத்துகிறார். "அவர்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், ஒரு சனநாயக அரசாங்கத்திற்கான அடித்தளத்தை அமைப்பதும், உள்ளடக்கிய, சனநாயகம் மற்றும் மக்கள் நட்பு கட்டமைப்பிற்குள் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான புதிய அணுகுமுறையின் செயல்முறையைத் தொடங்குவதும் ஆகும்" என்றும் அவர் கூறினார்.

நாட்டில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உடன்கொட பட்டியலிட்டார். "சனநாயகத்தின் மறுசீரமைப்பு இருக்க வேண்டும். வெளிப்படையான மற்றும் பொறுப்பான பொருளாதார நிர்வாக முறையை அமைத்தல், ஏழை மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சமூக ஆதரவுத் திட்டத்தைச் செயல்படுத்துதல், அரசாங்கம் மற்றும் அரசியல் வர்க்கத்தின் பொது நம்பிக்கை மற்றும் சட்டபூர்வமான தன்மையை மீட்டெடுக்க வேண்டும்" என்றார்.

"உலகளாவிய மற்றும் பிராந்திய சக்திகள் அரசாங்கம் மற்றும் மக்கள் மீதான நிபந்தனைகளை ஆணையிடவோ அல்லது தீர்க்க முடியாத நெருக்கடியின் மத்தியில் மக்களின் நிச்சயமற்ற எதிர்காலத்தைக் கடத்தவோ" அனுமதிக்காத வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை உயங்கொட வலியுறுத்தியுள்ளார்.

அனைத்துக் கட்சி ஆட்சி அமைப்பதற்கான முயற்சி தொடர்ந்தாலும் அது இன்னும் தொடக்க நிலையிலேயே இருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசா அப்படியான அனைத்துக் கட்சி அரசை வெளியிலிருந்து ஆதரிப்போம் ஆனால் அமைச்சர் பதவிகளை ஏற்க மாட்டோம் என அறிவித்துள்ளார். ஆனால் இந்த அறிவிப்புக்கு அவரது கட்சிக்குள்ளே எதிர்ப்பு இருக்கிறது.

முக்கிய கட்சிகள் அனைத்துக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்து அமைச்சர் பதவிகளைத் தட்டிக் கொள்வதில் மும்மரமாக ஈடுபட்டுள்ளன. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்து அமைச்சர் பதவிகளையும் பெற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளது. சுதந்திரமாக செயல்படும் கட்சிகளும் குழுக்களும் அமைச்சர்பதவிகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். முஸ்லிம் கட்சிகளும் இதே நிலைப்பாட்டில் இருக்கின்றன. எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை 40 யை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்துக் கட்சி அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து ஆதரவு கொடுக்கும் எனச் சொல்கிறது. மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அனைத்துக் கட்சி அரசாங்கத்தில் சேர முடிவு செய்துள்ளன. இது எதிர்பார்த்ததே!

இவற்றை எல்லாம் உன்னிப்பாகப் பார்க்கும் போது இலங்கை அரசியல் வழக்கம் போல பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் அடிபடும் அரசியல்வாதிகளின் கையில் இருக்கப் போகிறது. அதாவது 'பழைய குருடி கதவைத் திறவடி' பாணியில் தொடர்ந்து இருக்கப் போகிறது!

# இவ்வார ராசிபலன்

**19-08-2022 வெள்ளி தொடக்கம் 25-08-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** பிள்ளைகளால் பெருமை சேரும். நன்மைகள் உண்டாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். கர்ம வினைகள் அகலும். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. வாகனச் செலவு ஏற்படும். மங்களச்செய்தி வரும். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். அரசு வகையில் அனுகூலம் உண்டு. பழைய பகை மாறும். தன வரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதுமுயற்சியினை தள்ளி வைக்கவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் இருக்க வேண்டும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொல்லைத் தருகிறவர்கள் விலகி செல்வர். வயிறு உபாதை வந்து சேரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. கௌரவம் அதிகரிக்கும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். மனஅமைதி நிலவும். பங்குச்சந்தை தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மன தைரியம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 2,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**ரிஷபம்:** சிறப்புக்கள் சேரும் வாரம். சுப விரயம் ஏற்படும். நன்மைகள் நாடி வரும். அற்புதமான நாளாக அமையும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தில் பலன் உண்டு. சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வமையும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றமான காலம். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். வேலைப் பளு அதிகரிக்கும். பூமியால் லாபம் உண்டு. நன்மைகள் நாடி வரும். பயணத்தால் பலன் உண்டு. சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். சீரான வாழ்வமையும். வியாபாரம் விருத்தியாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். மனவேதனை குறையும். உடல் ஆரோக்கியம் குறையும். வசதி கூடும். லாபம் திருப்தி தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். வாழ்வு நிலை உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாணவர் திறமை பளிச்சிடும். திறமைகள் அதிகமாகும். பல்வலி வந்து போகும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நடராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,D




**மிதுனம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். உறவினரால் உதவிகள் கிட்டும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். பணமும், பாராட்டும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனைகள் அகலும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். விரோதங்கள் விலகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆபரணச்சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அன்னிய தேசப் பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: 4,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I




**கடகம்:** பொன்னான வாய்ப்புக்கள் கிடைக்கும் வாரம். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. கணவன்ரூபவ் மனைவி அன்யோன்யம் குறையும். காரிய வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பால் தானம் செய்வதில் பாவங்கள் விலகும். கையிருப்பு கரையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். வாகனத்தால் செலவு உண்டு. பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகளால் ஏமாற்றம் அடைவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் தரும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை கூடும். ஆபரண தொழில் கவனம் தேவை. பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். நட்பு வட்டம் விரிவடையும். அன்னதானம் ஆரோக்கியம் தரும். புதிய சிந்தனை உருவாகும். முன்கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்பு வரும். காரியம் கைகூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**சிம்மம்:** திருப்திகள் பெருகும் வாரம். அரசு வாய்ப்பு தடைப்படும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக்கள் கூடும். மன அமைதி குறையும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பொறாமைகள் விலகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் கூடும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்புக்கள் குறையும். புத்தி சாதுர்யம் கூடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. செயல்பாட்டில் தீவிரம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். மனக்குழப்பங்கள் தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளி துர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,8,1,5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**கன்னி:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். அற்புதமான காலமாக அமையும். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பு நிறைந்திருக்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். குதூகலம் தாண்டவமாடும். புதிய முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவும் திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். தாய் வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன்தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தாய்ப்பான முன்னேற்றம் உண்டு. பொறுமையைக் கையாள வேண்டும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். தான தர்மங்கள் பலன் தரும். பெற்றவர்கள் பாராட்டு கிடைக்கும். வினோதமான எண்ணம் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளால் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பட்டம் பதவி தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,1,5,7
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J




**துலாம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். நண்பரால் பணவரவு உண்டு. புதிய வாய்ப்புக்கள் வரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். சுறுசுறுப்பு அதிகமாகும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத் தொழில் முன்னேற்றம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். சோம்பல் அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோ தைரியம் அதிகரிக்கும். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். புத்திரர்களால் மேன்மை உண்டு. பணிவான பேச்சுக்கள் தேவை. விவசாயம் பலம் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செய்திகள் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஎல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: 4,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J




**விருச்சிகம்:** வெகுமானம் அதிகரிக்கும் வாரம். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் தவிர்ப்பது நல்லது. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மையுண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக் கடன் வசூலாகும். போட்டிகள் உருவாகி மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு. வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு கிட்டும். சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். சந்தோஷம் அலைமோதும். மறைமுக எதிர்ப்பு விலகும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத் துறையில் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். இனிப்பான செய்திகள் வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீசண்டிகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,7,2
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,P

(தொடர்ச்சி 28 பக்கம்)

# அன்பின் தொனி - 659

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

### கர்த்தரை விட்டு விலகிய ஜனம்
### 3. எசேக்கியா ராஜா கர்த்தரையே சார்ந்திருந்தான்

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஏலாவின் குமாரன் ஓசெயாவின் மூன்றாம் வருஷத்திலே ஆகாஸ் என்னும் யூதாவுடைய ராஜாவின் குமாரனாகிய எசேக்கியா ராஜாவானான். அவன் ராஜாவாகிறபோது, இருபத்தைந்து வயதாயிருந்து, எருச லேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான், சகரியாவின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் ஆபி. அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான், அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள், அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை. அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார், அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று, அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான். அவன் பெலிஸ்தரைக் காசாமட்டும் அதின் எல்லைகள் பரியந்தமும், காவலாளர் காக்கிற கோபுரங்கள் தொடங்கி அரணான நகரங்கள் பரியந்தமும் முறிய அடித்தான். - **2 ராஜா 18: 1-8**

### பொய்யான தேவர்களின் விக்கிரகங்கள்
### 1. வெள்ளியும் பொன்னும்:

அதற்கு ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணி களைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். - **யாத்திராகமம் 32: 2-4**

அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும்கேளாது, அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும்தொடாது, அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது, தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. - **சங்கீதம் 115: 4-7**

அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுடைய வாயிலே சுவாசமுமில்லை.
- **சங்கீதம் 135: 15-17**

பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்புகளிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்துகொள்ளும்படிக்கு, மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன்விக்கிரகங் களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்.
- **ஏசாயா 2: 20-21**

உன் சுரூபங்களை மூடியவெள்ளித்தகட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம்போல எறிந்துவிட்டு, அதைச் சீ! போ என்பாய். - **ஏசாயா 30: 22**

உங்களுக்குப் பாவமாக உங்கள் கைகள் செய்திருந்த வெள்ளி விக்கிரகங்களையும், பொன் விக்கிரகங்களையும், உங்களில் ஒவ்வொருவரும் அக்காலத்திலே வெறுத்துவிடுவீர்கள். - **ஏசாயா 31: 17**

அவர்கள் ராஜாக்களை ஏற்படுத்திக்கொண்டார்கள், ஆனாலும் என்னாலே அல்ல, அதிபதிகளை வைத்துக்கொண் டார்கள், ஆனாலும் நான் அறியேன், அவர்கள் வேரறுப்புண்டு போகும்படித் தங்கள் வெள்ளியினாலும் தங்கள் பொன்னினாலும் தங்களுக்கு விக்கிரகங்களைச் செய்வித்தார்கள்.
- **ஓசியா 8: 4**

நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது.
- **அப்போஸ்தலர் 17: 29**

### 2. மரமும் கல்லும்

நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும்பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். - **லேவியர் 26: 1**

கர்த்தர் உங்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதற அடிப்பார், கர்த்தர் உங்களைக் கொண்டுபோய் விடப்போகிற ஜாதி களிடத்திலே கொஞ்ச ஜனங்களாய் மீந்திருப்பீர்கள். அங்கே காணாமலும் கேளாமலும் சாப்பிடாமலும் முகராமலும் இருக்கிற மரமும் கல்லுமான, மனுஷர் கைவேலையாகிய தேவர்களைச் சேவிப்பீர்கள். - **உபாகமம் 24: 27-28**

*தொடரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?
நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.
நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.
தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா
எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு
MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga
SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7
HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto
RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill
NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# இவ்வார ராசிபலன்

(26 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** எதிர்ப்புக்களால் சிறப்பு சேரும் வாரம். பயணம் பலன் தரும். சாதனை படைக்கும் காலம். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். மாற்றங்கள் ஏற்படும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவிகள் கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு கவனம் தேவை. தொழில் லாபம் கூடும். பொன், பொருள் சேரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. கணவன் மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். விவசாயிகள் பயன் பெறுவர். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கை கூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. தோதான எண்ணம் உருவாகும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பெருமைகள் சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் பணம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். விபரீத எண்ணம் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,J




**மகரம்:** பாராட்டுக்கள் அதிகரிக்கும் வாரம். வியாபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபம் தவிர்க்கவும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பயணம் பலன் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டாகும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். புகழும், பொருளும் பெருகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. விபரீத எண்ணம் விலகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனநிறைவு உண்டாகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். அற்புதமான காலம். விளையாட்டுத் துறையில் லாபம் கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. செல்வாக்கு பெருகும். வாழ்வில் வசந்தம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**கும்பம்:** மங்களகரமான வாரம். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். சச்சரவுகள் அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். ஏற்றமான தருணம் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். மனம் மகிழும். உறவுகளால் மதிப்பு உயரும். உத்தியோக உயர்வு தரும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். குடும்ப உறவு பலப்படும். புதுமைகள் நிறைந்த காலம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். கண் நோய் வந்து போகும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். அடுத்த வீட்டாரின் ஆதரவு பெருகும். பிரச்சனைகள் தீரும். சுபச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,9
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,K




**மீனம்:** பொன், பொருள் சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கை உண்டு. கணவன் அன்பு அதிகரிக்கும். முன்கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். பதவி உயர்வு தடைபடும். பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். வெற்றியை எட்டும் காலம். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. எதிரிகள் பலம் குறையும். தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன யோகமுண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தர்மசிந்தனை மேலோங்கும். விருந்தினர் வருகை உண்டு. மெத்தனப்போக்கு விலகும். பொருள் இழப்பு ஏற்படும். கலைத்துறையில் திருப்பம் உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முப்பாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N


# அருள் மிகு நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

20 Nugget Ave #01,Scarborough, ONT. (Mc Cowan/Sheppard)

தொலைபேசி இலக்கம் -4162939004







## நல்லூர்க்கந்தன் 27 தின மகோற்சவ விஞ்ஞாபனம்

01.08.2022 திங்கள் முதல் 28.08.2022 ஞாயிறுக்கிழமை வரை

குகனேய அடியார்களே !

நிகழும் மங்களகரமான சுபகிருது வருசத்திற்கான நல்லூர் முருகன் 27 தினத்திருவிழா கனடா நாட்டில் ரொறன்ரோ மாநகரின் எழில் நகராம் ஸ்காபரோ பகுதியில் எழுந்தருளியிருக்கும் நல்லூர்க்கந்தன் என்ற திருநாமத்துடன் கூடிய முருகப் பெருமானுக்கு 27 தினமும் திருவிழா நடைபெறத்திருவருள் கூடியுள்ளது. யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தன் திருவிழாவை போன்றே இங்கும் அதே காலப்பகுதியில் அழகு மிகுந்த அலங்காரக்காட்சியுடன் அபிசேகம் ,விசேடபூசை,சுவாமிவீதிவலம் வருதல் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. முருகன் அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.

| திகதி | கிழமை | நாள் | விசேடதிருவிழாக்கள் |
|---|---|---|---|
| 01.08.22 | திங்கள் | 00 | கணபதிஹோமம் (காலை) |
| 02.08.22 | செவ்வா | 01 | கொடியேற்றம் |
| 05.08.22 | வெள்ளி | 04 | வரலஸ்மி விளக்குப்பூஜை. |
| 09.08.22 | செவ்வா | 08 | பிரதோசம் |
| 11.08.22 | வியாழ | 10 | மஞ்சம். |
| 14.08.22 | ஞாயிறு | 13 | சங்கடஹரசதுர்த்தி |
| 17.08.22 | புதன் | 16 | அருணகிரிநாதர் உற்சவம் |
| 19.08.22 | வெள்ளி | 18 | கிருஷ்ணஜெயந்தி திருவிழா<br>கார்த்திகை கற்பூரத்திருவிழா |
| 20.08.22 | சனி | 19 | சூரியோற்சவம் |
| 21.08.22 | ஞாயிறு | 20 | சந்தானகோபாலர் திருவிழா |
| 22.08.22 | திங்கள் | 21 | கஜவல்லி மஹாவல்லி திருவிழா |
| 23.08.22 | செவ்வா | 22 | மாம்பழத்திருவிழா, |
| 24.08.22 | புதன் | 23 | சப்பறம், பிரதோசம் |
| 25.08.22 | வியாழ | 24 | தேர்த்திருவிழா |
| 26.08.22 | வெள்ளி | 25 | தீர்த்த உற்சவம் |
| 27.08.22 | சனி | 26 | திருக்கல்லியாணம் |
| 28.08.22 | ஞாயிறு | 27 | வைரவர் உற்சவம் |

**காலை DAY TIME**

காலை 07:00 மணி திருவனந்தல் 1ST Pooja 7:00 AM
காலை 10:00 மணி காலசந்தி 2nd Pooja 10:00 AM
காலை 10:30 மணி கும்ப பூஜை Kumba pooja 10:30 AM
பகல் 12.00 மணி விசேட பூஜை 3rd Pooja 12:00 PM
பகல் 12:20 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja
பகல் 01:00மணி அன்னதானம் வழங்கப்படும். Annathanam Distribution

**மாலை NIGHT TIME**

மாலை 5:30 மணி சாயரட்ச்சை 1ST Pooja 5:30 PM
மாலை 6:15 மணி கும்ப பூஜை Kumba pooja 6:15 pm
மாலை 7:00 மணி மூலஸ்தானபூசை Main Pooja 7:00 Pm
இரவு 7:30 மணி வசந்த மண்டபப்பூஜை Vasantha Mandapa Pooja 7:30 Pm
இரவு 7:50 மணி சுவாமி உள்வீதி வலம் Sri Murugan Procession 7:50 pm

பகல்,இரவுதிருவிழா உபயங்கள் செய்ய விரும்வோர் ,வரலக்ஸ்மி விளக்குப்பூசை கலந்து கொள்ளவிரும்வோர் கற்பூரச்சட்டி,காவடிபோன்ற நேர்த்திக்கடன் செய்யவுள்ளோர் தேர்த்திருவிழாஅன்றுஆறு முப்பெருமானுக்கு108பால் குடபிசேகம்நிகழவுள்ளதால் பால்குடஅபிசேகத்தில் கலந்தகொள்ளவிரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை பதிவுசெய்யவும்

**25.08.2022 வியாழக்கிழமை தேர்த்திருவிழா**

காலை 6:00 மணி மூலமூர்த்திக்கு அபிஷேகம்
காலை 7:00 மணி மூலஸ்தானபூசை
காலை 8:00 மணி வசந்தமண்டபபூசை
காலை 09:00 மணி தேர்புறப்பாடுதல்
காலை 10:00 மணி இருப்பிடம்சேர்தல்
பகல் 12:00 மணி பச்சைசார்த்தல் (தேரிலிருந்துசுவாமிஇறக்குதல், பிராயச்சித்தாபிஷேகம்,சண்முகார்ச்சனை)அன்னதானம் வழங்கல்

**அடியார்கள் அனைவரும் திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர்க்கந்தவேலனின் திருவருளைப்பெற்று வாழ்வீர்களாக.** தொலைபேசி இலக்கம் -416 2939004

மலேசிய மடல்

# வில்லன் பரஞ்சோதி பி.எஸ். வீரப்பாவா அல்லது கே.ஏ.தங்கவேலுவா?

## - வானவீதியில் வலம்வந்த “எங்கே அவள்?” -
## - மின்னல் பண்பலை வானொலி நாடகம் -



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஆக.14:

மலேசிய அரச வானொலியான மின்னல் பண்பலையின் முத்திரைப் படைப்பாக ஞாயிறுதோறும் முன்னிரவு 7:30 மணி அளவில் ஒலிபரப்பப்படும் நாடக வரிசையில் ஆகஸ்ட் 14-இல் ஒலியேற்றப்பட்ட நாடகம் “எங்கே அவள்?”.




மின்னல் வானொலியில் வாரத்திற்கு ஒருமுறை ஏறக்குறைய அரை மணி நேரத்திற்கு ஒலிபரப்பப்படும் பாரம்பரிய நாடகப் படைப்பு, மலேசிய இந்திய சமுதாயத்தின் குறிப்பாக தமிழர்களின் அரசியல்-பொருளா-தார-கல்வி-சமூக-ஆன்மிக பண்புநலக் கூறுகளை வெளிப்படுத்தக் கூடியது. வானொலி நாடக எழுத்தாளர்களும் அதற்கேற்ப தங்களின் படைப்பை இயற்றி வருகின்றனர். தவிர, வானொலி நாடகத் தயாரிப்பாளர்களும் அரசாங்கத்தின் கொள்கை, மின்னல் வானொலியின் எதிர்பார்ப்பு ஆகியவற்றை முன்னிறுத்தி வானொலி நாடகங்களை தயாரித்து விண்ணேற்றி வருகின்றனர்.

அந்த வகையில் இன்று ஆகஸ்ட் 14-ஆம் நாள் ஒலியேற்றப்பட்ட “எங்கே அவள்?” என்னும் வானொலி நாடகம், பெண்கள்மீது ஏவப்படும் பாலியல் வன் கொடுமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்தது.

பெண்மையைப் போற்றும் பண்பாட்டை பாரம்பரியத் தன்மையாக கொண்ட நம் சமுதாயத்தில், அண்மைக் காலமாக பெண்கள்மீது நடத்தப்படும் பாலியல் அத்துமீறல், நாகரிக சமுதாயத்திற்கு பொருத்தமில்லாதது என்பதை இன்றைய நாடகம் தெளிவாக சுட்டிக் காட்டியது.

அண்மைக் காலம்வரை பார்வதி நாகராஜன் வானொலி நாடகத் தயாரிப்பாளராக இருந்த நிலையில், திடீரென பாரதி கண்ணம்மாள் என்பவர் குதித்ததில் இருந்தே எனக்கு ஒரு வகையில் நெருடலாக இருந்தது.

தந்தையர் தின் சிறப்பு நாடகம் உள்ளிட்ட ஏராளமான வானொலி நாடகங்களை பார்வதி நாகராஜன் படைத்திருந்தார். அவற்றில் ஒரு சில நாடகங்கள் செம்மையாகத் தயாரிக்கப்பட்டது குறித்து அவரிடம் விளக்கமும் கேட்டிருந்தேன். ஆனால், அவரிடம் வாக்களித்தபடி அந்த நாடகங்களைப் பற்றி, நான் எழுத முடியாமல் போனது. இந்த நிலையில்தான் காயத்ரி கண்ணம்மாள் புதிய நாடகத் தயாரிப்பாளராக வந்துள்ளார்.

2021 டிசம்பர் பிற்பகுதியில் இருந்து மின்னல் பண்பலை வானொலிக்கான நாடகங்களைத் தயாரித்து வரும் காயத்ரி கண்ணம்மாவின், தயாரிப்புகள் “நேற்று பொறித்த அப்பளத்தை”ப் போல இருந்த நிலையில், இன்றைய படைப்பு, இதோ, இப்பொழுது பொறித்த அப்பளத்தைப் போல மொறுமொறுவென்றிருந்தது.

பெண்கள்மீது பாலியல் அத்துமீறல் புரிந்தால், தண்டனை நிச்சயம் என்ற கருத்தை உள்ளீடாக வைத்து ஒலியேற்றப்பட்ட இந்த நாடகம் ஒரு திகில் நாடகமாக இருந்தது.

பேய் தோன்றுதைப் போன்றும் மனசாட்சி வெளிப்படுவதைப் போன்றும் மௌடீக காட்சிகள் இடம்பெற்றுள்ளன. பொதுவாக, பேய் சம்பந்தப்பட்ட காட்சிகள் பெண்களை ஈர்க்கும். பேயைக் கண்டாலே அரளும் பெண்களுக்கு பேய் சம்பந்தப்பட்ட காட்சிகளும் திரைப்படங்களும் ஏன் பிடிக்கிறது என்றால், அதில் ஓர் உளவியல் அடக்கம் இருக்கிறது.

பிறப்பு முதல் இறப்புவரை முதலில் தந்தை, பிறகு அண்ணன்-தம்பி, அடுத்து காதலன் அல்லது கணவன், வயதான நிலையில் மகன் அல்லது மருமகன், தொடர்ந்து பெயரன் என்றெல்லாம் ஏதோ வகையில் ஆணை அண்டியிருக்கும் அவசியம் பெண்களுக்கு ஏற்படுகிறது.

இத்தகைய ஆணாதிக்க வாழ்க்கைப் பயணத்தில், ஓரோர் இடத்தில் அல்லது வேளையில் பெண்கள் ஏதாவது ஒரு வகையில் ஆண்களால் பாதிக்கப்படும்பொழுது, பெண்கள் கையறு நிலைக்கு ஆளாகின்றனர். அத்தகைய பெண்களாகப் பார்த்துதான் அவர்களின் பொருள், கற்பு ஆகியவறை கயமைத்தன ஆண்கள் சூறையாடுகின்றனர்.

ஒரு பெண் பேயாக வந்து, கொட்டகொட்ட விழித்துக் கொண்டு, தொங்கிய நாக்குடன் ஆவேசம் பொங்க சம்பந்தப்பட்ட ஆணை பழிவாங்கி பலிதீர்க்கும் காட்சிகள் பெண்களை ஈர்ப்பதற்கு இதுவேக் காரணம்.

இதை உள்வாங்கியதாலோ என்னவோ, துளசி தேவி என்ற பெண் (இவர் உண்மையிலேயே பெண்ணா அல்லது புனைபெயரா என்பது தெரியவில்லை) இயற்றிய நாடகத்தை நாடகத் தயாரிப்பாளரான காயத்ரி கண்ணம்மா என்ற பெண் கச்சிதமாகத் தயாரித்துள்ளார்.

திகில் நாடகமாக படைக்கப்பட்ட இந்த நாடகத்தின் செம்மாந்த சிறப்பு, “மலையக நடிகர் திலகம்” சோ. பரஞ்சோதி வில்லன் வேடம் தறித்ததுதான்.

மலேசியாவின் மார்கண்டேயனான இவரை, சமூகவாதியா அல்லது ஆன்மிகவாதியா என்று வரையறுக்க முடியாவிட்டாலும் “சமயச் செல்வர்”, மேடை நாடகக் கலைஞர், வானொலி நாடகக் கலைஞர், நாடக எழுத்தாளர், என்ற பெருமைக்கெல்லாம் உரியவர், இவர். வழக்கமாக நகைச்சுவை கலந்த ஒரு நளினத்தன வசனம் பேசும் பரஞ்சோதி,. இன்றைய “எங்கே அவள்” நாடகத்தின் மூலம் வில்லத்தன பாத்திரத்தை வெளிப்படுத்தி இருகிறார்.

‘Love-The Fashion Magazine’ என்ற பத்திரிகையின் ஆசிரியர் பூமிநாதனாக வலம் வருகிறார். அட்டைப் படத்திற்காக கவர்ச்சியான இளம் பெண்களுக்கு வலைவீசும் பூமிநாதன், மது என்ற இளம் மாதின் அழகில் மயங்கி, மதுவை தந்திரமாக வளைத்து அவரை வேட்டையாடுகிறார். கடைசியில் போலீஸ் வளையில் சிக்கி, நீதிமன்றத்தில் தண்டனை பெறுவதுடன் நாடகம் நிறைவுறுகிறது.

பூமிநாதனை குறிவைத்து அவரின் அலுவலகத்திற்கு வேலை தேடிவரும் புலன் விசாரணை அதிகாரி விஜய்யும் பூமிநாதனின் கையாள் தேவதாசும் தங்களின் அசல் தன்மையை மறைத்துக் கொண்டு இருவருமே ஒருவருக்கொருவர் போலியாக உரையாடுவது மனதைத் தொடுகிறது.

விஜய் வரும் காட்சிகளிலெல்லாம் மறைந்துவிட்ட மதுவும் உடன் வருகிறார். இந்த மதுவை பச்சையாக பேய் என்று சொல்லமுடியாவண்ணம், அதை ஒரு மௌடீகத் தன்மையில் வெளிப்படுத்தி, காஞ்சனா படக் காட்சியை மனத் திரையில் பதியவைக்கும் காயத்ரி கண்ணம்மாவின் திறமை..., நேயர்களை வளைக்கும் விதம்..., பாராட்டிற்கு உரியது.

பூமிநாதன் தொடக்கத்தில் பி.எஸ். வீரப்பாவைப் போல தென்பட்டாலும், போகப்போக அவரின் வில்லத்தனம் வெளுத்துவிடுகிறது.

நம் நாடு திரைப்படத்தில் தருமலிங்கம் (எஸ்.வி. ரங்காராவ்), ஆளவந்தார் (எஸ்.ஏ. அசோகன்), புண்ணியகோடி (கே.ஏ. தங்கவேலு) என 3 வில்லன்கள் இடம்பெற்றிருந்தனர். இவர்களில் புண்ணியகோடியைத்தான் “எங்கே அவளி”ன் பூமிநாதன் நினைவுப்படுத்துகிறார்.

காவல் துறையிடம் சிக்கப்போகிறோம் என்பதை ஊகித்துவிட்ட நிலையில், தன்னுடைய கையாள் தேவதாசிடம் எரிந்துவிழும் பூமிநாதன் உதிர்க்கும் “Please shut up; get lost” என்னும் ஆங்கில வசனத்திற்குப் பதிலாக ஒருவேளை தமிழ் வசனம் இடம்பெற்றிருந்தால், பூமிநாதனின் வில்ல குணம் இன்னும் நல்லத்தனமாக வெளிப்பட்டிருக்குமோ என்னவோ?. இந்த இடத்தில் காயத்ரி கண்ணம்மாள், கோட்டை விட்டுவிட்டார் என்றேத் தெரிகிறது.



ஆனாலும், தன்னுடைய கலைப் பயணத்தில் பூமிநாதன் மூலம், பரஞ்சோதி புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறார் என்றுதான் குறிப்பிட வேண்டும். அசோக்குமார், தியாகராஜன், கல்பனாஸ்ரீ, யுவராணி, தருமதேவர் ஆகியோரும் தங்களின் பங்கை தங்களுக்கான பாத்திரங்களின்வழி வெளிப்படுத்தி இருக்கிறனர்.

பதவி உயர்வுடன் தொலைக்காட்சிப் பிரிவிற்கு சென்றுவிட்ட பார்வதி நாகராஜனுக்கு வாழ்த்து மின்னல் பண்பலை வானொலி நாடகத்தை இன்னும் மேம்படுத்த காயத்ரி கண்ணம்மாளிற்கும் வாழ்த்து.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24

fm minnal
இளமை புதுமை இனிமை

# றொறன்ரோவிலிருந்து சென்னைக்கு விசேடமாக அழைக்கப்பட்ட பின்னணி பாடகி விதுசாயினி



கே ஜே எஸ் மீடியா புரோடக்சன்ஸ் கலசா ஜே.செல்வம் தயாரிக்கின்ற திகில் திரைப்படம் “கொத்தங்கோடு பங்களா” இதன் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை இசையமைப்பாளரும் மறறும் நடிகருமான விஜய் ஆண்டனி சமீபத்தில் வெளியிட்டார் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இந்த படத்தில், புஷ்பா உட்பட பல திரைப்படங்களில் வெற்றிகரமாக பாடல்களை எழுதிக் கொண்டிருக்கும் கவிஞர் விவேகா அவர்கள் பாடல்கள் அனைத்தும் எழுதுகிறார் என்பது சிறப்பு. இத்திரைப்படத்தின் மற்றொரு சிறப்பு, இசையமைப்பாளர் விது பாலாஜி கதாநாயகனாக நடிப்பதுதான்.

சமீபத்தில் இத்திரைப்படத்தின் டூயட் பாடலின் ஒளிப்பதிவு சென்னையில் நடைபெற்றது. இப்பாடலை பாட பாடகி விதுசாயினி பரமநாதன் பிரத்தியேகமாக கனடாவிலிருந்து வரவழைக்கப்பட்டார். இவர் 2019ஆம் ஆண்டு ஏ.ஆர். ரஹ்மான் நிகழ்த்திய லைவ் இன் கான்செர்ட் நிகழ்ச்சியில் பாடுவதற்காக சென்னைக்கு வரவழைக்கப்பட்டார். இவர் இளைய தளபதி விஜய் நடித்த பிகில் திரைப்படத்தில் “மாதரே...” எனும் பாடலை சின்மயியுடன் இணைந்து ஏ.ஆர். ரஹ்மான் இசையில் பாடியுள்ளார். அதன்பிறகு 2022ஆம் ஆண்டு “கொத்தங்கோடு பங்களா” திரைப்படத்தில் பாடுவதற்காக வரவழைக்கப்பட்டு இருக்கிறார்.

இப்பாடல் குறித்து இசையமைப்பாளர் விது பாலாஜியிடம் கேட்டபோது இந்த பாடல் ஒரு வித்தியாசமான காதல் பாடல். இதற்கு வசீகரமான ஒரு குரல் தேவைப்பட்ட காரணத்தினால் நானும் இயக்குனரும் கலந்து உரையாடி இவரை கனடாவில் இருந்து வரவழைத்தோம். இந்தியாவிலேயே 50க்கும் மேற்பட்ட இசைக் கருவிகளை வாசிக்கக்கூடிய ஒரே மகத்தான இசைக்கலைஞர் இப்பாடலின் பின்னணி சேர்திருப்பது மற்றும் ஒரு சுவாரசியமான நிகழ்வு.

இத்திரைப்படத்தில் நாயகன் விது பாலாஜிக்கு இரண்டு கதாநாயகிகள். ஒருவர் கொல்கத்தாவில் பிரபலமான மாடலும், மற்றொருவர் தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக திகழ்ந்து கொண்டிருப்பவர். இத்திரைப்படத்தின் இயக்குனர் மற்றும் தயாரிப்பாளர் கலாச ஜே. செல்வம் அவர்கள் இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜாவிடம் 15 ஆண்டுகளாக ஒலிப்பதிவாளராக இருந்தவர். அதனால் யுவனின் ஆசி பெற்று இத்திரைப்படத்தை துவங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.



25th YEARS ANNIVERSARY
Cell tel Mobility
Cell Tel Mobility
For All Your Cellphone And Accessory Needs.....
Shop Online: www.celltelmobility.com
We Sell New & Used Cellphones and Accessories For:
Rogers Wireless, Fido,Telus Mobility, Bell Mobility, Mobilicity, Public Mobile, Freedom Mobile, Koodo Mobile And Chatr Wireless
25 th Anniversary Special
Samsung S22, S22+ and S22 Ultra Cases
From $0.99
Offer is valid from 1st through August 31th, 2022. One Coupon per family. Customers must bring coupon to get the offer. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility reserves the right to terminate the offer at any time without notice.
25 th Anniversary Special
Car Lighter + 2USB
From $0.49
Offer is valid from 1st through August 31th, 2022. One Coupon per family. Customers must bring coupon to get the offer. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility reserves the right to terminate the offer at any time without notice.
25 th Anniversary Special
iPhone 13, mini, Pro and Pro Max cases.
From $0.99
Offer is valid from 1st through August 31th, 2022. One Coupon per family. Customers must bring coupon to get the offer. The coupon must be redeemed during the valid redemption period. Cell Tel Mobility reserves the right to terminate the offer at any time without notice.
25 TH ANNIVERSARY SPECIAL
Car & Home Charger
Leather & Clear Case
Headsets
Memory Card
Bluetooth Headsets
Bluetooth Mirror
Data Cable
Batteries
WE ARE YOUR ONE-STOP SOLUTION!
Call Toll Free: 1-866-439-9396
416-891-1234
SINCE 1997
45 Karachi Dr, Unite 49
Markham Rd/ 14th Ave
905-201-4859
5C-2950 Birchmount Rd
Birchmount Rd/ Finch Ave
416-495-7776
2611 Eglinton Ave East,
Eglinton Ave/ Midland Rd
416-266-6818

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com






Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS
"Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1376 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 19, 2022

# கனடாவின் Mr. Tamil Canada அமைப்பு Mr. Tamil International என்ற பெயரில் விரிவாக்கம் பெறுகின்றது




கனடாவின் **Mr. Tamil Canada** அமைப்பு **Mr. Tamil International** என்ற பெயரில் விரிவாக்கம் பெறுகின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை அண்மையில் அறிவித்தது. இதனை அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் அவர்கள் கனடாவில் கடந்த 6ம் திகதி நடைபெற்ற மாபெரும் இசைப் பெருவிழாவில் பெருமையுடன் அறிவித்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக கனடாவில் இயங்கி வரும் **Mr. Tamil Canada** அமைப்பு எமது மக்களிடையே மன அழுத்தத்தினால் அதிகரித்து வரும் தற்கொலைகளை தடுக்கும் முகமாகவும் அதுபற்றி மக்கள் புரிந்து கொள்ளும்வகையிலும் "பேசா பொருள் பேசுக" என்கின்ற வாசகத்தினை மையமாக வைத்து பல நிகழ்வுகளை நடாத்தி வருவதை நீக்கல் அனைவரும் அறிந்ததே. இந்த மக்களின் புரிந்துணர்வு கனடாவையும் தாண்டி தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற பல நாடுகளுக்கும் எடுத்து செல்லப்படவேண்டிய தேவையோடு மட்டுமன்றி, உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் ஓர் மிகப்பெரிய தொடர்பு கொண்ட சமூகமாக எமது இனத்தை உருவாக்கவேண்டும் என்ற நோக்கோடு **Mr. Tamil International** என்கின்ற பெயர் கொண்டு 2022ம் ஆண்டு முதல் வளர்ச்சி கண்டுள்ளது. அத்துடன் "தமிழால் இணைவோம், தலை நிமிர்த்து தமிழராய் வாழ்வோம்" என்கின்ற கருத்தை மையமாக வைத்து செயற்பட ஆரம்பித்துள்ளது. இந்த நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பினை திரு. குலா செல்லத்துரை ஏற்றுள்ளார். அடுத்த ஆண்டு உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் வர்த்தக நிறுவனங்களை ஒன்றிணைத்து மிகப் பிரமாண்டமாண்டமான உலக வர்த்தக கண்காட்சி ஒன்றினையும் கனடாவில் ஒழுங்கு செய்ய தீர்மானித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**LJI Arjune**

# சுவிற்சலாந்தில் 'தமிழீழ வெற்றிக்கிண்ணத்திற்கான' கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றி வாகை சூடிய கனடிய தமிழர் விளையாட்டுத்துறை அணிகள்



சுவிற்சலாந்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழர் விளையாட்டு அணிகள் பங்கெடுத்த 'தமிழீழ வெற்றிக்கிண்ணத்திற்கான' கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றி வாகை சூடிய கனடிய தமிழர் விளையாட்டுத்துறை அணிகள் நாடு திரும்பியுள்ளனர்.

தமிழீழத்தின் தேசியத் தலைமையினால் 2001ம் ஆண்டு சுவிற்சலாந்தில் ஆரம்பிக்கப்பெற்ற இந்த வெற்றிக் கிண்ணப் போட்டியில முதலாவது வெற்றிக் கிண்ணத்தையும் கனடியத் தமிழர் கால்பந்தாட்ட அணி அப்போது தனதாக்கிக் கொண்டுத. அதன் பின்னர் கடந்த ஆகஸ்ட் 13ம் 145ம் திகதிகளில் நடைபெற்ற 'தமிழீழ வெற்றிக்கிண்ணத்திற்கான' போட்டியில் மூன்று பிரிவுகளில் கனடிய தமிழர் கால்பந்து அணியினர் வெற்றி பெற்றும் வெற்றிக்கிண்ணங்களை தமதாக்கிக் கொண்டனர். (உள்ளே விபரமான செய்தியும் படங்களும் 21ம் பக்கத்தில்)

# 'சிற்பி கல்வி' நிலையம் சிறப்பாக ஏற்பாடு செய்த 'வெயிலோடு விளையாடு' விளையாட்டுப் போட்டி





ஸ்காபுறோவில் சிற்பி கல்வி நிலையம் சிறப்பாக ஏற்பாடு செய்த 'வெயிலோடு விளையாடு' வெளிக்கள விளையாட்டுப் போட்டி வெற்றிகரமாக இடம்பெற்றது

சிற்பி கல்வி நிலையமானது, தமிழ் மொழி மற்றும் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கு புகுத்த வேண்டும் என்ற நம்பிக்கையில் நிறுவப்பட்டது. அத்துடன் கலாச்சார விழாக்கள், போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் நமது தமிழ்ச் சமூகம் ஒன்று கூடி பங்கேற்பதற்கான ஒரு தளத்தை உருவாக்குவதே கல்வி நிலையத்தின் குறிக்கோளாக இருந்துத. இந்த வகையில் அண்மையில் இந்த கல்வி நிலையம் நடத்திய **SITPI's SUMMER MEET** – 'வெயிலோடு விளையாடு', என்னும் பெயரோடு நடத்தப்பெற்றது. இந்த விளையாட்டுப் போட்டிகளின் வேடிக்கை மற்றும் போட்டித் தன்மையை நமது இரண்டாம்/மூன்றாம் தலைமுறைக் குழந்தைகள் அனுபவிக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. எங்களின் முதல் தலைமுறை தமிழ் பெற்றோர்கள்/ விருந்தினர்கள் போட்டியாளர்களை உற்சாகப்படுத்தியபோது அவர்களின் தாயக விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய நாட்களின் நினைவுகளை மீட்டெடுக்கும் வாய்ப்பு கிடைத்ததுஇ என்றே கூறவேண்டும்.

இந்தப் போட்டியில் மாணவர்களை 3 இல்லங்ளாகப் பிரித்து அவர்களுக்கு இடையில் போட்டிகளை நடத்தியும் பாரம்பரியக் கொடியேற்றும் விழா, தண்ணீர் பந்தல்/ நீரேற்றம் செய்யும் நிலையம், மோர் (புத்துணர்ச்சியூட்டும் காரமான தயிர் பானம்) மற்றும் நெல்லிரசம் ஆகியவற்றை வழங்கிய உண்மையான நிகழ்வை கல்வி நிறுவனத்தினர் நடத்தி, விருதுகளுடன் நிகழ்வை சிறப்பாக நிறைவு செய்தார்கள். தகவல்: சிந்து (647)-209-7449

**LJI Arjune**

## விசேட கட்டுரை உள்ளே...

# புலம் பெயர் தமிழர்களின் கவனத்திற்கு! வாசுதேவன் பேசுகின்றார்

## கொழும்பிலிருந்து மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ் அவர்களின் பார்வையில்



– 'அகப்பை அவன் கையில்'
இன்றும் அதே நிலைதான் மாற்றமின்றி தொடர்கின்றது.

புலம்பெயர் தமிழர்கள் மீதான தடை நீக்கம் குறித்த விடயம் பேசுபொருளாக உள்ளது.

இந்தத் தடை நீக்கத்தின் மூலம் தடை நீக்கப்பட்ட புலம் பெயர் அமைப்புகள் சாதிக்க கூடியது என்ன? இதன் மூலம் தமிழ் மக்கள் அடைந்து கொள்ளக் கூடிய அனுகூலங்கள் என்ன?

(உள்ளே விபரமான கட்டுரை 13ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker